
கல்கி
KALKI 9-6-1974 50 காசு


இனிக்கும்
எண்ணங்கள்





சுவை நிறைந்தது.
மணம் மிகுந்தது.
தாகம் தணிப்பது.
உற்சாகம் அளிப்பது.
புதுவேகம் தருவது.

கோல்ட் ஸ்பாட்*
கலந்துரையாடும் போது
கலகலப்பூட்டுகிறது—
விருந்துகளில்
வரவேற்புகளில்
அவைக்குச்
சுவையூட்டுகிறது!


கூடும் இடங்களில்
குதூகலம் கும்மாளமிட,
கொண்டு வருவீர்
கோல்ட் ஸ்பாட்!



Gold Spot

* ரெஜிஸ்டெர்ட் டிரேட் மார்க்.
ஆரஞ்சு சுவை மணக்கும்
'கோல்ட் ஸ்பாட்' அனுமதிக்கப்பட்ட
மணமும் காப்பு இரசாயனங்களும்
அடங்கியது.

AIYARS-PB.3 TH



பி. எஸ். எம்.



"எங்கள் வீட்டு நாய் என் மனைவியின் வைர க்ருத்திரயை விழுங்கிவிட்டது. ஆபத்தாகிடுமோன்னு பயமாயிருக்கு!"

"பாவம், மிருக வைத்தியரிடம் அழைத்துப் போவதுதானே?"

"அட சட்! நாய்க்கு வரும் ஆபத்தைச் சொல்லலேங்காணும். இன்னொரு மூக்குத்தி வாங்கும்படி ஆகிவிடுமே அந்த ஆபத்தைச் சொல்கிறேன்!"



"கச்சேரியில் வளவள என்று உரக்கப் பேசும் பெரியவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் அழுது சத்தம் போடும் குழந்தைகளை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்."

"என்ன அதிசயம் ஐயா இது?"

"சத்தம் போடும் குழந்தைகளை வெளியே அழைத்துக் கொண்டு போய்விடலாம். பெரியவர்களை என்ன செய்வது?"

கார் ரேஸில் தந்தையும் மகனும்!


ஜான்சனின் தந்தை பைபிளின் மீது ஆணையிட்டுச் சொல்கிறார், தமது மகன் ஆறாவது வயதில் காரோட்டியதாக. அவன் தந்தையின் ஸ்போர்ட்ஸ் காரை ஓட்டிக் கொத்தனுக்கு வேலை வைத்து விட்டான்! கார், ஷெட்டின் பெரும் பகுதியைச் சேதமாக்கிவிட்டது! இது நடந்தது பதினேழு வருஷங்களுக்கு முன்பு.

இன்று அதே ஆசாமி மோட்டார் ரேஸில் பெரும் புள்ளி!

தந்தையும் மகனும் மேற்கு ஜெர்மனியில் கார் ஓட்டப் போட்டியில் பிரசித்தி பெற்றவர்கள். மகனுக்குத் தந்தையே குரு, நண்பர், மோட்டார் ரேஸ் தோழர்!

அரசன் அளித்த பரிசு!

ஓர் அரசன் பெரிய பாறாங் கல்லை நடு வழியில் வைத்துவிட்டு, அதை யார் அப்புறப்படுத்துகிறார்கள் என்று ஒளிந்திருந்து பார்த்தான். பல்வகை மனிதர்கள் அந்தப் பாறாங் கல்லைச் சுற்றிச் சுற்றிப் போய்க் கொண்டிருந்தார்கள். யாருக்கும் அதை அப்புறப்படுத்த மனமில்லை. ஒரு சாதாரண மனிதன் காய்கறி விற்கக் கூடையைச் சுமந்து கொண்டு வந்தான். தன் தலையில் உள்ள கறிகாய்க் கூடையைக் கீழே வைத்து விட்டு, அந்தக் கனத்த கல்லை உருட்டி ஓரமாய்த் தள்ளினான். அந்தப் பாறாங்கல்லுக்கு அடியில் பல தங்க நாணயங்கள் அடங்கிய பை இருந்தது.




பலேஸான்கா!

இந்த விளையாட்டை விளையாட மூன்று கறுப்புக் காய்களும் மூன்று வெள்ளைக் காய்களும் தேவை.

இப்படி ஒரு படம் வரைந்து கொள்ளவும். மேஜைப் பலகையைக் கவிழ்த்துச் சாக்பீஸினால் வரையலாம்.

உங்களோடு விளையாட ஓர் ஆளைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இருவரும் மாறி மாறி ஒவ்வொரு காயாக வட்டத்தில் வைத்து வரவேண்டும். ஆறு காய்களும் கீழிறங்கும் வரை இப்படி ஆடலாம். பிறகு இருவரும் மாறி மாறி ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்துக்குக் கோட்டின் மீதாகக் காயை நகர்த்தி ஆடலாம். ஒவ்வொரு தடவையும் ஒரே ஒரு காயை அடுத்த ஒரு வட்டத்துக்குத்தான் நகர்த்தலாம் (எந்தக் கோட்டின் மீதாகவும்). யார் முதலில் மூன்று காய்களை ஒரு நேர்க் கோட்டில் நகர்த்தி வைக்கிறாரோ (எந்தத் திசையிலிருந்தாலும் சரி) அவரே வெற்றி பெற்றவர். இந்த விளையாட்டு பொழுது போக ரொம்ப உதவியாக இருக்கும். அதோடு மனைவியுடன் ஆடினால் நலங்கு ஞாபகம்கூட வந்து உற்சாகம் மீந்துக் கொண்டு போகும்!

உங்கள் வோட்டு எங்களுக்கே!



(விடை 54ம் பக்கம் பார்க்க)


எங்கள் பேட்டையின் வரைபடம் இது. தலைமைத் தக் கட்சியின் தலைமை அலுவலகம் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிருந்து தலைவர் லஞ்சாபகேசர் கால்நடையாகப் புறப்பட்டுப் பேட்டையிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் போய்த் தமக்கு வோட்டளிக்குமாறு கேட்டு விட்டு வர வேண்டும். ஒரு முறை போன பாதையிலேயே மீண்டும் திரும்ப அவருக்குச் சோம்பல். எங்கே அவருக்கு வழி காட்டுங்கள் பார்க்கலாம்!
குறிப்பு: அவர் கட்சித் தலைமையகத்துக்குத் திரும்ப வேண்டாம்.



''ஐந்து லட்சம் சொத்துள்ள பெண்ணை நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயாமே?''
''ஆமாம்!''
''காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னாயே!''
''ஆமாம், இப்போதும் அப்படித்தான்..... பணத்தை மனமாரக் காதலிக்கிறேன்!''

'மொஸைக்' சரித்திரம்!

வீட்டில் தரைக்கு 'மொஸைக்' கல் பதித்தால் நன்றாயிருக்குமே என்று ஆசைப்படுகிறோம். இந்த மொஸைக் கற்களை முதலில் அம்பலத்துக்குக் கொண்டு வந்தவர்கள் மத்திய தரைக் கடல் பிரதேச மக்கள். கி.பி.300—301 ஆண்டிலேயே மொஸைக் கலை பிறந்து வளர்ந்து வந்திருக்கிறது. ரோமானியர்கள் காலத்தில் சிரியாவிலிருந்து ஸ்பெயின், ஆப்பிரிக்காவிலிருந்து பிரிட்டன் என்று பல தேசங்களுக்குக் 'குடி'பெயர்ந்தது. பலப்பல கிறிஸ்துவப் புனித இடங்களை மொஸைக் அழகு படுத்தியிருக்கிறது.



என்ன பிரசித்தமோ?

1953 ஜூன் 2ந் தேதி உலகப் பிரசித்தி பெற்றது. எதனால் தெரியுமா? உலகப் பிரசித்தி பெற்ற தேதியானாலும் எதனால் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் தலைகுனிவு. எனவே மேலே படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்:
இரண்டாம் எலிஸபெத் முடி சூடிய நன்னாள். இந் நன்னாளிலே தான் லண்டனுக்கு எவரெஸ்ட் சிகரத்தை நியூஸிலாந்துக்காரர் எட்மண்ட் ஹில்லாரி சென்றடைந்த நற்செய்தி கிடைத்தது. அன்று ஐ. நா. சபை, பிரிட்டன், நேபாளம், இந்தியா ஆகியவற்றின் கொடிகள் எவரெஸ்ட் உச்சியில் பட்டொளி வீசிப் பறந்தன.



ஆள் குள்ளம், கீர்த்தி பெரிது!

''உலகத்திலேயே மிகப்பெரிய சண்டைக் கப்பலைக் கட்டியது யார் சொல்லுங்கள், பார்க்கலாம்!''
தெரியவில்லையா? மிகக் குள்ளமானவர்கள் என்று பெயரெடுத்த ஜப்பானியர்தாம் பிரும்மாண்டமான போர்க் கப்பலைத் தயாரித்தனர்.
அவர்கள் தயாரித்த போர்க் கப்பல் 'யமடோ' 72,000 டன் எடை கொண்டது. 1945 போரில் அமெரிக்க விமானங்களின் ஏழு மிகப் பெரிய குண்டு வீச்சுக்களைச் சமாளித்துத் தப்பித்துக் கொண்டது. பன்னிரண்டு தடவை 'டார்பிடோ'க்களுக்கும் தப்பியது. இந்த 'யமடோ' போர்க் கப்பல் யமகாதகக் கப்பல்தான் இல்லையா!



ravikunj
BELAIR
Shafalee
தாவண்கெரே
துணிவகைகள்

கல்கி

இந்த இதழில்...



ஆனந்த, வைகாசி 26
ஜூன் 9, 1974

★

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

'' ஒட்டும் இரண்டுளத்தின்
தட்டில் அறிந்தேன் '' - பாரதியார்

வண்ண அட்டை: மாடர்ன் போட்டோ பிளாஷ்

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00




திருச்சூர், சீதாராம் வேர் ஹவுஸ், ஸ்ரீ T. B. ராமச்சந்திர அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி **கண்ணனுக்கும்** பம்பாய் ஸ்ரீ P. R. கிருஷ்ண அய்யர் குமாரத்தி சௌபாக்கியவதி **ராதாவுக்கும்** சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !



லண்டன், ஏர் இந்தியா, கார்கோ சர்வீஸ் மானேஜர் ஸ்ரீ P. S. S. மணி அவர்கள் குமாரத்தி சௌ. **கிரிஜா மணிக்கும்,** ஸ்டேன்ஸ்குரூப் தென் இந்தியா, சேர்மன் ஸ்ரீ M. S. ராமசுவாமி அவர்கள் குமாரர் Dr. **முரளி** M.D., (உதவி புரொபஸர் ஆப் மெடிஸின், மதராஸ் மெடிகல் காலேஜ்)க்கும் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்



கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 45

வேலைநிறுத்தம் விளைத்த சிந்தனை

நாட்டின் பொருளாதார நிலைமை சம்பந்தமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானங்களில் பிரத்யட்ச நோக்கும், பலனளிக்கக்கூடிய அம்சங்களில் அதிக கவனம் செலுத்தும் மனப்பான்மையும் காணப்படுகின்றன. இவை வரவேற்கத் தக்க மாறுதல்களாகும்.

உணவு நெருக்கடியைச் சமாளிக்கக் கமிட்டி கூறியுள்ள யோசனைகள் முக்கியமானவை. விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணம் போதிய அளவு உணவு தானியங்கள் கிடைக்காமை என்பதை உணர்ந்து அதற்காக இறக்குமதியை அவசியமான அளவுக்கு அனுமதிக்க வேண்டும், என்று வலியுறுத்தியுள்ளது. முப்பது லட்சம் டன்கள் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்று அது செய்துள்ள மதிப்பீடு குறைவாக இருக்கலாம். ஆனால் இறக்குமதியை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கக் கூடாதென்பதையும் உணர்ந்து உற்பத்தி பெருகுவதற்கு அடுத்த மூன்றாண்டு காலத்துக்குத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அது வற்புறுத்துவது நல்ல யோசனை. கால தாமதமின்றிப் பலன் தரக்கூடிய சில உணவுத் துறைத் திட்ட இனங்களில் அதிக கவனம் செலுத்தவும், மாநில அரசுகளுடன் கொள்முதல் விஷயத்தில் இணைந்து செயலாற்ற வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் காட்டிக் கொள்முதல் நடவடிக்கைகளை இணக்கமாக மேற்கொள்ளவும் சிபாரிசு செய்திருக்கிறது. காங்கிரஸின் ஏகபோகக் கொள்முதல் நடைமுறையில் தோல்வியடைந்துவிட்டதை முழுமையாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும், ஓரளவு அதைத் தளர்த்த முன்வந்திருப்பது நல்ல அறிகுறியேயாகும்.

ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை உறுதியாக நின்று சமாளித்தது குறித்து இந்திரா காந்தி அரசாங்கத்தைப் பாராட்டியிருக்கிறது. இருபது நாட்கள் நடந்த வேலைநிறுத்தம் உணர்த்தியுள்ள உண்மைகள் சில : (1) ரயில்வே ஊழியர்களில் பெரும்பான்மையினர் — வேலைநிறுத்தத்தை விரும்பவில்லை. (2) தலைவர்களின் போக்கும் பிடிவாதங்களும் ஊழியர்களிடம் அவர்களுக்கிருந்த செல்வாக்கைக் குறைத்து விட்டன. (3) வேலைநிறுத்தத்தினால் நாட்டுக்கு நஷ்டம் ஐந்நூறு கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை உண்டாக்கிய தலைவர்களிடத்தும் ஊழியர்களிடத்தும் பொதுமக்களுக்கு அனுதாபம் எப்படியிருக்கும்? இந்த நஷ்டங்களையே வெற்றி எனக் கருதும் தலைவர்களைத் தேசத் துரோகிகளாகவே கருத வேண்டும். இந்த உண்மைகளை எல்லாத் தரப்பினரும் உணர்ந்து இனிமேல் வேலைநிறுத்தங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்வது விவேகமாகும்.

ரயில்வே வேலை நிறுத்தம் வலியுறுத்தியுள்ள ஒரு பிரச்னை — சம்பள விகிதமும் அதன் அடிப்படை ஒழுங்கும் விதிகளும். ஒவ்வொரு துறையிலும் சம்பளங்களும் ஊதியங்களும் அந்தந்த மட்டங்களில் பேச்சு வார்த்தைகள் மூலம் நிர்ணயித்து மாற்றிக் கொள்ளப்படுகின்றன. இதனால் ஒரே தரமுள்ள வேலைக்கு அரசாங்கத்தின் பல இலாகாக்களில் வெவ்வேறு ஊதியங்கள் தரப்படுகின்றன. மற்றத் துறையினருடன் சமசீரான ஊதியம், சம்பளம் என்று ரயில்வே தொழிலாளர்கள் சார்பில் எழுப்பப்பட்ட கோரிக்கையினால் தேசம் முழுவதற்கும் ஊதிய — வருமான நிர்ணயக் கொள்கை வகுப்பதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்னை சில ஆண்டுகளுக்கு முன்பே டாக்டர் மதன் தலைமையில் பரிசீலிக்கப்பட்டு ஓர் அறிக்கை கூடச் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனால் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த அறிக்கையில் விவாதிக்கப்பட்டுள்ள அம்சங்களில் பல இப்போதுள்ள மாறுபட்டுள்ள சூழ்நிலையிலும் பொருத்தமுடையனவே. தவிரவும், தேசிய வருமான— ஊதியப் பிரச்னை எளிதில் தீர்க்க முடியாதது. வருமானத்தையும் ஊதியத்

தையும் ஓர் அளவில் கட்டுப்படுத்துவது சாத்தியமல்ல. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாமல், வருமான — ஊதியங்களை மட்டும் கட்டுப்படுத்தப் பார்ப்பது தவறான நடவடிக்கை என்றே சொல்லலாம். எனினும் இந்தப் பிரச்னை மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதும் காங்கிரஸ் கட்சியின் பிரத்தியட்ச நோக்குக்கு ஓர் உதாரணமாகும்.

உற்பத்திப் பெருக்குக்கு அதிக கவனம் செலுத்துவதில் உணவுப் பொருள்களைப் போலவே தொழில் துறையும் முக்கியமானது என்பதையும் காங்கிரஸ் உணர்ந்துள்ளதை வரவேற்க வேண்டும். உற்பத்தித் துறையிலும் ஊழியர்களின் ஊதியங்களும் உற்பத்தித் திறமையும் சம்பந்தமுள்ளதாக இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதும் பாராட்டுக்குரிய அம்சமாகும்.

ரயில்வே வேலைநிறுத்தம் வாபசான பிறகு பிரதமரின் செல்வாக்கு உயர்ந்திருக்கிறது. இதை அவர் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத் துறையில் வறட்டுச் சித்தாந்தங்களைக் கைவிட்டுச் செயல்பட்டால் நாட்டின் பொருளாதாரம் முன்னேறும்.

என்ன சேதி?

முதல்வரின் முரண்பாடுகள்

ஜனநாயக நாட்டில் யார் வேணுமானாலும் அமைதியான முறையில் எதற்கு வேணுமானாலும் போராடலாம். ஆயினும் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு வரன்முறை கொள்கை என்பதுண்டல்லவா? இந்தச் சந்தர்ப்பத்தில் முதல்வர் கட்சிக் கட்டுப்பாடு என்பதாக ஒன்றிருப்பதை வசதியாக மறந்து போனது அவரது துரதிருஷ்டம். கட்சிக் கட்டுப்பாடு என்று கூறி மதி மந்திரிகளை நீக்கவும் திரும்ப அவர்களையே அழைத்து உயர் பதவிகளைக் கொடுக்கவும் துணிவும் செல்வாக்கும் உள்ள முதல்வர், தமது கட்சிக்காரர்கள் 'மலையாளிகளே வெளியேறுங்கள்' என்று கூச்சலிட்டுக் கொண்டு செல்லும் ஊர்வலத்தில் சேரக் கூடாது என்று ஏன் கூறவில்லை?

அவர்களை ஊர்வலம் நடத்த அனுமதித்த பிறகு, 'எதிர்க்கட்சியினர் அநாகரிகமாக நடந்து கொண்டாலும்கூட ஏட்டிக்குப் போட்டி என்பது போல் யாரும் செயல்படுவதைத் தமிழக அரசு அனுமதிக்காது' என்று கூறுவது குழந்தையைக் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது போல்தான்.

இன்னுமொரு முரண்பாடும் முதல்வரின் அறிக்கையில் உள்ளது. 'சிறுபான்மையினருக்கு இங்கே முழு பாதுகாப்பு அளிக்கப்படும்' என்று அழகாக உறுதி கூறிய கையோடு, 'தமிழ் நாட்டில் தமிழருக்கே என்பது சதவீத வேலை வாய்ப்புக்கள்' என்றும் சொல்லியிருக்கிறார். அப்புறம், "இந்த மண்ணின் புதல்வர்கள்" என்ற கொள்கையைத் தாம் ஏற்கவில்லை என்பதாகவும் பேசுகிறார். முதல்வர் குட்டையைக் குழப்புவதிலும் முதல்வர்தான்!

வேறு ஒரு மாநிலத்தில் அந்த மண்ணின் புதல்வர்களுக்கே அதிக வேலை வாய்ப்பு என்ற தவறான கொள்கை கடைப்பிடிக்கப்படுவதால் தாமும் அதே தவற்றைச் செய்ய உரிமை பெற்றுவிட்டதாக ஆகாது.

அண்ணாசாலையில் நடந்த ஊர்வலமும், கல்லெறிதலும் கேரளத்தில் யாவரும் எதிர்பார்க்கக்கூடிய வேண்டாத விளைவுகளை உண்டாக்கியுள்ளன.

தமிழர்களைக் காக்க உருவானதாக வர்ணிக்கப்படும் கூட்டணி தமிழர்களின் கௌரவத்தைக் காக்கவில்லை.

கையெழுத்துக் கோரும் ஒப்பந்தம்

இந்தியாவின் அணு வெடிச் சோதனை குறித்துக் கவலை தெரிவித்து வெளியாகியுள்ள பல அறிக்கைகளுள் பிரிட்டிஷ் வெளி விவகார மந்திரி டேவிட் என்னல்ஸ் கூறியுள்ளது நமது கவனத்தை வெகுவாகக் கவர்கிறது.

அணு ஆயுதங்கள் பரவுதலைத் தடுக்க ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இந்தியா இன்னமும் கையெழுத்துப் போடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அவர் மேலும் கூறுகிறார்:

"அணு வெடிகளை அமைதிப் பணிக்குப் பயன்படுத்துவது பற்றிய விஞ்ஞான நுணுக்கங்களை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகள் பெறுவது சாத்தியமே. அதற்கான ஷரத்து ஒப்பந்தத்தில் இருக்கிறது. எனவே, இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அணு வெடிச் சோதனை — அது எந்தக் காரணத்துக்கானாலும் — நடைபெற வேண்டும்."

அமைதிப் பணிக்கு மட்டுமே அணுவெடிச் சோதனை நடத்துவதாக இந்திரா அரசு கூறுவது நூற்றுக்கு நூறு உண்மையென்றால் அணு ஆயுதங்கள் பரவுதலைத் தடுக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாம் ஏன் தயங்க வேண்டும்?

'வல்லரசுகள் அணு ஆயுதங்களைச் செய்து குவிக்கவும் மற்ற நாடுகள் அவற்றைத் தயாரிக்காமல் தடுக்கவுமே இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது; இது சம நீதியல்ல' என்பது ஒரு வாதம்.

இதில் உண்மை இருக்கிறது என்றாலும் அணுகுண்டுகள் தயாரிப்பு எந்த அளவுக்குக்


உணவைக் கேட்டால் அணுவைத் தருங்களே!


கிஸ்ஸிஞ்ஜர்
சிரியா
இஸ்ரேல்

ராஜாஜி சிந்தனை

வெயிலினால்தான் நிழல் உண்டாகிறது. ஆனபோதிலும் நிழல் பொய்யல்ல, உண்மையே. உடலை உண்மையாகக் காண்கிறோமாயினும் உடலுக்கு உயிரும் உண்மையும் தருவது கண்ணுக்குக் காணாத உயிரே அல்லவா? ஆன்மா இன்றி உடல் உயிரற்ற சவமாகிவிடும். அதைப் போலவே ஈசன் எல்லா உயிர்களுக்கும் உயிராகி நிற்கிறான். உடலுக்குள் நிற்கும் ஆன்மாவுக்குப் பரம்பொருளே இன்றியமையாத அந்தராத்மா. ஆகவே உயிர்களெல்லாம் பரமாத்மாவுக்குத் திவ்விய சரீரங்கள். சர்வ வியாபகமான பரம்பொருளுக்கு உலகம் முழுவதும் ஒவ்வொரு தனிப் பொருளும் சரீரமாகும். அனைத்தும் சேர்ந்து பரமனுக்கு ஓர் அகண்ட சரீரமாகும். அவையே அவனுக்குத் தனித் தனியான சரீரங்களுமாகும். அந்தராத்மா இன்றி எல்லா உயிரும் வெறும் சவம் போலாகும். நீராவி, மின்சாரம், காந்தம், அணு சக்தி முதலிய இயற்கைச் சக்திகளுக்கும் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளே மூலாதாரம்.

கட்டுப்படுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கு உலகின் விநாசம் ஒத்திப் போடப்படுகிறது.

இந்திரா அரசு அமைதிப் பணி, அமைதிப் பணி என்று அலறினால் போதாது. இந்தச் சர்வ தேச ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டால் அணுகுண்டு தயாரிக்கும் நோக்கம் நமக்குச் சிறிதும் இல்லையென்று உலகறியப் பிரகடனம் செய்தவர்களாவோம். அதோடு, வல்லரசுகளை அணு ஆயுத உற்பத்தி செய்யாதீர்கள் என்று கூறிக் கட்டுப் படுத்தத் தார்மீக பலமும் பெற்றவராவோம்.


இரு பேனா மன்னர்கள்

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பிராங்க்மோரேஸ் இங்கிலாந்தில் காலமானார். அவர் பம்பாயில் பிறந்தவர். வக்கீல் தொழிலுக்குப் படித்தவர். பத்திரிகைத் தொழிலுக்கு ஆசைப்பட்டு வந்தவர். டைம்ஸ் ஆப் இந்தியா, இலங்கையில் சிலோன் டைம்ஸ், இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளில் ஆசிரியராகச் சிறப்போடு பணியாற்றியிருக்கிறார். இரண்டாவது போர் நிகழ்ந்த காலத்தில் போர்க்களத்துச் செய்திகளைத் தரும் நிருபராகப் பணியாற்றியிருக்கிறார். உலகைப் பன்முறை சுற்றி உலகத்துப் பல்துறைத் தலைவர்களைப் பரிச்சயம் செய்து கொண்டவர். பல புத்தகங்கள் எழுதியுள்ளார். ஜவாஹர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சுவைபட அரசியல் பின்னணியில் எழுதியிருக்கிறார். வாரா வாரம் யாருக்கும் அஞ்சாமல் நாட்டு நடப்பு விஷயங்களைப் பற்றி அவர் எழுதி வந்த கட்டுரைகள் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சிறந்த வழிகாட்டிகளாக இருந்து வந்தன. ஆனால் அவர் சொந்த வாழ்க்கை எவ்வளவு துயரம் தோய்ந்ததாய் இருந்தது என்பதை அவரது மகன் டாம் மோரேஸ் எழுதிய நூலிலிருந்து அறிய முடிகிறது. அவ்வளவு துயரத்தையும் உள்ளடக்கி நாட்டுக்குத் தம் எழுத்தால், பண்பான நடையினால் அரிய சேவை செய்து வந்த பிராங்க் மோரேஸ் போன்ற ஓர் ஆசிரியரை இனி எங்கே காணப் போகிறோம்!



பிராங்க்மோரேஸ்

டில்லி ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் நீண்ட காலம் பணியாற்றியதோடு பல அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் நேரில் பங்கு கொண்டவர் திரு துர்க்காதாஸ். அவர் தாம் பெற்ற அரிய அனுபவத்தின் பயனாகப் பாரதம் சுதந்திர நாடாகப் பரிணமித்த சரித்திரத்தை, ''கர்ஸான் முதல் நேரு வரையும், அதற்குப் பின்னரும்'' என்ற தலைப்பில் ஓர் அரிய நூல் எழுதினார். அது எடுத்த எடுப்பிலேயே பிரபல நூலாகி இப்போது மலிவுப் பதிப்பாகவும் வெளி வந்துள்ளது.



துர்க்காதாஸ்

சமீப காலத்தில் ஸர்தார் வல்லபாய் பட்டேலின் கடிதத் தொகுப்புகளை வெளியிடுவதில் ஈடுபட்டிருந்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்த காங்கிரஸ் மேலிடத்துத் தலைவர்களையும் அவர்களின் மன இயல்புகளையும் அன்றையச் சூழ்நிலைகளையும் நன்கு அறிந்தவரான துர்க்காதாஸைவிடப் பொருத்தமான ஒரு பதிப்பாசிரியர், பட்டேலின் கடிதங்களைத் தொகுத்து வெளியிடக் கிடைத்திருக்கமாட்டார். இப்பணி முடிந்து கடைசித் தொகுதி வெளியாகியது. அதன் முதல் பிரதியை நமது ராஷ்டிரபதிக்கு அனுப்பிய மறு நாளே துர்க்காதாஸ் இறைவனடி சேர்ந்தார். இதைப் பார்க்கும்போது, ரோம் சாம்ராஜ்ய வீழ்ச்சியைப் பற்றி வரலாற்று நூல் எழுதிய கிப்பனின் முடிவு நினைவுக்கு

வருகிறது. அவரும் அப்புத்தகத்தை எழுதி முடித்த மூன்றாவது மாதமே காலமானார்.

துர்க்காதாஸ் எடுத்துக் கொண்ட மகத்தான பணி முடிய இறைவன் காத்திருந்தார் போலும்!

மதுரமான மதுரம்

என். எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் இல்லாத தமிழ்ப் படமே இல்லை என்று கருதுமளவுக்கு ஒரு காலத்தில் அந்தத் தம்பதியின் செல்வாக்கு ஓங்கியிருந்தது. கதாநாயகன் கதாநாயகி போல் ஏன் சில சமயம் அதற்கு அதிகமாகக்கூட இந்த ஹாஸ்ய ஜோடிக்கு மதிப்பு இருந்தது. மிக மிகச் சாமானியமான, தோல்வி அடையக்கூடிய படங்கள்கூட என். எஸ். கே. — மதுரம் 'காமிக்'குக்காக ஓடியது. மக்கள் ஒரு முறைக்கு நாலு தடவையாகப் பார்த்தார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துப் புகழ்க் கொடி நாட்டிய இவர்களுக்கு இணையாக எந்த ஜோடியும் இன்றளவும் தோன்றவில்லை. இனி தோன்றுவார்களா என்பதும் சந்தேகம்.



டி. ஏ. மதுரம்

டி. ஏ. மதுரம் தமது ஐம்பத்தேழாவது வயதில், சென்ற மாதம் தமது காதல் கணவனின் இருப்பிடத்துக்குத் தாமும் போய்விட்டார். ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த மதுரம் 1936ம் ஆண்டில் ''வசந்த சேனை'' என்ற தமிழ்ப் படத்தில் முதன் முதலில் நடித்தார். அவரது முதல் படமே வெற்றிப் படம்! அத்துடன் முதல் படத்திலேயே என்.எஸ். கிருஷ்ணனுடன் சேர்ந்து நடித்தார்.

திரை உலகில் இணைந்து நடித்த இருவரும் வாழ்க்கையிலும் இணைந்து தம்பதிகளாயினர்.

என். எஸ். கிருஷ்ணனைப் போலவே டி.ஏ. மதுரமும் நகைச்சுவை ததும்பப் பேசுவதில் மிகவும் வல்லவர். வேறு யாரோ எழுதிக் கொடுத்த ஹாஸ்யத்தையல்லாது பலப் பல படங்களுக்குத் தாங்களாகவே நகைச்சுவைக் காட்சிகளைத் தயாரித்து அளித்தது என்.எஸ்.கே. தம்பதியின் தனிப்பெரும் சிறப்பு. அவர்களின் ஹாஸ்யம் யாவரையும் சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் வைத்தது; மக்களை மேம்படுத்தியது. யாரையும் புண்படுத்தாத சிறந்த ஹாஸ்யமும்கூட. சொந்தக் குரலில் அற்புதமாய்ப் பாடக்கூடியவர்கள் என்பது இந்தக் கலைஞர்களின் மற்றொரு சிறப்பு.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈகை உள்ளத்துடன் நல்ல காரியங்கள் பலவற்றுக்கு உதவியதைக் குறிப்பிட வேண்டும். கிருஷ்ணனின் மறைவுக்குப்பின் மதுரம் திரையுலகிலிருந்து விலகி வாழ்ந்தார். மதுரமான குண நலன்களைக் கொண்ட மதுரம் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்றாலும் என். எஸ். கே. தம்பதியைக் காலமானவர்களாக நாம் கருத முடியாது. நகைச்சுவை உணர்ச்சி மடியாதவரை அவர்களும் மடிந்தவர்களாக மாட்டார்கள்.

உழைப்பிஸம்

ருஷ்யாவிடமிருந்து வேண்டாத விஷயங்களையெல்லாம் ஜனநாயகத்துக்கு ஒவ்வாத கருத்துக்களையெல்லாம் கற்றுக் கொள்வதில் நாம் நிபுணர்கள். ஆனால் அவர்கள் உழைப்பின் பெருமையை உணர்ந்திருக்கிறார்களே, அதை நாம் புரிந்து கொள்ளமாட்டோம்!

ஏப்ரல் மாதத்தில் ஒரு விடுமுறை தினத்தன்று ருஷ்ய மக்கள் எல்லாரும் அலுவலகங்களுக்கும் தொழிலகங்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் போய் வழக்கம்போல் தத்தமது காரியத்தில் ஈடுபட்டார்கள். அதனால் 683 மிலியன் ரூபிள் பெறுமானமுள்ள பொருள்கள் உற்பத்தியாகிக் குவிந்தன. லெனினின் பிறந்த நாளையொட்டி நடைபெற்றது இந்த உழைப்புத்தானம். ஊதியமாகக் கிடைத்த இரு நூறு மிலியன் ரூபிள்களை ருஷ்யத் தொழிலாளர் பெருமக்கள் தாய் சேய் நலன் அபிவிருத்திக்கும் இதர பல நற்பணிகளுக்கும் வழங்கிவிட்டனர்.

லெனினிஸமும், மார்க்ஸிஸமும் இருக்கட்டும், உழைப்பிஸம்தான் அவர்கள் முன்னேற்றத்துக்கு முழு முதற் காரணம் — ஐயமில்லை.

இயந்திரக் கண் டாக்டர்!

உங்கள் கண்களைச் சோதிக்கும்.

உடனே ஒரு சீட்டையும் உங்கள் கையில் தந்துவிடும்.

நீங்கள் என்ன கண்ணாடி போட வேண்டும்?

சீட்டைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!

தானியங்கு புதுமை யந்திரம் செய்யும் அதிசயப் பணி இது.

1973ம் ஆண்டில் அமெரிக்காவில் தோன்றியுள்ள புதிய உபகரணங்களுள் சிறந்த ஒன்று இது.

கண் சோதனைக்கு வருபவர், தலையணை ஒன்றில் தலை வைத்து மல்லாந்து படுக்கிறார். இயந்திரத்தை இயக்குபவர் கருவியைக் கண்ணுக்கு நேரே கொண்டு வந்து ஒரு பொத்தானை அழுத்துகிறார்.

கருவி அவருடைய கண் மணியை ஆராய்கிறது. அவர், விசும் ஒளியைப் பார்க்கையில் கண்மணியின் அசைவுகளை மூன்று விநாடி பதிவு செய்கிறது. பின்னர் ஒரு விநாடி பார்வைக் கோளாறுகளை அளவிடுகிறது. இந்தத் தகவலை இயந்திரம் சேகரித்து வைத்துக் கொள்கிறது.

உடனேயோ அல்லது தேவையானபோதோ, தகவலை இயந்திரத்திடமிருந்து கட்டளையிட்டுச் சாதாரண 'பிரஸ்கிருப்ஷன்' நமூனாவில் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

'ஆட்டோ ரிஃப்ராக்டர்' என்பது இதன் பெயர்.





இப்போது!

நீடித்த அழகு
நவீன நாகரீக வசதி
இரண்டையும் உங்கள்
சமையலறைக்குச் சேர்ப்பது

ஹரால்ட்வேர்

சமைத்தவுடன் பரிமாறும் பாத்திரங்கள் உபயோகிப்பதில்
நீங்கள் பெருமையடைவீர்கள்!

ஹரால்ட்வேர்-சமையலறையானாலும் சரி சாப்பாட்டு மேசையானாலும் சரி...ஏற்றமிகு எழில் சேர்க்கும்.
நாகரீக இல்லத்தரசிக்கு உகந்த சமையலறைப் பாத்திரங்களின் சீர் வரிசை

ஹரால்ட்வேர்-கண்ணுக்கு-கட்டுறுதி வாய்ந்தது.
பல்லாண்டுகள் நீடித்து ஒளி சிந்தும் எழில் தோற்றம். கெட்டியான தூய அலுமினியத்தினால் செய்யப்பட்டது.

ஹரால்ட்வேர்-இதில் அதிகப்படி கனமுள்ள அடித்தளம் இருக்கிறது.
எனவேசூடு நன்றாகப் பரவுவதோடு நீண்ட நேரம் சூடாகவே வைத்திருக்கிறது.



ஹரால்ட்வேர்-இதில் ஸ்டாண்டாகவும் பயன்படும் மூடியிருக்கிறது. உங்கள் மேசையில் சூட்டுக்கறை படியாமல் காக்கிறது.
தேவைப்பட்ட போது, மூடியை ஸ்டாண்டாகவும் பயன்படுத்தலாம்.
ஹரால்ட்வேர் ரகம் ஃப்ரையிங் பேன்ஸ், சாஸ்பேன்கள், காஸரால்கள், கெட்டில்கள் பல சைஸுகளில் கிடைக்கும்.
எல்லாத் தருணத்திற்கும் ஏற்ற பரிசு.

IS:21
ISI
SIC
★ அலுமினியம் தரம் விதிகளுக் குட்பட்டது

தயாரித்துவிற்பனை செய்வோர்
லாலுபாய் அமிசந்த் பி லி.
225-27 ஜே தாதாஜி ரோடு,
பம்பாய் 400 007

மேலும் விவரமறிய உங்கள் ஹரால்ட்வேர் வியாபாரியை அணுகுக அல்லது ஹரால்ட்வேர் போஸ்டருக்கு எழுதுக.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள்
போபட் ஜமால் அண்ட் சன்ஸ் ஜமால் பில்டிங் 182, பிராட்வே சென்னை-600 001

Ratan Batra/LA/TM/04-AR

அம்பாள் இருக்க அகம்பாவம் ஏன்?



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள்

'**நா**ம் இதைச் சாதித்தோம், அதைச் சாதித்தோம்' என்று அகம்பாவப்படுவதற்குக் கொஞ்சம் கூட இடம் இல்லை. நாம் எதையும் சாதிப்பதற்கான புத்தியோ, தேகபலமோ எங்கிருந்து வந்தது? இந்தப் பிரபஞ்ச காரியங்கள் அனைத்தையும் செய்கிற ஒரு மகா சக்தியிடமிருந்தே நம்முடைய சக்தி யெல்லாம் வந்திருக்கிறது. அது இல்லாவிட்டால் நம்மால் ஒரு சுவாசம் கூட விட முடியுமா? ஒருநாள், இத்தனை சாதித்ததாக எண்ணிக் கர்வப்படுகிற நம்மை விட்டுச் சுவாசம் போய்விடுகிறது. அதைப் பிடித்து வைத்துக் கொள்கிற சாமர்த்தியம் நமக்குக் கொஞ்சம் கூட இல்லை. அப்போது நம் சக்தி எல்லாமும் சொப்பனம் மாதிரிப் போய்விடுகிறது. ஆனபடியால் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் கூட அம்பாளின் ஒரு சிறு துளி அநுக்கிரகத்திலேயே நடக்கிற காரியங்களை நம்முடையதாக நினைத்து அகம்பாவப்படுவது அசட்டுத்தனம்தான் என்று தெரியும். எத்தனைக் கெத்தனை இதை அநுபவத்தில் தெரிந்து கொண்டு அம்பாளுக்கு முன் ஒரு துரும்பு மாதிரி அடங்கிக் கிடக்கிறோமோ, அத்தனைக் கத்தனை அவள் அநுக்கிரகமும் அதிகம் கிடைக்கும்.


அவதார புருஷர்களாக வந்தவர்களும் இந்த அடக்கத்தை நமக்கெல்லாம் போதிப்பதற்காக ரொம்பவும் விநய சம்பத்தோடு வாழ்ந்து காட்டி யிருக்கிறார்கள். ராமசந்திர மூர்த்தி இப்படித்தான் தர்மத்துக்கும், சத்தியத்துக்கும், சாஸ்திரத்துக்கும் அடங்கி மநுஷ்யன் மாதிரியே நடந்து காட்டினார். அவருடைய விநயத்தை நினைக்கிறபோது எனக்குத் தோன்றுகிற ஓர் எண்ணத்தைச் சொன்னால் உங்களுக்கு விசித்திரமாக இருக்கும். எல்லாரும் ராமர் பிறந்த காலத்தில் நாம் பிறக்கவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள் அல்லவா? எனக்கோ நாம் அப்படிப் பிறக்காமல் போனதே நல்லதுதான் என்று இருக்கிறது. ஏன் தெரியுமா? ராமர் தாம் ஒரு க்ஷத்திரியர் என்பதால் வேத வித்துக்களையும், ரிஷிகளையும், ஆசாரியர்களையும் அடக்கத்தோடு விழுந்து விழுந்து நமஸ்கரித்தார். அவர் காலத்தில் ஒரு மடாதிபதியாக இருந்தால் அவர் வந்து நமஸ்கரிக்கும்படியாக ஆகிவிடும். அது எத்தனை தர்ம சங்கடமா யிருக்கும்? இப்போதோ அவரை நாம் நமஸ்காரம் செய்து சந்தோஷப்பட முடிகிறது.

எதற்குச் சொல்கிறேன் என்றால், சாட்சாத் நாராயணனான ராமசந்திர மூர்த்தி விநயமே வடிவமாக இருந்தார். அவதாரம் என்பதால் ஜனங்களுக்கு எட்டாத கொம்பிலே இருக்க வேண்டும் என்றில்லாமல் மநுஷ்யராகவே நடித்தார். பொதுஜனங்களுக்கு இருக்கிற துக்கம் கஷ்டம் எல்லாம் கூடத் தமக்கு இருக்கிற மாதிரி நடித்தார். சீதையைப் பிரிந்ததற்காக அழுதார். லக்ஷ்மணன் மூர்ச்சித்தபோது புலம்பினார். சமுத்திர ராஜனிடம் ரௌத்ராகாரமாகக் கோபம் கொண்டார். ஜனங்களுக்கு இவரும் தங்கள் மாதிரி ஒருத்தர் என்று பிடிமானம் உண்டாவதற்கே அவதார புருஷர்களும் கோபம், பயம், துக்கம் எல்லாம் வந்த மாதிரி ஒரொரு சந்தர்ப்பங்களில் காட்டிக் கொள்வார்கள். கை கால் ஆடுகிற மாதிரி மனசும் அதனுடைய சாதாரண சுபாவப்படி கொஞ்சம் ஆடிவிட்டுப் போகட்டுமே என்று விட்டுவிடுவார்கள். ஆனால் உள்ளூற இவர்கள் இந்த உணர்ச்சி பேதங்களால் பாதிக்கப்படாமல் சாந்தமாகவே இருப்பார்கள்.

ராமர் போலவேதான் நம் ஆதி சங்கர பகவத்பாதாளும். அவர்களைக் காட்டிலும் ஒரு பெரிய அவதாரம் இதுவரைக்கும் ஆவிர்பவித்தது உண்டா என்று சந்தேகம் உண்டாகிறது. பரமேசுவராவதாரமான ஆசார்யாள் சொற்ப காலமே இந்தப் பூமியில் வாழ்ந்தும், லோகம் முழுக்கச் சேர்ந்தாலும் செய்ய முடியாத காரியங்களைச் சாதித்து விட்டார். ஆசேது ஹிமாசலம் சஞ்சாரம் பண்ணித் தனியொரு மநுஷ்யராக இருந்து கொண்டு வைதிக மதத்தைப் புனர் உத்தாரணம் பண்ணினார். அத்வைத ஸ்தாபனம், ஷண்மத ஸ்தாபனம் எல்லாம் பண்ணினார். அவருடைய பாத பங்கஜத்தில் சகல ஞானிகளின் சிரசுகளும் வண்டுகள் மாதிரி மொய்த்துக் கொண்டு கிடந்தன என்று கம்போடியா தேசத்தில் உள்ள எண்ணூறு வருஷங்களுக்கு முற்பட்ட ஒரு கல்வெட்டு அழகான சம்ஸ்கிருதத்தில் சொல்கிறது:

> நிச்சேஷ மூர்த்தாலி மாலா லீடாங்க்ரி
> பங்கஜாத்

''பகவான்'' என்றே அவரை அக்கல்வெட்டு சொல்கிறது. அப்படிப்பட்டவர் அம்பாளிடம் எத்தனை அடக்கத்துடன் பக்தி செலுத்தினார் என்பது ஸௌந்தர்ய லஹரியின் கடைசி சுலோகத்திலிருந்து தெரிகிறது.



D.C.G.49 TH (R)



கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

வெண்மையான பற்களையும் ஆரோக்கியமான ஈறுகளையும் தூய்மையான இனிய மூச்சையும் பெற்றிடவே **கால்கேட் டூத் பிரஷ்களை** உபயோகியுங்கள்! உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு அமைய—16 ரகங்கள்.

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

நாற்பத்தோராம் அத்தியாயம்


பிழைத்த உயிர்

வராக நதியில் சென்று கொண்டிருந்த படகுகளையே சிவகாமி உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஆயனர் பின்னால் மூச்சு வாங்க ஓடிவந்தது யார் என்று திரும்பிப் பார்த்தார். குண்டோதரன் பின்னால் நிற்பதைக் கண்டு, ''அப்பனே! இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்?'' என்று கேட்டார்.

''அதை ஏன் கேட்கிறீர்கள், ஐயா! அக்கரைக்கு நான் போய்த் தளபதியிடம் மாமல்லர் இங்கே பத்திரமாயிருப்பதைத் தெரிவித்துவிட்டுத் திரும்பினேன். தளபதியும் வீரர்களும் படகுகள் சம்பாதித்துக் கொண்டு வருவதற்குள்ளே நான் முன்னால் வந்துவிட வேண்டுமென்றுதான் விரைந்து வந்தேன். வந்து பார்த்தால் ஆற்றங்கரையில் நான் கட்டிவிட்டுப் போன பானைத் தெப்பத்தைக் காணோம். மாலை நேரத்து மங்கலான வெளிச்சத்தில் யாரோ ஒருவர் தெப்பத்தைச் செலுத்திக் கொண்டு இந்தக் கரையண்டை வந்து கொண்டிருந்தது தெரிந்தது. மொட்டைத் தலையையும் காவித் துணியையும் பார்த்தால், புத்த பிக்ஷு மாதிரி இருந்தது. நம்ம நாகநந்தியடிகள் தானாக்கும் என்று கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தேன். பிக்ஷு திரும்பிப் பார்க்கவே இல்லை. எனக்கு அசாத்தியக் கோபம் வந்து விட்டது. உலகத்திலேயுள்ள காவித் துணி அணிந்த புத்த பிக்ஷுக்களையெல்லாம் வாயில் வந்தபடி உரத்த குரலில் திட்டினேன். என்னுடைய குரலைக் கேட்டுவிட்டு, நதிக்கரையோடு வந்த இரண்டு பேர் என்னிடம் வந்து, 'என்ன அப்பா சமாசாரம்?' என்று விசாரித்தார்கள். நான் விஷயத்தைச் சொன்னேன். நாகநந்தி பிக்ஷுவைத் தேடிக் கொண்டுதான் அவர்களும் வந்தார்கள் என்று தெரிந்



தது. அப்புறம் நாங்கள் மூன்று பேருமாக மரக் கட்டைகளையும் கொடிகளையும் கொண்டு தெப்பம் கட்டிக் கொண்டு இக்கரைக்கு வந்து சேர்ந்தோம். உடனே, அவசர அவசரமாக நமது மடத்துக்கு ஓடினேன். அதற்குள் மாமல்லர் புறப்பட்டு விட்டார் என்றும், நீங்களும் வழியனுப்பப் போயிருக்கிறீர்கள் என்றும் தெரிந்தது. மறுபடியும் இவ்விடம் ஓடி வந்து பார்த்தால், அதற்குள் எல்லாரும் படகிலே ஏறிக்கொண்டு விட்டார்கள். பாருங்கள் ஐயா! இராஜ குலத்தினரை மட்டும் நம்பவே கூடாது. மாமல்லர் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே கிளம்பி விட்டார், பார்த்தீர்களா? ஏதடா, மூன்று நாட்களாய் உயிருக்குயிரான



சிநேகிதனைப் போலப் பழகினேமே என்ற ஞாபகம் கொஞ்சமாவது இருந்ததா?''

இவ்விதம் மூச்சுவிடாமல் குண்டோதரன் பேசியதையெல்லாம் ஒரு காதினால் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி, ''ஆமாம். குண்டோதரா, இராஜ குலத்தவரை நம்பவே கூடாதுதான்!'' என்றாள்.

ஆயனர், ''அதெல்லாம் இருக்கட்டும், குண்டோதரா! நாகநந்தி இந்தக் கிராமத்துக்கு வந்தாரென்று சொல்கிறாய்? நான் பார்க்கவில்லையே?'' என்றார்.

''நாகப் பாம்பு அவ்வளவு சுலபமாக வெளியிலே தலைகாட்டி விடுமா? புற்றிலே ஒளிந்து கொண்டிருக்கும்'' என்றான் குண்டோதரன்.

''பெரியவர்களைப் பற்றி அப்படியெல்லாம் சொல்லாதே, குண்டோதரா! நாகநந்தி பெரிய மகான். உண்மையில்,



அவரும் இந்தக் கிராமத்திலேயே தங்கி விட்டால் எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கும். பாறைக் கோயில்கள் அமைப்பது பற்றி அவர் நல்ல நல்ல யோசனைகள் கூறுவார்'' என்றார் ஆயனர். பிறகு, ''இன்னும் யாரோ இரண்டு பேர் நாகநந்தியைத் தேடிக் கொண்டு வந்தார்கள் என்றாயே! அவர்கள் யார்?'' என்று கேட்டார்.

''குருநாதரே! அந்த மனிதர்கள் கூடச் சிற்பக் கலையிலே ரொம்பப் பிரியம் உள்ளவர்கள் போலிருக்கிறது. நம்முடைய பானைத் தெப்பம் பாறையில் மோதி உடைந்ததே, அதே இடத்தில்தான் நாங்களும் மரக்கட்டைத் தெப்பத்தில் வந்து இறங்கினேம். பாறைகளைப் பார்த்ததும் அந்த மனிதர்களில் ஒருவர் என்ன சொன்னர், தெரியுமா? உங்களைப் போலவே 'இந்தப் பாறைகளைக் குடைந்து எவ்வளவு அழகான கோயில்கள் அமைக்கலாம்' என்றார். எனக்கு அதிசயமாயிருந்தது. 'என் குருவும் அப்படித்தான் சொன்னர்!' என்றேன். 'யார் உன் குரு?' என்று அந்த மனிதர் கேட்டார். உங்கள் பெயரைச் சொன்னதும் அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். உங்களைக் கூட அவருக்குத் தெரியும் போலிருக்கிறது, குருவே!''

''அப்படி யார், என்னைத் தெரிந்தவர்? பாறைகளைப் பார்த்ததும் கோயில் ஞாபகம் வரக் கூடியவர் நான் அறிந்த வரையில் ஒரே ஒருவர்தான் உண்டு. அவர் இங்கே வருவதற்கு நியாயம் இல்லையே! வேறு யாராக இருக்கும்?'' என்றார் ஆயனர்.

''அவர்கள் இந்த ஆற்றங் கரை ஓரத்திலேதான் எங்கேயோ படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் தேடிப்பிடித்து அழைத்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் முன்னால் போங்கள் குருவே!'' என்றான் குண்டோதரன்.

இதற்குள் படகுகள் வராக நதியில் பாதிக்கு மேல் கடந்து சென்று விட்டபடியால், மண்டபப்பட்டுவாசிகள், ஒருவருக்கொருவர், ''திரும்பிப் போகலாமா?'' என்று கேட்டுக் கொண்டு கிராமத்தை நோக்கிக் கிளம்பத் தொடங்கினார்கள். அவர்களுடன் ஆயனரும் சிவகாமியும் புறப்பட்டுச் சென்றார்கள்.

போகும்போது அந்தக் கிராம வாசிகள் மாமல்லரின் அரிய குணங்களைப் பற்றியும், பரஞ்சோதிக்கும் அவருக்கும் உள்ள சிநேகத்தைப் பற்றியும் பாராட்டிப் பேசிக் கொண்டு போனது சிவகாமியின் காதில் விழுந்துகொண்டிருந்தது. மாமல்லரின் பிரிவினால் வறண்டு உலர்ந்து போன அவள் உள்ளத்தில் அந்த வார்த்தைகள் இன்பமழைத் துளிகளைப் போல் விழுந்தன.

* * *

ஆயனர் முதலியவர்களைப் பிரிந்து நதிக் கரையோடு சென்ற குண்டோதரன் நிலா வெளிச்சத்தில் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டேசென்றான். பாறைகள் நிறைந்த இடத்தை அணுகியபோது இன்னும் சர்வ ஜாக்கிரதை

யாக முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு சென்றான். சட்டென்று பாறை மறைவிலிருந்து இருவர் வெளிப்பட்டதும் ஒரு கணம் திகைத்துவிட்டு அவர்கள் இன்னார் என்று தெரிந்து கொண்டதும், எதிரில் வணக்கத்துடன் நின்றான்.

''குண்டோதரா! நல்ல காரியம் செய்தாய்! எங்களை இப்படிக் காக்க வைத்துவிட்டுப் போயே போய் விட்டாயே? நீ உயிரோடிருக்கிறாயா, அல்லது எம லோகத்துக்கே போய்விட்டாயா என்றே எங்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது!'' என்றான் ஒற்றர் தலைவன் சத்ருக்னன்.

''எஜமானே! உங்கள் புண்ணியத்தினால் உயிர் பிழைத்தேன். கொஞ்சம் அஜாக்கிரதையாயிருந்திருந்தால் நிஜமாகவே எம லோகத்துக்குப் போயிருப்பேன். இந்தக் கூரிய கத்தி என் நெஞ்சிலே பதிந்திருக்கும்!'' என்று குண்டோதரன் கூறி, நாக வடிவயாகப் பிடி அமைத்திருந்த ஓர் அபூர்வமான சிறு கத்தியை எடுத்து நீட்டினான்.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

விஷக் கத்தி

குண்டோதரன் நீட்டிய கத்தியைச் சத்ருக்னன் வாங்குவதற்காகக் கையை நீட்டியபோது, ''ஜாக்கிரதை! சத்ருக்னா! கத்தியை ஜாக்கிரதையாக வாங்கு!'' என்றார் வஜ்ரபாஹுவின் வேஷத்திலிருந்த மகேந்திர பல்லவர். பிறகு குண்டோதரனைப் பார்த்து, ''இவ்வளவு அஜாக்கிரதையாக இந்தக் கத்தியை மடியில் கட்டிக்கொண்டு வந்தாயே? இது நெஞ்சில் பதிய வேண்



டிய அவசியமில்லை; இதன் முனை உடம்பிலே பட்டுச் சிறு காயம் ஏற்பட்டால் போதும். இரத்தத்தில் விஷங் கலந்து ஆள் ஒரு முகூர்த்தத்தில் செத்துப் போவான்!'' என்றார்.

''ஐயோ!'' என்றான் குண்டோதரன்.

''போகட்டும்! பிக்ஷுவை எங்கே விட்டு விட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்லு!'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

குண்டோதரன் அவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல், ''கடவுள்தான் காப்பாற்றினார்!'' என்று கூறினான். அவனுடைய உடம்பு நடுங்கிற்று.

சத்ருக்னன் கோபமாக, ''ஆம், குண்டோதரா! உன்னுடைய தாமதத்தினால் காரியம் கெட்டுப் போகாமல் கடவுள்தான் காப்பாற்றினார். பல்லவேந்திரர் கேட்பதற்கு மறுமொழி சீக்கிரம் சொல்லு. இத்தனை நேரம் நாங்கள் காஞ்சி மார்க்கத்தில் பாதி தூரம் போயிருக்கவேண்டும்'' என்றான்.

குண்டோதரன் இன்னும் கலக்கம் தீராதவனாய், ''என்ன சொல்ல வேண்டும்?'' என்று கேட்டான். சத்ருக்னனுடைய கையிலிருந்த கத்தியை நோக்கியபோது, அவனுடைய தேகமெல்லாம் மீண்டும் பதறி நடுங்கியது.

''நாசமாய்ப் போயிற்று! இன்றைக்கு உனக்கு என்ன வந்து விட்டது, குண்டோதரா? உடனே பிரபுவின் கேள்விக்கு மறுமொழி சொல்லு. இல்லாவிட்டால், இந்த விஷக் கத்தி உன் நெஞ்சில் பாயப் போகிறது!'' என்று சத்ருக்னன் கத்தியை ஓங்கினான்.

''எஜமானே! என் முட்டாள்தனத்துக்குத் தக்க தண்டனைதான். இந்த ஏழையின் உயிர் போனால் மோசம் ஒன்றுமில்லை. நஞ்சுண்ட கண்டரின் அருளினால் பல்லவ குமாரருக்கு ஒன்றும் நேராமல் போயிற்றே!'' என்றான் குண்டோதரன்.

இதைக் கேட்டு, எதற்கும் கலங்காமல் மலை போல் நிற்கும் வழக்கமுடைய மகேந்திர பல்லவர்கூடச் சற்று நடுங்கி விட்டார்.

''குண்டோதரா! இந்த விஷக் கத்தி மாமல்லன் மேல் பாய்வதற்கிருந்ததா?''

''ஆம் பிரபு! ஐந்தாறு தடவை புத்த பிக்ஷு இந்தக் கத்தியை வைத்துக் கொண்டு மாமல்லரின் முதுகை நோக்கிக் குறிபார்த்தார். அதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருந்தேன். தங்களுடைய கட்டளையினாலேதான்!


பி டஸ்ட் டீயில் மட்டுமே காணும் மூன்று
றப்பம்சங்கள்
1. கனத்தில் கிட்டிடும் பானம்
2. தருவதும் செறிந்த மணம்
3. பெருவதோ கோப்பைகள் அதிகம்
RUBY DUST
Superb Teas
RUBY DUST
கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தையும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஓரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபிடஸ்ட்.
லிப்டன் ரூபி டஸ்ட்
ஒவ்வொரு பாக்கெட்டுக்கும்
செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்
LRDC-10 TAM


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்னைப்போல
மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி
அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில்
ஆழ்த்தும் அருமையான புது நறுமணம்
கொண்டது. அதுவே வெய்ல் ஆஃப் லவ்.
ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத்
தாராளமாக மேனியெங்கும் தூவிக்
கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே
பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம்
நீண்ட நேரம் உங்களைத் தழுவி,
உங்களைச் சுற்றிலும் கமகமவென
வீசிக் கொண்டிருக்கும். வெய்ல்
ஆஃப் லவ் உங்களை அலங்கரிக்-
கட்டும். ஹேலோ மட்டுமே
அளிக்கும் வாசமுள்ள
அன்புத்திரை அது.
ஹேலோ வெய்ல் ஆஃப்
லவ் டால்க் வாசமுள்ள
அன்புத்திரை...
அன்னைப் போல
மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வெய்ல் ஆஃப் லவ்
டால்க்
NEW
Halo

HT.G.I.TH (I)

இல்லாவிட்டால்?...'' என்று குண்டோதரன் பற்களை 'நறநற'வென்று கடித்தான்.

* * *

உண்மையிலேயே, மாமல்லர் அன்று இரவு தப்பிப் பிழைத்தது தமிழகம் செய்திருந்த தவப்பயன் என்றுதான் சொல்ல வேண்டும்.

மகிழ மரத்தடியில் மாமல்லரும் சிவகாமியும் அமர்ந்து மதுரத் தமிழ் மொழியிலும் மௌன பரிபாஷையிலும் காதல் சம்பாஷணை நடத்திக் கொண்டிருந்தபோது அவர்கள் இருந்த பாறைக்குப் பின்னாலிருந்த புத்த பிக்ஷு விஷக் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு குறிபார்த்த வண்ணமிருந்தார். ஆனால் எக்காரணத்தினாலோ எறிவதற்குத் தயங்கினார். மாமல்லரின் பக்கத்திலே சிவகாமி இருந்ததும், தப்பித் தவறிக் கத்தி அவள் மேல் விழுந்து விடுமோ என்ற எண்ணமுந்தான் பிக்ஷுவுக்கு அத்தகைய தயக்கத்தை அளித்ததுவோ என்னவோ, யாருக்குத் தெரியும்?

பிறகு, சிவபெருமான் உகந்தணியும் ஆபரணமான நாகப் பாம்பு அங்கு வந்து சேர்ந்தது. சிவகாமியும் மாமல்லரும் மகிழமரத்தினடியிலிருந்து இளம்பிறை நிலா வெளிச்சம் பளிச்சென்று எரித்த விசாலமான பாறையில் போய் உட்காருவதற்குக் காரணமாயிற்று.

புத்த பிக்ஷு தாம் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளிக் கிளம்பி வேறிடத்துக்குப் போய் மறைந்து கொண்டார்.

இதையெல்லாம் இன்னொரு பாறை மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குண்டோதரனுடைய கை ஊறியது. பின்புறமாகச் சென்று புத்த பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்று விடவேண்டுமென்ற அடங்காத ஆர்வம் அவனுக்கு உண்டாயிற்று. அந்த ஆர்வத்தை அவன் அடக்கிக் கொண்டு பொறுமையுடன் இருந்ததன் காரணம் மகேந்திர சக்கரவர்த்தியின் கண்டிப்பான கட்டளைதான்.


அன்று மாலை சக்கரவர்த்தியும் சத்ருக்னனும் குண்டோதரனும் மரக் கட்டைத் தெப்பத்தில் வராக நதியைத் தாண்டி இக் கரையில் இறங்கியபோது, சற்றுத் தூரத்தில் ஒரு பாறையின் மேல் புத்த பிக்ஷு நின்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது சக்கரவர்த்தி, குண்டோதரனைப் பார்த்துச் சொன்னார்: ''குண்டோதரா! இத்தனை காலமாக நீ செய்திருக்கும் வேலையெல்லாவற்றையும் விட முக்கியமான வேலை உனக்கு இப்போது தரப் போகிறேன். அதில் ஓர் அணு அளவு கூடப் பிசகாமல் சர்வ ஜாக்கிரதையாய்ச் செய்து முடிக்க வேண்டும். இந்தப் பிக்ஷுவை ஒரு கண நேரம்கூட விடாமல் நீ பின் தொடர்ந்து போக வேண்டும். உன் கண் பார்வையிலிருந்து இவர் அகலுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. நீ இவரைப் பின்தொடருகிறாய் என்பதும் இவருக்குத் தெரியக் கூடாது. ஆற்றுக்கு அக்கரையில் எங்களுக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. திரும்பிப் போய் அதை முடித்துவிட்டு இதே இடத்துக்கு மறுபடியும் வந்து சேருகிறோம். இவ்விடத்தில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். சந்திரன் தலைக்கு மேல் வரும் போது நீ இங்கே வந்து எங்களுக்குச் சமாசாரம் தெரிவிக்க வேண்டும். பிக்ஷு எங்கே போனார், என்ன செய்தார் என்று தெரியப்படுத்த

முதல்தரமான முதலைப் பராமரிப்பு!

மேற்கு ஜெர்மனி ஃபிராங்பர்ட் நகரில் உள்ள மிருகக் காட்சி சாலையில் உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் மிருகங்களும் உள்ளன. இவற்றுக்குத் தேவையான சூழ்நிலை செயற்கை முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக முதலைகள் உள்ள பகுதியில் மணலும் நீரும் பசுஞ் செடி கொடிகளும் கொண்ட ஆற்றங்கரை சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. செயற்கைச் சூரிய ஒளியும் இங்கு பரவுகிறது. அது மட்டுமா? ஒரு நாளைக்கு இரண்டு தடவை உஷ்ணப் பிரதேசங்களில் வீசுவது போன்ற புயல் கூட மனிதனால் உருவாக்கப்படுகிறது!

இந்த மிருகக்காட்சி சாலையின் இயக்குனராக 1888 முதல் 1893 வரை பணியாற்றிய டாக்டர் ஹாகே மிருக இயல் துறையில் அபார சாதனைகளைப் புரிந்தவர். அவர் கண்டுபிடித்த ஒரு விஷயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பன என்றும் குட்டி போட்டுப் பால் கொடுப்பன என்றும் நாம் இனம் பிரிக்கிறோமல்லவா? முட்டையிட்டுக் குஞ்சு பொரித்த பின் குஞ்சுக்கும் பாலும் கொடுக்கும் ஒரு புது இனத்தைக் கண்டுபிடித்தார் இவர்! இவ்வகையில் ஆஸ்திரேலியாவில் வாழும் பிளாடிபஸ் என்ற மிருகத்தின் வயிற்றில் இருந்த பையில் ஒரு முட்டை காணப்பட்டது. முட்டையிலிருந்து பிளாடிபஸ் குட்டி வெளியாகி அது தாயிடம் பாலுண்டது!

— ஸ்காலா





ஒருவர்: அங்கே நிற்பது ஆணா, பெண்ணான்னு கூடத் தெரியவில்லை. காலமே கெட்டுப் போச்சு.

மற்றொருவர்: அது என் பொண்ணு தாங்க.

ஒருவர்: உங்க பொண்ணா? மன்னிச்சுடுங்க! நீங்க அவளோட தகப்பனாரா?

மற்றொருவர்: இல்லே, தாயார்!

- ந.சு.க. சரவணப்பிரபு

வேண்டும். ஆனால் அவர் முன்னால் மட்டும் நீ எதிர்ப்படவே கூடாது.''

இவ்விதம் கட்டளையிட்டு, ''நான் சொன்னதை யெல்லாம் நன்றாய் மனத்தில் வாங்கிக் கொண்டாயா, குண்டோதரா! எல்லாம் தவறின்றிச் செய்வாயா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''அப்படியே செய்வேன், பிரபு!'' என்று ஒப்புக் கொண்டு பிக்ஷுவைத் தொடர்ந்தான் குண்டோதரன்.

இதன் காரணமாகத்தான் பிக்ஷுவின் மேல் பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு குண்டோதரன் பலமுறையும் சும்மா இருக்க வேண்டியதாயிற்று.

ஆயனரும் சிவகாமியும் மாமல்லரும் பாறைப் பிரதேசத்திலிருந்து கிராமத்தை நோக்கிப் புறப்பட்டபோது, அவர்களுக்குச் சற்றுப் பின்னால் பாதை ஓரத்து மரஞ் செடிகளிலும், புதர்களிலும் மறைந்து புத்த பிக்ஷு சென்றார். புத்த பிக்ஷு அறியாமல் அவரைப் பின்தொடர்ந்து குண்டோதரனும் போகலானான்.

கிராமத்தின் முனையிலிருந்த கோயிலின் மதிலை நெருங்கியதும், மடத்து வாசலில் கூட்டமாக நிற்பவர்கள் யார் என்று பார்த்து வர ஆயனர் சென்றாரல்லவா? அப்போது சிவகாமிக்கும் மாமல்லருக்கும் அன்பு மொழிகள் பேசவும், பரஸ்பரம் பிரதிக்ஞை செய்து கொள்ளவும் மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் நின்ற இடம் கோயில் மதில் திருப்பத்தின் ஒரு மூலை.

அதே மூலையின் மற்றொரு திருப்பத்தில் நின்ற புத்த பிக்ஷுவுக்கும் தமது கத்தி முனையைக் குறிபார்க்க அப்போது சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் குறிபார்த்த கத்தியை எறிவதற்கு மட்டும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனெனில், பிக்ஷுவின் கை எட்டக் கூடிய இடத்திலே சிவகாமியும், அவளுக்கு அந்தண்டைப் புறத்தில் மாமல்லரும் நின்று கொண்டிருந்தார்கள். சிவகாமியும் மாமல்லரும் இடம் மாறி நிற்கும் நேரத்தைப் பிக்ஷு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயில் மதிலுக்கு எதிர்ப் புறத்திலே யிருந்த தோட்ட வேலிக்குப் பின்னால் மறைந்து நின்று மேற்படி காட்சியைக் குண்டோதரன் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று தடவை பிக்ஷு கத்தியை ஓங்கியதைப் பார்த்த பிறகு இனிமேல் பொறுக்க முடியாதென்று குண்டோதரன் அவர் மேல் பாய்வதற்குச் சித்தமானபோது, நல்லவேளையாக ஊர்ப் பக்கத்திலிருந்து தளபதி பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் திடுதிடுவென்று வந்து விட்டார்கள். பிக்ஷுவும் உடனே நகர்ந்து பின்னால் போய்விட்டார்.

மாமல்லரைப் பரஞ்சோதி அழைத்துக் கொண்டு போனதையும், அவர்களுக்குப் பின்னால் ஆயனரும் சிவகாமியும் சென்றதையும் பார்த்துக் கொண்டிருந்தான் குண்டோதரன். சற்றுப் பின்னர் புத்த பிக்ஷு அதே மதில் மூலைக்கு அருகில் வந்து நிற்பதையும் கண்டான்.

பின்னர், குண்டோதரன் சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்றைப் புத்த பிக்ஷு செய்தார். கோயில் பிராகாரத்துக்கு உட்புறமிருந்து வெளியே படர்ந்திருந்த மரக் கிளைகளை இலேசாகப் பிடித்துக் கொண்டு மதிலின் மேல் ஏறி உட்புறம் குதித்தார்.

அடுத்த கணத்தில் குண்டோதரன் புத்த பிக்ஷு சற்று முன் நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தான். ஒரு விநாடி நேரம் அவனுடைய நெஞ்சு தொண்டைக்கு வந்து விட்டது. ஏனெனில், அவன் நின்ற இடத்துக்கு வெகு சமீபத்தில் ஒரு சிறு பாம்பு நெளிவதைக் கண்டான். அங்கிருந்து துள்ளி நகர்ந்து கொண்டு மறுபடியும் பாம்பு இருந்த இடத்தைப் பார்த்தபோது அவனுக்குச் சிறிது வியப்புண்டாயிற்று. ஏனெனில் பாம்பு அசையாமல் கிடந்த இடத்திலேயே கிடந்தது. மறுபடியும் உற்றுப் பார்த்தபின், 'களுக்' என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். உண்


மையில் அது பாம்பு இல்லை என்றும், நாகம் போன்ற பிடி அமைந்த கத்தி என்றும் தெரிந்தது. அந்தக் கத்தியை விரைந்து எடுத்து மடியிலே கட்டிக் கொண்ட பிறகு மதில் மேல் ஏறுவதற்காக அண்ணாந்து பார்த்தான்.

அச்சமயம் மதிலுக்கு அப்புறத்தில் மரக் கிளைகள் அசையும் சத்தம் உண்டாகவே, சட்டென்று ஒரு சந்தேகம் உதித்தது. உடனே மதில் மூலையின் இன்னொரு பக்கத்துக்கு நகர்ந்து சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு நின்றான். அவன் அப்படி நகர்ந்து நின்றதுதான் தாமதம்; புத்த பிக்ஷுவின் தலை மதில் சுவர் மேலே காணப்பட்டது. பிக்ஷு வெளிப்புறம் இறங்குவதற்கு அதிக நேரம் ஆகவில்லை. இறங்கியவர் தரையிலே உற்றுப் பார்த்த வண்ணம் எதையோ தேடத் தொடங்கினார்.

அவர் எதைத் தேடுகிறார் என்பதை ஊகித்து உணர்ந்து கொண்ட குண்டோதரன் சிறிதும் சத்தமில்லாதபடி மதில் மேல் ஏறிக் கோயிலுக்குள்ளே குதித்தான். அவன் குதித்த இடத்துக்கு வெகு சமீபத்தில் மதில் சுவரை ஒட்டிக் கோயில் மடைப்பள்ளி இருந்தது. மடைப்பள்ளிச் சுவருக்குப் பின்னால் அவன் மறைந்து நின்று கொண்டான்.

சற்று நேரத்துக்குப் பிறகு புத்த பிக்ஷு மறுபடியும் கோயில் பிராகாரத்துக்குள்ளே குதித்தார். குதித்த இடத்தில் பன்னீர் மரத்தடியில் குனிந்து தேடினார்.





அதிலும் பயனின்றி அவர் நிமிர்ந்த போது, அவருடைய மூச்சு நாகப் பாம்பின் சீறலைப் போல் தொனிப்பதைக் கேட்டு, அஞ்சா நெஞ்சமுடைய குண்டோதரன் கூட நடுங்கினான்.

புத்த பிக்ஷு பன்னீர் மரத்தடியில் சற்று நேரம் நிற்பதும், பிராகாரத்தில் கொஞ்ச தூரம் நடந்து சென்று வெளிப்பக்கம் எட்டிப் பார்த்து விட்டுத் திரும்புவதுமாயிருந்தார்.

இடையிடையே கோயிலுக்கு வெளியிலிருந்து போர் வீரர்களின் ஜய கோஷமும், கிராமவாசிகளின் ஆரவார முழக்கமும் கேட்டுக் கொண்டிருந்தன.

ஏறக்குறைய அர்த்தராத்திரி ஆன போது, சந்தடி அடங்கியது. கோயிலின் கர்ப்பக்கிருகக் கதவுகளைச் சாத்தித் தாழிடும் சத்தம் கேட்டது. இதற்குப் பிறகு நாகநந்தியடிகள் மரத்தடியிலிருந்து எழுந்து கோயில் பிராகாரத்தைச் சுற்றி நடக்கத் தொடங்கினார்.

மடைப்பள்ளியின் கதவு திறந்திருப்பதைப் பிக்ஷு பார்த்து விட்டு உள்ளே நுழைந்ததைக் கண்டான் குண்டோதரன். சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான். இரண்டே எட்டில் மடைப்பள்ளி வாசலுக்குச் சென்று கதவை இலேசாகச் சாத்தி வாசற்புறத்துத் தாழ்ப்பாளை இழுத்துப் போட்டான்.

உடனே மதில் சுவர் ஏறிக் குதித்து வெளியில் வந்து வராக நதியின் தோணித் துறையை நோக்கி விரைந்து சென்றான். படகுகள் கிளம்பிய பிறகே குண்டோதரன் தோணித் துறைக்கு வந்து சேர்ந்தான் என்பதை முன் அத்தியாயத்தில் பார்த்தோம்.

(தொடரும்)



இன்பமயமான கனவுக் காட்சி...
மபத்லால் துணிமணிகளின் ஆட்சி!

இன்பமயமான ஒரு கனவு...
அழகு ஆட்சி நடத்தும் உங்கள்
துணிமணிகளைப் பார்க்கும்
விழிகளெல்லாம் உங்களை விட்டு
அகல மறுக்கின்றன. திடுமென
விழிப்பு...கனவல்ல நனவேயென்பதை
உணர்கிறீர்கள். பாலியெஸ்டர்
இழைகலந்த கவின்மிகு ஷர்ட்டிங்,
ஸூட்டிங் அல்லது ரெடிமேட்
ஆடைகள் அணிந்த நீங்கள்
உண்மையிலேயே கவர்ச்சியின்
நடுநாயகமாக விளங்குகிறீர்கள்!

மபத்லால் க்ரூப்
அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்

டெரோலெல்
பாலியெஸ்டர் இழைகலந்த
ஷர்ட்டிங்குகள்

டெரோ:பில்
பாலியெஸ்டர் :பிலமென்ட்
யார்ன் துணிகள்

எஸ்டர்காட்
பாலியெஸ்டர்
இழைகலந்த
ஸூட்டிங்குகள்

மபத்லால் அப்பேரல்
அளிக்கும்
கவர்ச்சிமிக்க
ரெடிமேட்
ஆடைகள்

AIYARS-M.339 TM



காந்தன்

வைரம்

படத்தை வைரச் சுடராக ஒளிரச் செய்பவர்கள் ஜெயலலிதாவும் ஜெய்சங்கரும்தான். ஜெயலலிதா நடிப்பில் ஒரு குறையும் வைக்கவில்லை. அவர் ரசிகர்களைக் கவர்ந்து காந்தமாக இழுத்தது ஆணுடையில் கோச்சு வண்டிக்காரனாக வந்தபோதுதான். ஆணுடை அவருக்குப் பொருத்தமாகவே இருக்கிறது. ஜெயலலிதாவை வண்டிக்காரப் பையனாகவே நினைத்து இறுகக் கட்டியணைத்துத் தன் அந்தரங்கங்களையெல்லாம் ஜெய்சங்கர் சொல்ல வரும்போது ஜெயலலிதா அவரை மிஞ்ச விடாமல் சமாளித்தது அனைவருடைய கவனத்தையும் இழுத்தது.

பல பெண்களுடன் பழகுபவராக வருபவர் ஜெய்சங்கர். சண்டைக் காட்சிகளில் மிகவும் சுறுசுறுப்பாக ஈடு கொடுக்கிறார்.

விலை மதிக்க முடியாத வைரக் கற்களைக் களவாட முயலும் கயவர்களின் கதை ''வைரம்''. வைரத்தைச் சுற்றிப் பல மர்மங்கள் இருப்பதில் வியப்பென்ன! மர்மங்களை யொட்டிக் குழப்பங்கள் ஏற்படுவதும் சகஜமே!

மனோகர் வில்லனாக வந்து ஜமாய்க்கிறார். இதில் புதிதாகச் சொல்ல ஒன்றும் இல்லை. 'டிஷ்யூம்' 'டிஷ்யூம்' சண்டைகளில் தமக்கே உரிய லாகவத்தோடு சண்டையிடுகிறார்.

ஜெயலலிதா ஆண் உடையை மாற்றிக் கொள்ளும் காட்சியை அசோகனும் எம். ஆர். ஆர். வாசுவும் பார்த்து ரசிப்பதாகக் காட்டுவதும், ஜெயலலிதாவுக்கு ஜெய்சங்கர் நீராட்டி வைப்பதைக் காட்டுவதும் — கதைக்கு அவசியமோ என்னவோ, விரசமாகப் போய் விட்டது நிச்சயம்.

எஸ். ஏ. அசோகனும், எம். ஆர். ஆர். வாசுவும் ''வைர''த்தின் மர்ம முடிச்சுக்களை அவிழ்ப்பவர்களாக வருவதோடு காமெடியன்களின் இடத்தையும் பிடித்துக் கொண்டு படத்தின் நகைச்சுவைக் காட்சிகளை நிறைவு பெறச் செய்கிறார்கள்.

அசோகன் வில்லனாகவே வருவதைப் பார்த்தவர்களுக்கு அவரை ஒரு ஹாஸ்ய நடிகராகப் பார்க்கும்போது 'சபாஷ்' போடத் தோன்றும். நகைச்சுவை, நடிப்பில் மட்டுமின்றி உரையாடல்களிலும் சுவாரஸ்யமாகப் புகுந்திருக்கிறது.

ஸ்ரீகாந்த் வில்லன். உண்மையான வைரத் திருடனைக் கண்டுபிடித்துத் தன் தந்தையை விடுவிக்க முயலும் ராணியைச் சந்திக்கும் கட்டத்தில் ஸ்ரீகாந்த் நன்றாய் நடித்திருக்கிறார்.

படத்தை டைரக்ட் செய்திருப்பவர் டி. ஆர். ராமண்ணா. ஒரு பெரிய மர்மக் கதையைக் குழப்பம் இல்லாமல் இயக்கியிருப்பது பாராட்டுக்குரியதுதானே? இவ்வளவு சொல்லிவிட்டுக் கடைசியில் 'விக்டோரியா 203' என்ற ஹிந்திப் படத்தின் தமிழாக்கமே ''வைரம்'' என்றால் 'பூ. இவ்வளவுதானா?' என்று கேட்கத் தோன்றும். இது இயல்புதான் என்றாலும், ''வைரம்'' மிகவும் விறுவிறுப்பான காட்சிகளையும், சுறுசுறுப்பான நடிப்பையும் கொண்ட படம் என்பதை மறுப்பதற்கில்லை.

போலியா? நிஜமா?

வைரம் போலியா, உண்மையானதா என்பதை நகை வியாபாரி கண்டுபிடிப்பது எப்படித் தெரியுமா? 'நீர்ச்சோதனை' செய்துதான் கண்டுபிடிப்பார். போலி வைரம் நிஜத்தைப்போல் அவ்வளவு ஒளி விடாது! இந்த வித்தியாசத்தை உங்கள் கண்கள் கண்டறியக் கஷ்டப்பட்டால் அந்த வைரக் கல்லை நீருக்கடியில் வையுங்கள்! நீருக்குள்ளிருந்து போலி வைரம் ஒளி விடாது! நிஜ வைரம் ஒளி சிந்துவது பளிச்சென்று தெரியும்!

மகளிர் மட்டும்



பிறந்த குழந்தைக்கு இயல்பான நல்ல சத்துணவு தாய்ப்பாலே என்பது அனுபவ உண்மை; ஆராய்ச்சி முடிவும் இதுவே.

ஒவ்வொரு நொடியிலும் எங்கேயாவது ஒரு குழந்தை பிறந்தபடியிருக்கிறது. மனித இனத் தொடர்ச்சி இடையறாது நிகழ்ந்து வரும் ஓர் இயக்கம். எல்லாப் படைப்பையும் நிகழ்த்தி மகிழும் இயற்கை அன்னை மானிடப் படைப்பை மண்ணுலகத்துப் பெண் இனத்தைக்கொண்டு நிறைவேற்றிக் கொள்கிறாள். இதற்கு ஏற்பப் பெண்களைப் படைத்துள்ளாள்.

காவியத்திலும் ஓவியத்திலும் கவிதையிலும் சிற்பத்திலும் போற்றப்படும் நங்கை எழிலே படைப்புச் சக்தியின் ஒரு தூண்டுகோல்; நங்கையின் உடல் அமைப்போ சிருஷ்டிக்கு ஒரு சாதனம்.

'கருவூர்' என்று சித்தர் வாக்கால் பொருத்தமாகச் சித்திரிக்கப்படும் கருப்பை என்னும் உறுப்பிலேதான் எல்லா மனித உயிர்க்கும் வாழ்க்கைப் பயணம் தொடங்குகிறது. இதன் முக்கியத்துவம் கருதி இது இடுப்பு எலும்புகளின் கோட்டை போன்ற பாதுகாப்பிலே அமைந்துள்ளது. ஆணுக்கு இருப்பதைவிடப் பெண்ணின் இடுப்பு எலும்புகள் அகன்றுள்ளன. கருப்பை வளர்ச்சிக்கு இடம் கொடுக்கவும் இங்கு வளரவிருக்கும் பாலகனுக்கு ஓர் இயல்பான தொட்டில் அமைக்கவும் இந்த ஏற்பாடு!

ஒரு பெண் குழந்தை எந்த வயதில் பெண்ணாகிறாள்? சாதாரணமாகப் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதில் 'பருவம்' அடைகிறார்கள் பெண்கள். அபூர்வமாக இது எட்டு வயதிலேயே நிகழ்வதுண்டு; பதினாறு வயது வரை தள்ளிப் போவதும் உண்டு. வேகமான வாழ்க்கைப் பழக்கம் உள்ள பல நாட்டுக் குழந்தைகள் இப்போதெல்லாம் பத்து வயதிலேயேகூடப் 'பெரியவ'ராகிவிடுகின்றனராம். வாழ்க்கை முறைகளும் உணவும் பொது ஆரோக்கியமும் பொது மன நிலையும் இந்த விரைவுக்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பொதுவான கருத்து, பெண் குழந்தையின் உடல் எடை நூறு பவுண்டு ஆனதுமே அவள் 'பெரியவள்' ஆகும் வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது என்பதே.

பெண்ணிடம் தோன்றும் இந்த மாதாந்திர மாறுதல் சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகள் நீடித்து, மெல்ல மெல்லத் தள்ளிப் போய் முற்றும் நின்று விடுகிறது. 'மெனோபாஸ்' என்னும் இந்த முதிய நிலை முன்பெல்லாம் நாற்பது வயதில்கூட நேரும்; இந்தத் தலைமுறையினருக்குச் சுமார் ஐம்பது வயதுக்குப் பின்னரே இது நேர்கிறது. இந்த இடைக் காலமே கர்ப்பம் தரித்துக் குழந்தை பெற வாய்ப்புள்ள ஆண்டுகள். ''சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு பிரசவம் என்ற கணக்கில் இந்த ஆண்டுகளில் ஓர் ஆரோக்கியமான பெண் பதினாறு குழந்தைகள் பெற வாய்ப்பு இருக்கிறது. ''அதனால்தான் 'பதினாறும் பெற்று' என்று ஆசி வழங்கும் வழக்கம் இருந்ததோ என்னவோ?'' என்கிறார் ஒருவர்.

ஆரோக்கியம் அழைக்கிறது

அடிவயிற்றின் இருபுறத்திலும் வாதங்கொட்டை அளவும் வடிவமும் கொண்ட இரண்டு சூல்பைகள் உள்ளன. இவையே மனித இனப் பெருக்கத்துக்கு ஆதாரம் எனலாம். ஒரு பெண் குழந்தை பிறக்கும் போதே அதன் சூல்பைகளில் முப்பதாயிரம் அண்ட அணுக்கள் இருக்கின்றனவாம்! இவற்றுள் முதிர்வன சுமார் நானூறே. இப்படி முதிரும் அண்ட அணுக்களில் மாதம் ஒன்று, முற்றி, பெரிதாகி, சூல்பை ஒன்றிலிருந்து மெல்லப்புறப்பட்டுச் சினைப் பாதை என்னும் மெல்லிய குழாய் வழியே பயணமாகிக் கருப்பையை அடைகிறது. இப்படி வரும் ஒவ்வொரு தடவையும் முற்றி வரும் அண்ட அணு சினைப் பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, கருப்பை அதை ஏற்றுப் பாதுகாக்கத் தன்னைத் தயாரித்துக் கொள்கிறது: தன் உள் சுவரிலே ஒரு மெல்லிய புதிய பூச்சைப் படர விடுகிறது. அந்தக் காலத்தில் அங்கே ரத்த ஓட்டம் அதிகமாகவும் நேர்கிறது. சினைப்படாத அண்ட அணு பயண முடிவில் நலிந்து நைந்துவிடுகிறது; யோனி வழியே வெளியேறியும் விடுகிறது.

அதனுடன் கருப்பை அதற்கென்று தயாரித்த மெல்லிய உள் உறைச் சுவரையும் பெயர்த்து வெளியே அனுப்பிவிடுகிறது. இதுவே மாதாந்திர ரத்தத் தீட்டாக வெளிப்படுகிறது.

ஒரு முறை அண்ட அணு முற்றி, முட்டையாகப் பெரிதாகிச் சினைப் பாதையில் பயணமாகி, நைந்து வெளிப்படுவதற்குச் சுமார் நான்கு வாரங்கள் ஆகின்றன.

இந்தக் காலத்தில் இந்த நிகழ்ச்சி மாறுதல்களைப் பிட்யூட்டரி அகச் சுரப்பியின் ஹார்மோன்கள் கட்டுப்படுத்துகின்றன.

எந்தப் பெண்ணுக்கும் நேரும் இந்த இயல்பான மாதாந்திர நிகழ்ச்சி, தொடக்கத்திலேயே அவ்வளவு ஒழுங்காக அமைந்து விடாது. அதனால் பெண்களின் பெற்றோர்கள் கவலைப்படத் தேவையில்லை. முதலில் ஒரு முறை வந்த பிறகு, பல மாதங்கள் கழித்தே அடுத்த முறை நேர்வது சகஜம். சொல்லப் போனால் ஆரம்பத்திலேயே அடிக்கடி வந்தால் தான் கவலைப்பட வேண்டும். மிகையான ரத்தப் போக்கினால் சோகை பிடிக்க வாய்ப்பு உண்டு.

தீட்டு அளவு சிலருக்கு அதிகம் இருக்கலாம். சிலருக்குக் குறைவாக இருக்கலாம். இது உடலின் தன்மையையும் சுரப்பிகளின் இயல்பையும் பொறுத்தது.

மண வாழ்வின் பயனும் நிறைவுமான சுப நிகழ்ச்சியே கருவுறுதல். தம்பதியும் அவர்கள் சுற்றமும் மகிழ்ந்து பூரிப்பது போல் இந்த நிலையில் தாய்மை அடைபவளின் உள் உறுப்புக்களும் பூரிக்கின்றன. இந்த நிலைக்கென்றே காத்திருக்கும் கருப்பை கருவை ஏற்பதும் பக்குவப்படுத்துவதும், அதற்கு வாய்ப்பாகவும் இணக்கமாகவும் பிற உடலுறுப்புகள் இயங்குவதும்தான் படைப்பின் அற்புதம். கருப்பையில் வந்திருக்கும் இந்த முக்கிய மானவருக்கு என்ன 'வி.ஐ.பி.' உபசாரங்கள்!

கண்ணுக்கு எளிதில் புலப்படாத ஓர் உயிரணு, கருவுற்றதும் என்ன வேகமாக வளர்ச்சியுறுகிறது! இங்கே 280 நாட்கள் தங்கி அடையும் வளர்ச்சியில் முதல் மாதத்தில் பெறும் வளர்ச்சியும் மாறுதல்களுமே பிரமிக்க வைப்பன. கருவில் வளரும் குழந்தையை ஏந்தும் கருப்பை ஏற்றபடி அகன்று விரிந்து கொடுக்கிறது. இதற்கு இடம் கொடுக்கவே, சிறுநீர்ப் பையும் தன்னைப் பூரணமாக நிறைத்துக் கொள்ளாமல் நீர் சேரச் சேர அடிக்கடி வெளியேற்றுகிறது! முழு உடல் வளர்ச்சி பெற்று, தனி உயிராக வெளிவரும் வரை குழந்தைக்கு ஏற்ற ரத்தமும் உணவுப் போஷாக்கும் தாயின் மூலமே கிடைக்கின்றன. வெளி வந்ததும் பாலமுது ஊட்டத் தகுந்தபடி தயாராகிறாள் தாய். இவையெல்லாம் அகச் சுரப்பிகளின் ஹார்மோன்கள் ஏற்ற காலத்தில் ஏற்ற பக்குவத்தில் இயங்குவதால் சாத்தியமாகிறது.

கருவுற்றவுடன் கவனிக்க வேண்டியவை என்ன? என்ன?

கருவுற்றிருக்கும் இளம் தாய், 'மசக்கை' வாந்தி எடுப்பது சகஜம்தான் என்றாலும் வைத்திய உதவியுடன் இது நேருவதைக் குறைத்துக் கட்டுப்படுத்தலாம். கர்ப்பிணிகளுக்கு இது தொல்லை தருவதையும், போஷாக்கு வீணாவதையும் தவிர்க்கலாம்.

முதல் மூன்று மாதங்களில்தான் கருவில் வளரும் குழந்தையின் எலும்பு, பல் போன்ற பகுதிகள் உருவாகும் காலம். எனவே இந்தக் காலத்தில் தாய் சுண்ணாம்புச் சத்தை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம். கர்ப்ப காலம் முழுதும் தூக்க மாத்திரை போன்றவற்றைச் சாப்பிடலாகாது. இவற்றின் ரசாயன மாற்றங்கள் கருவுக்கு இடர் விளைவிக்கும். நரம்பியக்கம் தளர்ந்து கொடுப்பதற்காகத் தரப்படும் சில மாத்திரைகள் குழந்தையை அங்கஹீனப்படுத்தும் அளவு தீவிரமானவை. அவ்வாறே கதிரியக்கம் மிக்க சிகிச்சை செய்து கொள்வது, எக்ஸ்-ரே எடுத்துக் கொள்வது போன்றவையும் தவிர்க்கப்பட வேண்டும். முதல் ஆறு மாத காலத்திலாவது இவை அவசியம். இந்தக் காலத்தில் வேறு ஏதாவது நோய்க்காகச் சிகிச்சை எடுத்துக்கொள்ள நேர்ந்தால், தான் ஒரு கர்ப்பிணி என்பதை மருத்துவரிடம் தெரிவித்து விடுவது நல்லது.

குழந்தை ஆரோக்கியமாக உருப்பெற, தாய்க்குச் சாதாரண உணவும் பழமும் தக்காளி, கீரை போன்ற பசுமையான காய்கறிகளுமே போதும். கர்ப்ப காலம் முழுவதும் மலச் சிக்கல் என்பதே இருக்கக்கூடாது. இது இருந்தால் கர்ப்பப்பை தளைந்து போகவும், மூல வியாதி வரவும் வாய்ப்புண்டு.

கர்ப்பிணி ஓய்வு கொள்ள வேண்டுமா, உடற்பயிற்சி செய்ய வேண்டுமா? அவரவரது இயல்பான பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருவதே நல்லது. வேலை செய்யும்



தாய்மைப்பூரிப்புடன் புவான் பர்க். பேறுகாலத்துக்காக விடுமுறை பெற்ற முதல் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் இவர்தான்! 1972 நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சொல் நயம்!



ஹாலிவுட் நடிகை மர்லின் மன்றோ பிரபல கதாசிரியர் ஆர்தர் மில்லரை மணந்த போது ஒரு பத்திரிகை, "அமெரிக்காவின் புகழ்பெற்ற உடம்பு அமெரிக்காவின் புகழ்பெற்ற மூளையை மணந்து கொள்கிறது" என்று எழுதி இருந்தது! - டெபொனேர்

- பாலி

பெண்கள் பிரசவநாள் வரை வேலை பார்ப்பது சாதாரணம். பிரசவம் பார்க்கும் பெண் டாக்டர்களே கூட, பிரசவ காலம் வரை பணியாற்றிவிட்டு, அதே ஆஸ்பத்திரி வார்டில் தானும் ஒரு 'பேஷன்டாக'ச் சேர்ந்து விடுவது சகஜம். ஆனால் ஒன்று. மேடைச் சமையல், மேசைச் சாப்பாடு, மேசை வேலை என்றே பழகிவிட்ட பெண்கள் குனிந்து நிமிர வாய்ப்பில்லாததால் அவர்கள் தினம் பத்து நிமிஷங்கள் குனிந்து நிமிர்ந்தும் கைகால்களை நீட்டியும் இழுத்து மூச்சு விட்டும் பழக வேண்டும். இவற்றை முரட்டுத்தனமாகச் செய்யாமல் பதவிசாக நடந்து கொள்வதும் அவசியம். கிணற்றில் அளவாக நீர் இழுப்போருக்கும் ஆற்றங் கரையிலிருந்து குடத்து நீர் சுமந்து வருவோருக்கும் அவையே உடற் பயிற்சியாகி விடும்.

இந்தக் காலத்தில் தூக்கம் அவசியம். சொல்லப் போனால் பகல் தூக்கமும் நல்லது. கர்ப்பத்தில் ரத்த ஓட்டம் தூக்கத்தின் அமைதியில்தான் அதிகரிக்கிறது. பகல் தூக்கத்துக்கு வசதியில்லாத பணியாற்றும் பெண்கள் மாலையில் சற்றுக் காலாற நடந்து, இரவில் சீக்கிரம் படுக்கலாம். படுக்கும்போது எது வசதியோ அந்த நிலையில் படுக்கலாம். குழந்தையின் கொடி அதனால் சுற்றிக்கொள்ளும் என்று அஞ்ச வேண்டாம்.

கர்ப்ப காலத்தில் ஆரம்பத்திலிருந்தே வைத்திய உதவியை நாடி எல்லாம் சரியாயிருக்கிறதா என்று பார்த்துக் கொள்வது ஒரு நல்ல பழக்கம். உண்மையில் கர்ப்பம் தானா என்று அறியவும் இது அவசியம். சீமந்தம் வரை செய்து விட்டு, வேறு ஏதோ கோளாறால் வயிறு பெரிதாக இருக்க, அதைக் கர்ப்பம் என்று எண்ணிக் கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்ந்தவர் உண்டு. அது கர்ப்பம் இல்லை என்று தெரிந்தவுடன் ஏற்படும் ஏக்கமும் ஏமாற்றமும் எவ்வளவு! சீமந்தச் சடங்குகளுக்குத் தாராளமாகச் செலவிடும் போது ஒரு 'செக்கிங்' செய்துகொள்ள வைத்தியரிடம் போகக் கூடாதா?

பரிசோதனை செய்யும் வைத்தியர் கூறும் ஆலோசனைகளை ஒழுங்காகக் கேட்டு நடப்பது விவேகம். உப்பைக் குறை என்றாலோ, பூரணமாக நிறுத்து என்றாலோ அதற்குக் காரணம் உண்டு. கால் வீக்கத்தையும் பிரசவத்தின் போதோ முன்போ பின்போ வலி – இழுப்பு வருவதையும் தவிர்க்க முடியும்.

பிரசவம் என்பது ஓர் இயல்பான நிகழ்ச்சி. இனிமையான மனநிலையில் அதை எதிர் நோக்கப் பழக வேண்டும். அலட்சியமாகவும் இருக்க வேண்டாம், அதிகமாகப் பயப்படவும் வேண்டாம். எப்படியும் மூன்று முறைகளில் ஒன்றில்தான் பிரசவம் நேரும்: இயற்கை முறை, ஆயுத உதவியுடன் குழந்தையை எடுத்தல், 'சிசேரியன்' முறை. இதில் ஏதாவதொன்றில் பிரசவம் ஆகும். இயற்கை முறையிலே நேர்வதற்குத் தாயின் ஒத்துழைப்பே முக்கிய அம்சம். பிரசவ வலியும் வேதனையும் தாங்கிக்கொள்ளக் கூடியவையே. பயந்தால்தான் அவை நீடிக்கும். இந்த மூன்று வகைப் பிரசவத்துக்கும் வசதியுள்ள மருத்துவ மனையில் சேர்ந்து விட்டால் கவலைப்பட ஒன்றுமில்லை.

கர்ப்பச் சிதைவு பல காரணங்களால் நிகழ்கிறது. அகச் சுரப்பிகளின் ஹார்மோன் வித்தியாசத்தால்கூடக் கரு உருவாகாமல் சிதையும். சிதைந்த கருவை உடல் வைத்திருக்காது. வெளியேற்றிவிடும். அது பூரணமாக வெளியேறும்வரை வேதனையாகத்தான் இருக்கும். ஏதாவது துளி ஒட்டிக்கொண்டிருந்தாலும் புண்ணாகித் தொந்தரவு தரும். சுரம் வரும். எனவே வீட்டிலே கருச் சிதைவு ஏற்பட்டு முற்றிலும் வந்துவிட்டது என்று நினைத்தாலும் கூட முறையாக வைத்தியரிடம் காட்டி எல்லாம் சரிதானா என்று பார்த்துக் கொள்வது நல்லது. சிலருக்குக் கர்ப்பச் சிதைவு ஒரு முறை நேர்ந்தால் அதுவே பழக்கமாகி விடுகிறது. அடுத்த முறை கருவுறும்போது முன்பு நேர்ந்த அதே மாதத்தில் சிதைவு நேருமோ என்று அஞ்சுகிறார்கள். அப்படியே நேர்ந்து விடுகிறது. அவர்கள் மனப் பயிற்சியும் இடமும் கொண்டு, இது மீண்டும் நிகழாது தடுக்கலாம்.

ரத்தப் பரிசோதனை செய்து கொள்வது பிரசவ ஏற்பாடுகளில் ஒன்றாக இப்போது கருதப்படுகிறது. பிரசவ நாளில் ரத்தம் செலுத்தத் தேவைப்பட்டால் உடனே ஏற்ற ரத்தப் பிரிவுக்கு ஏற்பாடு செய்ய முடியும். மிக அபூர்வமாகச் சில சமயம் குழந்தையின் ரத்தத்தில் உள்ள அணு அம்சங்கள் தாயின் ரத்தத்தின் 'ஆர். எச்.' அம்சத்தை எதிர்க்கும் தன்மையதாக இருந்து விடுவது உண்டு. அப்போது பிறந்த குழந்தைக்கே காமாலை நேர்தல், தீவமாகி விடுதல் என்ற நிலைகளுக்கு வாய்ப்புண்டு. ரத்தப் பரிசோதனை செய்திருந்தால் விரைவில் ஏற்ற நடவடிக்கை எடுத்துச் சிசுவைக் காக்க முடியும்.

தூய, பக்குவமான பால் பாத்திரம் தாயிடம் இருக்கும்போது டின் பாலைப் புட்டியில் இட்டு ரப்பர் வழியே கொடுப்பானேன்? சுத்தத்திலும் சத்திலும் சிறந்த தாய்ப் பால் ஆறு மாதங்களுக்காவது குழந்தைக்குக் கிட்டினால் ஆரோக்கியமாக வளர உதவும். தாயின் ஆரோக்கியத்துக்கும் அழகுக்கும் குறைவொன்றுமில்லை; நமஸ்தே.

ஆலோசனை: டாக்டர் வி. ஆர். கனகவல்லி

கட்டுரை: தம்பி சீனிவாசன்


அசலான ஸிங்கர்*
ஊசிகளில் மட்டுமே
ஸிங்கரின்
பெயர் உள்ளது.
ஸிங்கர்* பெயர் உள்ளதா என்று பார்த்தே ஊசிகளை வாங்குங்கள்.
அவைதாம் அசலானவை. சூடேறாமல், 50 லட்சம் தையல்களுக்கும்
அதிகமாக சிறப்பாகத் தைக்கின்றன. ஸிங்கர்* ஊசியின் முனை
'மைக்ரோஃபினிஷ்' செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு
ஊசியும் அமைப்பில் ஒரு சீராக,
தரமுயர்ந்து, தொல்லைதராது,
நம்பகத்துடன் உழைக்கிறது.
வெவ்வேறு வகையான
தையல்கள் மற்றும்
சித்திரத்தையல்களுக்
காக பலவேறு
நம்பருள்ள
ஊசிகள்
கிடைக்கின்றன
அவற்றை எந்த
மெஷினிலும்
எளிதில்
பொருத்தலாம்.
SINGER
SINGER SEWING MACHINES
தயாரிப்பாளர்கள்:
ஸிங்கர்-டிவிஎஸ் லிமிடட், மதுரை
ஸிங்கர் அளிப்பவை சிறந்த பொருட்களே
*ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட்மார்க்


புதுமை குன்றா
பொலிவுடன்
இருங்கள்
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
சிந்தால் பவுடர் அதிவெப்பமான
நாளிலும் உங்களைப் புதுமை
குன்றாமல் வைத்திருக்கிறது.
அதன் அற்புத நறுமணம்
உங்களை விட்டு
அகலுவதில்லை.
கோத்ரெஜ் அளிக்கும்
சிந்தால்
Interpub/GSP/12/74 Tam.

கழுகுகள் எங்கே பறக்கின்றனவோ...

தரமான அயல் நாட்டுப் படங்களைப் பார்க்க முடியாத நிலையில் வாட்டமுற்றுள்ள ரசிகர்களுக்குக் கோடை மழையாகக் குளிர்விக்க வந்திருக்கிறது ஒரு படம். ஸஃபயர் தியேட்டரில் ஓடுகிறது Where the Vultures Fly. திகிலூட்டும் மர்மங்கள் நிறைந்த கதை. ஒரு கொலையை அடுத்தும் பல கொலைகள். யார் எதற்காக எப்படிச் செய்கிறார் என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார் ஓர் இளம் பத்திரிகைக்காரர். அதில் அவருக்கு ஏற்படும் திகைப்பூட்டும் அனுபவங்களை விவரிக்கிறது படம். படத்தின் கதை அமைப்பைவிடக் கதையைக் கொண்டு செல்லுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள நிலைக்களன்களைக் குறிப்பாகக் கூறவேண்டும். அற்புதமான இயற்கைக் காட்சிகளையும் நவீனமான கட்டிடங்களையும் வசதி மிக்க வாழ்க்கை முறைகளையும் கவர்ச்சி மிக்க கோணங்களில் அமைத்தும் படம் எடுத்திருக்கும் நேர்த்தியை எத்தனை பாராட்டினாலும் தகும். காமிராவைக் கையாண்டுள்ள முறையே படத்துக்கு ஒரு வேகத்தைக் கொடுக்கிறது. கொலையாளியின் பார்வையிலேயே அவன் எப்படி எதைப் பார்க்கிறானோ அப்படி நமக்குக் காட்சிகளைக் காட்டிக் கொண்டு போவது அற்புதமாக இருக்கிறது. பிரபல நடிகர்கள் இல்லாவிட்டாலும் நடிப்பவர்கள் ரசிகர்களின் மனத்தில் நிற்கிறார்கள். கழுகின் பாய்ச்சலில் உள்ள கொடூர அழகை முழுமையாக உணர்கிறோம்.

— கௌசிகன்



கஹானி கிஸ்மத் கீ



அதிர்ஷ்டத்தைப் பற்றிய கதை என்று தலைப்பானாலும் இந்தத் திரைக் கதையும் அதிர்ஷ்டம் செய்திருக்கிறது. நிகழ்ச்சிக்கு மேல் நிகழ்ச்சியாகப் பின்னிக் கொண்டு போய்க் கதை ஆசிரியர் ரசிகர்களின் ஆவலைக் கிளறிவிட்டுக் கடைசிவரையில் அவர்களைக் கட்டிப் போட்டுப் படம் பார்க்கச் செய்து விடுகிறார். பல சிக்கல்களில் கதை சிக்கினாலும் சிக்கெடுத்த முறை தெளிவாக இருப்பதனால் ரசிகர்களின் பாராட்டைப் பெறுகிறது.

இந்தப் படத்தில் காணக்கூடிய சில நிகழ்ச்சிகள் இதோ:


கதாநாயகன் கைதேர்ந்த திருடனாக.
கதாநாயகன் கைதேர்ந்த மல்லனாக.
கதாநாயகன் கைதேர்ந்த காதலனாக.

இப்படி நாயகம் புராணம் பாடித் தர்மேந்திராவின் நடிப்பின் நாடியைப் பார்க்கலாமென்றால், அஜித் தம் நடிப்பால் அவர் நாடியைப் பிடித்துப் பார்த்து விடுகிறார். எனவே, அஜித்துக்கும் தர்மேந்திராவுக்குமிடையே நடிப்புப் போர் நிகழ்கிறது. வெற்றி தோல்வி கூறமுடியாதபடி.

கதாநாயகியாக வரும் ரேகா கூட இப்படத்தில் தம் பங்கை நன்றாகச் செய்திருக்கிறார். ஜயஸ்ரீ டி கூட இப்படத்தில் சோடை போகவில்லை. கலோசனு, ராஜேந்திரநாத், செட்டி, பாரத்பூஷண், ரஜனிகுப்தா முதலியவர்களும் பாத்திரத்தின் தன்மை அறிந்து நடித்திருக்கின்றனர்.

இசைப் பின்னணியும் இரண்டொரு பாடல்களும் இதம் தருவதாக இருக்கும் இந்தப் படத்தில் ஆபாசம் குறைக்கப்பட்டிருக்கிறது. அஜித்தும் தர்மேந்திராவும் விழ வேண்டிய கதையை விழாமல் காப்பாற்றியிருக்கிறார்கள்.

புதிய சட்டியில் பழைய சோறு! — ரா வீ.



பெர்க்லி நகரின் போலீஸ் அதிகாரியான வால்மருக்கு அறிவாளிகளிடம் மிக்க மரியாதை உண்டு. போலீஸாரின் முரட்டுப் பலத்தினால்விட அறிவாளிகளின் அறிவினால் தான் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பது அவர் கருத்து.

அதற்காக, கலிஃபோர்னியா சர்வகலாசாலையின் மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்த டாக்டர் ஷ்னீடர் என்பவரை அவர் தம் போலீஸ் இலாகாவில் பணி புரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஷ்னீடரும் சரியென்று சம்மதித்தார்.

ஆனால் இது வால்மரின் சக போலீஸ் அதிகாரிகளுக்கு வேடிக்கையாக இருந்தது. புத்தகம் படித்தவரால் போலீஸ் இலாகாவில் என்ன செய்ய முடியும் என்று தங்களுக்குள் அவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டார்கள். ஆனால் போலீஸ்காரர்கள் ஓடியாடிச் செய்கிற காரியத்தை, (சில சமயங்களில் செய்ய முடியாத காரியத்தை) தாம் தம் பரிசோதனைக் கூடத்தில் உட்கார்ந்து கொண்டே செய்ய முடியும் என்று டாக்டர் ஷ்னீடர் சீக்கிரமே நிரூபித்தார்.

ஒரு நாள் வால்மர் தம் காரியாலயத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது வால்மருக்குத் தெரிந்த ஓர் இத்தாலிய வியாபாரி அவரைத் தேடிக் கொண்டு வந்தார். அவர் கையில் ஒரு கடிதம் இருந்தது. அது இத்தாலிய மொழியில் எழுதப்பட்டிருந்தது.

தமக்கு வந்த அந்தக் கடிதத்தை அந்த இத்தாலியரே மொழிபெயர்த்துச் சொன்னார்: அது வருமாறு:

''அன்புள்ள நண்பரே!

இக்கடிதத்தை எழுதுகிறவர்கள் தங்கள் நலனில் மிக்க அக்கறை கொண்டவர்கள்.

ஆகவே, உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் ஒரு கெடுதலும் விளையக் கூடாது என்றால் இந்தக் கடிதத்தைப் பற்றிப் போலீஸாருக்கு ஒரு தகவலும் தெரிவிக்காதீர்கள்.

சீக்கிரமே உங்களை ஓர் ஆள் வந்து பார்ப்பார். அவர் எங்கள் ஆள் என்பதற்கு அடையாளமாக மூன்று நெருப்புக் குச்சிகளை உங்களிடம் நீட்டுவார். அந்த மூன்று நெருப்புக்குச்சிகளை நீங்கள் வாங்கிக் கொண்டு, அவரிடம் இரண்டாயிரம் டாலர் பணம் கொடுத்து அனுப்ப வேண்டியது.

இதைப் பற்றி யாருக்கும் சொல்லாதீர்கள். போலீசுக்குச் சொல்லவே சொல்லாதீர்கள். அவர்களால் உங்களுக்கு ஓர் உதவியும் செய்ய முடியாது.

நாங்கள் உங்களைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறோம். ஜாக்கிரதை!

இப்படிக்கு,
கறுப்புக் கை''

''கறுப்புக் கை'' என்ற கையெழுத்தைப் பார்த்ததும் அது ஒரு கொள்ளைக் கூட்டத்தார் என்பது வால்மருக்கு ஞாபகம் வந்தது.

''அப்படியானால் நீங்கள் இனி போலீஸ் பாதுகாப்பின்றி இருக்க முடியாது. நான் உங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கிறேன்'' என்றார் வால்மர், அந்த இத்தாலிய வியாபாரியைப் பார்த்து.

''இல்லை, வேண்டாம். நான் ஒரு துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்தால் போதும்.''

''அதற்கு அநுமதி கொடுக்கிறேன். அப்படியே சில போலீஸ்காரர்களையும் உங்களைப் பாதுகாக்க அனுப்பி வைக்கிறேன்.''

''வேண்டாம்'' என்று கண்டிப்பாக மறுத்துவிட்டார் இத்தாலிய வியாபாரி.

துப்பாக்கி லைசென்ஸைத் தயாரித்துக் கொண்டே வால்மர் கேட்டார்: ''இவர்கள் ஏன் உங்களுக்கு இப்படி எழுதுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது. ஒருவேளை நான் பெரிய பணக்காரன் என்று என் நண்பர்கள் வெளியில் சொல்லிக் கொண்டிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். என் நண்பர்கள் நினைப்பது போல நான் அத்தனை பணக்காரன் அல்ல.''

நான்கு நாட்களுக்குப் பிறகு அந்த வியாபாரி வால்மரைத் தேடிக் கொண்டு வந்தார். ''இன்று இன்னொரு கடிதம் அவர்களிடமிருந்து வந்தது. இதோ படித்துச் சொல்கிறேன், கேளுங்கள்'' என்று படிக்க ஆரம்பித்தார்.

''டேய் மடையா!

நாங்கள் சொன்னபடி நீ ஏன் கேட்கவில்லை? நீ ஏன் போலீசுக்குப் போனாய்? இதுதான் எங்களுடைய இறுதி எச்சரிக்கை. நாங்கள் கேட்டபடி பணத்தைக் கொடுக்கப் போகிறாயா, அல்லது உன் உயிரை இழக்கப் போகிறாயா? சீக்கிரமே எங்கள் ஆள் மூன்று நெருப்புக் குச்சிகளுடன் உன்னை வந்து பார்ப்பார். ஆகவே பணத்துடன் தயாராக இரு.

கறுப்புக் கை.''

வியாபாரியின் கண்களில் பயக் குறிகள் தென்பட்டன.

''அப்படியானால் அவர்கள் உங்களைப் பின் தொடர்ந்து உங்கள் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே நான் உங்களைப் பாதுகாக்கப் போலீஸ்காரர்களை அனுப்பித்தான் ஆகவேண்டும்'' என்றார் வால்மர்.

வியாபாரி தமக்குப் போலீஸ் பாதுகாப்பு வேண்டாம் என்று எவ்வளவோ மறுத்துச் சொல்லியும் வால்மர் கேட்கவில்லை.

ஒரு வாரம் இரண்டு போலீஸ்காரர்கள் வியாபாரியின் வீட்டைக் காவல் காத்தார்கள். ஆனால் ஒன்றும் நேராதிருக்கவே அவர்கள் காவலை நிறுத்தினார்கள்.

பத்து நாட்கள் சென்றன. ஒரு நாள் வியாபாரி வீடு திரும்பியபோது வாசலில் ஏதோ ஒரு பார்சல் இடப்பதைப் பார்த்தார். என்னவென்று பிரித்துப் பார்த்தார். அது ஒரு வெடி குண்டு!

உடனே அதை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்.



வால்மர் வெடிகுண்டை எடுத்துக்கொண்டு டாக்டர் ஷ்னீடரிடம் சென்றார். ''இதைக் கொண்டு இந்த வியாபாரியின் வீட்டில் இதை வைத்தவர்கள் யார் என்று கண்டு பிடிக்க முடியுமா?'' என்று கேட்டார்.

''இதில் ஒரு கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லையே! இதோ கண்டுபிடித்துச் சொல்கிறேன்'' என்று டாக்டர் ஷ்னீடர் அந்த வெடிகுண்டைப் பிரித்துப் பார்த்தார்.

உள்ளே ஆறு டைனமைட் குச்சிகள் ஒரு கயிற்றினால் கட்டப்பட்டுக் கிடந்தன.

ஷ்னீடர் அந்தக் கயிற்றிலிருந்து ஓர் அங்குல பாகத்தை மாத்திரம் கத்தரித்து எடுத்து ஒரு கண்ணாடிப் பரிசோதனைக் குழாயில் போட்டார். அதில் கொஞ்சம் காய்ச்சி வடிகட்டிய தண்ணீரை ஊற்றினார். பிறகு கண்ணாடிக் குழாயை வெகு வேகமாகக் குலுக்கினார்.

கயிற்றில் ஒட்டிக் கொண்டிருந்த அழுக்கு கண்ணாடிக் குழாயின் அடியில் தங்கிற்று.

''இது விஷயமாக எனக்கு இன்னும் நான்கு நாள் வேலை இருக்கிறது. ஆகவே நான்கு நாட்களுக்குப் பிறகு வந்தால் இந்த வெடிகுண்டை யார் வைத்தார்கள் என்று சொல்கிறேன்'' என்றார் ஷ்னீடர்.

நான்கு நாட்களுக்குப் பிறகு வால்மரும் மற்றப் போலீஸ் அதிகாரிகளும் டாக்டர் ஷ்னீடரைத் தேடிக் கொண்டு போனபோது அவர் தம் மைக்ராஸ்கோப்பின் மூலமாக எதையோ பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

அவர் சொன்னார்: ''அந்த ஆறு டைனமைட் குச்சிகளையும் ஒரு சிறு கயிறு கொண்டு கட்டியிருந்தார்களே, அந்தக் கயிறு எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடித்தால், வெடி குண்டு வைத்தவர் எங்கிருக்கிறார் என்று கண்டுபிடித்து விடலாம் என்று நான் தீர்மானித்தேன். ஆகவே இந்தக் கயிறு எங்கிருந்து வந்தது என்று சொல்கிறேன். இந்தக் கயிறு இருந்த பண்ணையில் முயல்கள் நிறைய உள்ளன. அவை கறுப்பு முயல்களும் வெள்ளை முயல்களுமாக இருக்க வேண்டும். அல்லது கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறமுடைய முயல்களாக இருக்க வேண்டும். அங்கு சிவப்பு நிறமுள்ள ஒரு குதிரை இருக்கிறது. ரோட் ஐலண்ட் வர்க்கத்தைச் சேர்ந்த கோழிகள் உள்ளன. ஒரு வெள்ளை நிற ஜெர்ஸி பசு இருக்கிறது. அங்கு தேவதாரு மரங்கள் நிறைய உள்ளன. பண்ணையின் குறுக்காக ஒரு சிற்றாறு வெகு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது.''

ஷ்னீடர் சொன்னதை வால்மரும் மற்றப் போலீஸ் அதிகாரிகளும் நம்பவில்லை. ஓர் அங்குலக் கயிற்றைக் கொண்டு இத்தனை விவரங்கள் கண்டு பிடிக்க முடியுமா? ஏதோ ஜால வித்தை போலல்லவா இருக்கிறது!

அவர்கள் முகத்தில் தோன்றிய சந்தேகக் குறிகளைக் கவனித்த ஷ்னீடர் மேலே பேச ஆரம்பித்தார்.

''நான் சொல்வது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் விஞ்ஞானத்தினால் பல விஷயங்களை இருந்த இடத்திலேயே கண்டுபிடிக்க முடியும். மிருகங்களுக்கு ஒன்றுக்கு உள்ளது போல் இன்னொன்றுக்கு ரோமம் கிடையாது. ஒரு ரோமத்தின் செதிளுக்கும் இன்னொரு ரோமத்தின் செதிளுக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு ரோமத்தின் நிறத்துக்கும் இன்னொரு ரோமத்தின் நிறத்துக்கும் வித்தியாசம் உண்டு. இதையெல்லாம் அறிஞர்கள் பலர் ஆராய்ந்து புத்தகங்களில் எழுதியுள்ளனர். ஆகவே கயிற்றின் அழுக்கில் கலந்திருந்த ரோமங்களில் நுண்ணிய துண்டுகளை மைக்ராஸ்கோப்பின் மூலம் ஆராய்ந்ததில் அந்தப் பண்ணையில் முயல்களும், சிவப்புக் குதிரையும் உள்ளன என்று கண்டுகொண்டேன். அதைப் போலத்தான் தேவதாரு மரங்கள், ரோட் ஐலண்ட் கோழிகள், ஜெர்ஸி பசு உள்ளன என்றும் கண்டுகொண்டேன்.''

''ஆமாம், வேகமாக ஓடும் சிற்றாறு என்று சொன்னீர்களே, அதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? சிற்றாறு ஒன்று இருக்கிறது என்று கண்டு பிடிப்பதே கஷ்டம். பின் அது வேகமான சிற்றாறு, வேகமில்லாத சிற்றாறு என்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?'' என்று வால்மர் கேட்டார்.

அதற்கு ஷ்னீடர் பதில் சொன்னார்: ''வெடி குண்டில் ஒரு சிறு மணல் ஒட்டிக் கொண்டிருந்தது. வேகமாக ஓடும் நதியிலிருந்து கிடைக்கும் மணலுக்கும் மெள்ள ஓடும் நதியிலிருந்து கிடைக்கும் மணலுக்கும் வித்தியாசம் உண்டு.''

''இத்தனை விஷயங்களையும் தெரிந்து கொண்டு என்ன பயன்?'' என்று கேட்டார் வால்மர்.

''ஏன் பயன் இல்லை? முதலில் இந்த டைனமைட்டுகள் எங்கு தயாராகின்றன என்று கண்டுபிடியுங்கள். பிறகு இந்த விவரங்கள் பயன்படும்'' என்றார் ஷ்னீடர்.



''எப்படிக் கண்டுபிடிப்பது?''

''டைனமைட்டுகளின் மீது ஏதோ சில எழுத்துக்களும் எண்களும் காணப்படுகின்றனவே. அவற்றைக் கொண்டு கண்டுபிடிக்க முடியாதா?''

''கட்டாயம் முடியும்'' என்று சொல்லிவிட்டு வால்மர் அங்கிருந்து புறப்பட்டார். சீக்கிரமே அதைக் கொண்டு சில விவரங்கள் சேகரித்தார்.

டைனமைட் ஸான்பிரான்ஸிஸ்கோவில் தயாரானது என்றும், அது நோவாடோ என்கிற ஊரில் உள்ள ஒரு வியாபாரிக்கு விற்கப்பட்டது என்றும் தெரிய வந்தது. உடனே போலீஸார் அந்த வியாபாரியைக் கண்டதில் அவர் மூன்று விவசாயிகளுக்கு டைனமைட்டை விற்றதாகச் சொன்னார்.

அந்த மூன்று விவசாயிகளைப் போய்ப் பார்த்ததில் ஒரு விவசாயியின் பண்ணையில் ஷ்னீடர் விவரித்த முயல், குதிரை, பசு, வேகமாக ஓடும் ஆறு எல்லாம் இருந்தன. ஒரு மைக்ராஸ்கோப்பை வைத்துக் கொண்டு இத்தனை விவரங்களை ஷ்னீடர் எப்படிக் கண்டு பிடித்தார் என்று போலீஸார் ஆச்சரியப் பட்டார்கள்.

இந்த விவசாயியைப் பார்த்து டைனமைட்டைப் பற்றி விசாரித்ததில் அவர் தாம் நோவாடோ வியாபாரியிடமிருந்து டைனமைட் வாங்கினது உண்மைதான் என்றும், வெட்டப்பட்ட மரங்களின் அடிப் பாகத்தைத் தகர்ப்பதற்காகத் தாம் டைனமைட் வாங்கினதாகவும், ஆனால் தம் பண்ணையில் சில நாட்கள் வேலை செய்த இரண்டு இத்தாலியர்கள் டைனமைட்டைத் திருடிக் கொண்டு போய் விட்டார்கள் என்றும் சொன்னார்.

''இந்த இரண்டு இத்தாலியர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று கவலைப்பட்டார் வால்மர்.

''கவலை வேண்டாம். அதற்கும் என்னால் வழி சொல்ல முடியும். டைனமைட்டுகள் ஒரு காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தனவே, அதில் ஒரு சான்பிரான்ஸிஸ்கோ இரும்பு வியாபாரியின் பெயர் இருக்கிறது. அவரை விசாரியுங்கள்'' என்று ஷ்னீடர் சொன்னார்.

சான்பிரான்ஸிஸ்கோ வியாபாரியை விசாரித்ததில் அவர் தம் பில் புத்தகத்தைப் பார்த்துத் தம்மிடம் உள்ள இத்தாலிய வாடிக்கைக்காரர்கள் யார் யார் என்று ஒரு ஜாபிதா கொடுத்தார். அந்த ஜாபிதாவில் உள்ளவர்களை விசாரித்ததில் அந்த இத்தாலிய வியாபாரியின் வீட்டில் வெடி குண்டு வைத்த அந்த இரண்டு இத்தாலியர்களும் அகப்பட்டுக் கொண்டார்கள்.

போலீஸின் முரட்டுப் பலத்தினால் செய்ய முடியாத காரியத்தைத் தம் அறிவாற்றலால் செய்ய முடியும் என்று டாக்டர் ஷ்னீடர் நிரூபித்து விட்டார்!



ஸ்ரீ குமார ஸுப்ரபாதம்

ஐம்பதே காசு கொடுத்து இந்த நூலை வாங்கினால் இதில் ஆறுமுகனின் பதினாறு உருவ பேதங்களை விளக்கும் அரிய சுலோகங்கள் அமைந்த, 'ஸ்ரீ குமார ஸுப்ரபாதம்' தமிழுரையுடன் நம் சித்தத்தைத் தித்திக்கச் செய்கிறது. மேலும், சொல் வழுக்கு கொட்டுகிற விதத்தில் 'அ'விலிருந்து 'க்ஷ' வரை வரிசையாக எழுத்துக்கொரு சுலோகமாக முருகனைப் போற்றும், ''ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாக்ஷர மாலா''வும் இதில் உள்ளது. அதுவும் போதாது என்று, ஓதும்போதே குமரன் குதித்தாடுவதுபோன்ற நடையழகு கொண்ட 'ஸ்ரீகார்த்திகேயாஷ்டக'மும் உள்ளது. இன்று மந்திர சாஸ்திரத்தில் மாபெரும் 'வித்வா'ன்களாக உள்ளவர்களில் ஒருவரது ஞானத்தால் இத்துதிகள் உயர்ந்த தத்துவங்களை உட்பொதிந்து கொண்டிருக்கின்றன.

(கிடைக்குமிடம்: ஸ்ரீ வி.வி. ஸ்வாமி சாஸ்திரிகள், (நூலாசிரியர்) 8, கிருஷ்ணபுரம், சூளைமேடு, சென்னை- 600094)

கவியின் கனவு

''ஒரு நாடகத்தில் இருக்க வேண்டிய உணர்ச்சி வேகங்கள், வெவ்வேறு குண சித்திரங்களையுடைய பாத்திரங்கள், கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகள், விறுவிறுப்பான சம்பாஷணைகள் ஆகிய எல்லா அம்சங்களையும் வைத்து இந்த நாடகத்தை இயற்றிய ஆசிரியர் திரு எஸ். டி. சுந்தரம் அவர்கள். 1942-ல் விடுதலைப் போராட்டத்தில் சிறைப்பட்டிருந்த தேசபக்தரும் தேசிய வீரருமாகிய திரு எஸ். டி. சுந்தரம் பல உயர்ந்த இலட்சியங்களையும் புரட்சிகரமான கருத்துக்களையும் புகுத்தி இந்த நாடகத்தை அமைத்திருக்கிறார்.

தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ள தலைசிறந்த நாடக ஆசிரியர்களில் திரு எஸ். டி. சுந்தரம் ஒருவர்; நாடகத்தைப் புத்தக வடிவில் படித்தே இந்த அபிப்பிராயம் என் மனத்தில் தோன்றியது.'' — இவ்வாறு அமரர் 'கல்கி' அவர்கள் 'கவியின் கனவு' நாடகத்தைப் பார்த்து விட்டு எழுதிய விமர்சனத்தின் இடையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கவியின் கனவு நாடக நூல் தற்போது நான்காம் பதிப்பாக வெளி வந்திருக்கிறது.


பிரசுரம்: உலக நூலகம், சன்னதித் தெரு, லட்சுமிபுரம், சென்னை-14. விலை. ரூ. 5.

பஞ்சாயதன பூஜா


பரமசிவன், உமையன்னை, திருமால், கணேசர், சூரியன் ஆகிய ஐந்து தேவதைகளைச் சேர்த்து வைத்துப் பூஜிக்கும் பத்ததி தொன்றுதொட்டு நம் நாட்டில் நிலவி வந்திருக்கிறது. 'பஞ்சாயதன பூஜை' எனப்படும் இவ்வழிபாட்டை ஆதிசங்கரர் மீண்டும் நிலைநாட்டினார். இப்பூஜை பற்றிய முக்கியமான கருத்துக்களையும் விதிகளையும் தமிழ், ஹிந்தி, சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் தனித் தனியே வெளியிடப்பட்டுள்ள சிறு நூல்களில் ரத்தினச் சுருக்கமாகக் கூறியிருக்கிறார், பண்டிதோத்தமராகிய மாயூரம் பிரம்மஸ்ரீ ராமநாத தீக்ஷிதரவர்கள்.

(கிடைக்குமிடம்: நூலாசிரியர், 21பி, பீமண்ண முதலித் தெரு, சென்னை-18; விலை: தமிழ், ஹிந்தி: 30 காசுகள், சம்ஸ்கிருதம்: 25 காசுகள்.)

VOLTAS



காஸ்மோபாலிடன்
அதிநவீன
1.5 டன் ரூம் ஏர்கண்டிஷனர்



மிகச் சிறந்த குளுமை தருவதோடு
இந்த வகையிலேயே மிகச் சிறந்த
செயலாற்றும் காஸ்மோபாலிடன்...
இதன் இதர தன்னிகரற்ற
சிறப்பம்சங்கள் இதோ :

- ☐ அதிக தூரம் குளுமையூட்டும்.
- ☐ மிகப் பரந்த இடத்திற்கு குளுமையூட்டும். தானே திறந்து கொள்ளும் 'ஃப்ளிப்-டாப்', அதிவிரைவில் சீரான குளுமை பரப்ப உதவும்.
- ☐ 'தொட்டவுடன் இயங்கும்'— அத்தனை வேகம்.
- ☐ 1.5 டன் முழுமையான குளுமை, ஆயின் மின்சக்திச் செலவோ சிக்கனம்.

வோல்டாஸ் லிமிடெட்,
116, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

உங்கள் வட்டாரத்திலுள்ள எங்கள் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளை அணுகுக அல்லது அருகிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்தை நாடுக.

Carrier
காஸ்மோபாலிடன்
1.5 டன்
ரூம் ஏர்கண்டிஷனர்

வழங்குவோர் வோல்டாஸ்:
குளுமை தருவதையே
குறிக்கோளாய்க் கொண்டவர்கள்

CMVAC-60-182-TAM.

வயதுப் பொருத்தம் வேண்டாமோ?

சீதா



"பதினாறு வயது பால யோகீச்வர் இருபத்தி நாலு வயதான தன் காரியதரிசியைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாராம். செய்தியைப் பார்த்தாயா ஹேமா?" என்று சாரு கேட்டாள்.

"செய்தி என்ன? அவர்கள் போட்டோவையே பார்த்தேன்!" என்றாள் ஹேமா. "என்னமாய்த்தான் மனம் வந்ததோ?"

"ஏன், இவர்கள் கல்யாணத்தை நடத்தி வைத்த நீதிபதி, 'பையனுக்குப் பதினாறு வயசு என்றாலும் நல்ல வயது வந்தவனுடைய அறிவு முதிர்ச்சியும் வளர்ச்சியும் இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறாரே!"

"அதாவது ஜோடிப் பொருத்தம் இருக்கிறது என்கிறார்!" என்றாள் அகிலாண்டம்மாள்.

"ஷேக்ஸ்பியர் மனைவிகூட ஷேக்ஸ்பியரை விட ஏழு எட்டு வயது பெரியவள் என்று எங்கள் இங்கிலீஷ் புரொபஸர் சொல்லியிருக்கிறார்!" என்றான் சுந்தர்.

"அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு பட்ட கஷ்டத்தினாலேயோ என்னவோ, 'ஆணாகப்பட்டவன் தன்னைவிட வயதில் பெரியவளான பெண்ணைக் கல்யாணமே செய்து கொள்ளக் கூடாது' என்று ஏதோ ஒரு நாடகத்தில் ஷேக்ஸ்பியர் உபதேசம் செய்கிறார்" என்று இவர்கள் பேச்சினிடையில் புகுந்தார் சங்கரன்.

"இரண்டு மனங்கள் ஒன்றையொன்று ஒப்பி விட்டால், வயது என்ன பண்ணும், வயது!" என்றான் சுந்தர்.

"அப்படியானால் நீ ஒரு பாட்டியைக் கல்யாணம் பண்ணிக்கிறாயா?" என்று கேலி செய்தாள் சாரு.

"நீ தெருவிலே கோலி விளையாடும் பையனைப் பண்ணிக்கிறாயா?" என்று பதிலுக்குச் சாடினான் வேணு.

"உங்கள் அசட்டுச் சண்டை இருக்கட்டும். புருஷர்கள் தங்களை விட' வயதில் குறைந்த பெண்களையே கல்யாணம் பண்ணிக்கணும் என்று நம் சாஸ்திரம் சொல்லுகிறது. காரணம் என்ன தெரியுமா?" என்று ஸ்ரீமான் சங்கரன் ஒரு புதிர் போட்டார்.

"அப்போதானே பெண்களை ஆண்கள் அடக்கி ஆளலாம். அதற்குத்தான் இப்படி ஒரு விதி! நம்ம சாஸ்திரங்களே, ஆண்களுக்கு ஒரு நீதியும் பெண்களுக்கு ஒரு (அ)நீதியும் செய்கிறவையாயிற்றே?..." என்றாள் ஹேமா வீராவேசமாக!

" 'பெண்மை வெல்கெனக் கூத்திடுவோமடா' " என்று பாரதியார் வாக்கைப் பலமான குரலில் பாடினான் சுந்தர்.

"பெண்மைதான் என்றும் வென்று வந்திருக்கிறது. அதற்காகத்தான் இந்த நியதியே ஏற்பட்டிருக்கிறது!"

"அது எப்படிப்பா?" என்றான் வேணு.

"பெண்கள் ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்ததும் அவர்களுக்குக் கட்டுத்

தளர்ந்துவிடும். அழகு குறையும். வசீகரம் போய்விடும்! இந்த லட்சணத்தில் புருஷனை விட வயதான ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறந்து விட்டால் கேட்கவே வேண்டாம். அவனுக்கு அவளிடம் ஈடுபாடு குறைந்து போவதில் வியப்பில்லை. ஆனால் புருஷன் அவளைவிட வயதானவனாக இருந்தால் தாய்மைக்குரிய அழகை அனுபவித்து ரசிக்கக் கூடியவனாக விளங்குவான். இதை உத்தேசித்துத்தான் கணவனை விட மனைவி இள வயதினளாக இருக்க வேண்டும் என்று சொல்லப் படுகிறது!'' என்றார் சங்கரன்.

''அது சரி. ஆனால் இந்தக் காலத்தில் இள வயதில் எங்கே கல்யாணங்கள் நடக்கின்றன? அதுவும் பெண்கள் சம்பாதிக்கப் போகிற இந்தக் காலத்தில் மணப் பெண்ணுக்கே இருபத்தைந்து இருபத்தெட்டு என்று வயதாகி விடுகிறதே!''

''வேலைக்குப் போகிற பெண்கள் என்றதும் நினைவு வருகிறது...

''ஐரோப்பாவில் ஸ்விட்ஜர்லாந்து நாட்டில்தான் காரியதரிசியாக வேலை செய்யும் பெண்களுக்குச் சம்பளம் அதிகமாம். எவ்வளவு தெரியுமா? வருஷத்துக்கு ஆறாயிரம் டாலர். இந்த வேலையை விட்டு, இங்கிலாந்தில் குறைந்த சம்பளத்துக்கு — வருஷத்துக்கு 3754 டாலருக்கு வேலை செய்யப் போகிறார்களாம். ஏனெனில் வாரத்துக்கு மிகக் குறைந்த வேலை நேரம் (35 மணி நேரம்) உள்ள நாடு இங்கிலாந்துதானாம். ஓய்வுள்ள நேரத்தில் வம்புப் பேச்சுப் பேசச் சௌகரியமாக இருக்குமல்லவா?'' என்றான் சுந்தர்.

''இன்னொரு பத்திரிகைச் செய்தி நான் கூறுகிறேன்'' என்றான் வேணு. ''பெண்கள் கண்ணுக்கு மையிட்டுக் கொள்வதைப்பற்றிச் சமீபத்தில் சில வட நாட்டுப் பத்திரிகைகள் சர்ச்சைகள் கிளப்பி யிருந்தன, நல்லதா கெட்டதா என்று. இதில் வி. எம். ரெயினா என்ற எழுபது வயதுப் பாட்டி என்ன எழுதி யிருந்தாள் தெரியுமா?''

''சொல்லித் தொலையேன்!'' என்றான் சாரு.

''என் கொள்ளுப் பாட்டி செய்து வந்த முறையில் கண்ணுக்கு மை செய்து இட்டுக் கொண்டு வருகிறேன். எனக்கு வயது எழுபது ஆகிறது என்றாலும் பத்து வயதுப் பெண்ணின் கண் பார்வையைப்போலவே தீட்சண்யமாய் இருக்கிறது! இந்த மை பண்ணுற விஷயத்தில் முக்கியமாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டியது பசும் வெண்ணெயை உபயோகப்படுத்த வேண்டும் என்பதுதான், என்று எழுதியிருக்கிறாள்.''

''இது எனக்கு அப்பாற்பட்ட விஷயம்'' என்று சொல்லி எழுந்து போனார் சங்கரன்.



சமீபத்தில் நடைபெற்ற குமாரி ஆர். ஜயந்தியின் பரத நாட்டிய நிகழ்ச்சி நற்கலை ததும்பும் விருந்தாய் விளங்கியது. குறிப்பாக மோகன ராகத்தில் 'ராரா ராஜீவ லோசனு' என்ற பாட்டு கம்பீரமாக ஒலித்தது. அதற்கு இசைவாக ஜயந்தியின் லாகவமான அபிநயம் கண் கட்டியது. இவர் அடையாறு கே. லட்சுமணனின் மாணவி.



''ஐயய்யோ தப்புப்பண்ணி விட்டேனே'' என்று முகம் சுளுக்குகிறவர் கேரி சோபர்ஸ். இங்கிலாந்தில் நடந்த ஒரு கவுண்ட்டி கிரிக்கெட் மாட்சில் 74 ரன்கள் எடுத்த சோபர்ஸை வீழ்த்தியவர் கே. வி. ஜோன்ஸ்.

41. பாய்வது எப்போது?

"ஹைஜாக் முயற்சி தோல்வி" என்ற தலைப்பில் இந்திய நாளிதழ்களில் வெளியாகியிருந்த செய்தியை எடுத்துத் தனஞ்செயனிடம் காட்டினார் அவனது உயர் அதிகாரி பல்வந்த் சிங். ஓரிரு நாளிதழ்களை அவன் வாங்கிப் பார்த்து விட்டுப் பெருமூச்செறிந்தான்.

"இதே ஹைஜாக் முயற்சி வெற்றி பெற்றிருந்தால் முதல் பக்கத்தில் நாலு பத்தித் தலைப்புப் போட்டுப் பெரிதாகப் பிரசுரித்திருப்பார்கள். ஆனால் அந்த ஹைஜாக் முயற்சியை முறியடித்த நான் மூன்றாம் பக்கத்தில் முக்கால் அங்குலச் செய்தியாக இடம் பெற்றிருக்கிறேன். நீங்களாவது என் புகைப்படத்தைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி யிருக்கலாம்!"

அவன் விளையாட்டாகப் பேசுகிறான் என்பதை உணர்ந்த பல்வந்த் சிங் சிரித்தார். "பத்திரிகைக்காரர்களுக்கு எப்போதும் வில்லன்கள்மீதுதான்மோகம். ஹீரோவை அவ்வளவாகக் கவனிக்க மாட்டார்கள். அதுவும் நமக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வசதியாகத்தான் போய்விட்டது. இந்தச் செய்தி, படித்த சில நிமிஷங்களில் மறந்து போய் விடுகிற மாதிரி வெளியாகி யிருக்கிறதே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன்."

"பிரெஞ்சு, பிரிட்டிஷ், அமெரிக்கப் பத்திரிகைகளிலும் கூட இது போலச் சிறிய அளவில்தான் செய்தி வெளியாகி யிருக்கிறது."


"என்ன போட்டிருந்தார்கள்?"

"ஏறக்தாழ இதே செய்திதான்: அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களுக்கு வன்முறை மூலமே சம உரிமைகள் பெற்றுத் தர முடியும் என்று நம்புகிற ப்ளாக் பான்தர் அமைப்பைச் சேர்ந்த இரு நபர்கள் தங்கள் இயக்கத்துக்குப் பணம் கேட்பதற்காக இந்த ஹைஜாக்



விண்ணும் மண்ணும்

கி.ராஜேந்திரன்



முயற்சியில் இறங்கியதாகவும் அதை அந்த விமானத்தில் பயணம் செய்த தனஞ்செயன் என்ற இந்தியன் முறியடித்ததாகவும் சுருக்கமாக நாலு வரியில் எழுதிவிட்டுப் போய்விட்டார்கள்.''

''நீ யார் என்பது பற்றி....?''

''ஊஹூம்.... எஸ். டி. வி.க்குத் தான் அத்தனை புகழும் பிராபல்யமும் என்றால் கிடைத்தது. டி.எம்.ஐ.க்கு ஒன்றுமில்லை. பூஜ்யம்! நான் அரசாங்க வர்த்தக நிறுவனத்தின் சார்பில் ஏற்றுமதிப் பெருக்கத்துக்காகத்தானே அமெரிக்கா சென்றேன்!''

''அந்தப்படிக்கே மைக்கேலும் நம்புகிறான் இல்லையா இன்னமும்?''

''வேறுவிதமாக என்னைக் குறித்து அவன் சந்தேகப்படும்படி நான் நடந்து கொள்ளவேயில்லை. சர்வ ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிறேன். ஆனால் எஃப். பி. ஐ. என்னைப் பற்றியும், அனுபமாவைக் குறித்தும் ஏதேதோ கூறி அவனை நன்றாகக் குழப்பி வைத்திருக்கிறது.

''பம்பாயில் விமானம் இறங்க இரண்டு மணி நேரம் இருந்த போது அவன், 'இந்தியா இதுவரையில் விண்வெளித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்களை விவரித்துச் சொல்லேன்' என்றபோது நானே சற்றுத் திடுக்கிட்டுத்தான் போய்விட்டேன். அனுபமாவும் கொஞ்சம் அரண்டுவிட்டாள்.''

''அவன் வாய் வார்த்தையாகப் பேசியிருக்க மாட்டான். உன்னை ஆழம் பார்க்கத்தான் கேட்டிருப்பான்.''

''அதில் சந்தேகமில்லை. எஃப். பி.ஐ. பிரதிநிதி கூறியதில் உண்மை இருக்குமா என்று கண்டுபிடிக்க அவன் இந்த விதமாக உரையாடலைத் திசை திருப்பியிருக்கக் கூடும்.''

''நீ அவன் விரித்த வலையில் விழுந்து விடவில்லை அல்லவா ?''

''நிச்சயமாக இல்லை. சாதாரணமாக இந்திய தினசரிகளைப் படித்துவரும் எவரும் தெரிந்து கொள்ளக்கூடிய விவரங்களையே சொன்னேன். பிறகு ஒரு 'டூரிஸ்ட்' என்ற முறையில் தும்பா சென்றிருந்தபோது நான் கண்டு, கேட்ட விஷயங்கள் என்பதாகச் சிலவற்றை வெளியிட்டேன்.''

''தேவைக்கு அதிகமாகப் பேசி விட்டாயா, இல்லையா என்பதைப் பற்றி நான் தீர்மானிக்கிறேன். நீ உரையாடல் எவ்வாறு நடந்தது என்பதை விவரித்துச் சொல்'' என்றார் பல்வந்த்சிங்.

அவர் கோரிக்கைக்கு இணங்கத் தனஞ்செயன் சம்பாஷணையை நினைவு கூர்ந்தான்.

* * *

''விண்வெளித் துறையில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றங்களை அளந்து கூற நான் என்ன விஞ்ஞானியா? எனக்கு என்ன தெரியும்? பத்திரிகைகளில் எல்லோரும் படித்தறிகிற விஷயங்கள்தாம் எனக்கும் தெரியும்'' என்றான் தனஞ்செயன்.

''அதைத்தான் சொல்லேன் !'' என்றான் மைக்கேல். ''அமெரிக்கப் பத்திரிகைகள் இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் தருவதில்லை. இந்திய தினசரிகளை நான் படித்துப் பார்த்ததும் இல்லை. எனவே இது விஷயமாக என்னை விட உனக்கு அதிகமாகத் தெரிந்திருக்கும். இந்த எழுபத்தி நாலாம் ஆண்டின் இறுதியிலோ அல்லது அடுத்த ஆண்





டின் தொடக்கத்திலோ இந்தியா தனது முதல் செயற்கைச் சந்திரனை உலகைச் சுற்றி வருமாறு அனுப்பப் போகிறது, இல்லையா ?''

''செயற்கைச் சந்திரன் இந்தியாவுடையதாகத்தான் இருக்கும்; ஆனால் அதைச் சுமந்து செல்லப்போகிற ராக்கெட் ருஷ்யாவுடையது!''

'' அதாவது இந்தியாவில் உருவாக்கப்பட்ட செயற்கைச் சந்திரனை ருஷ்யாவுக்கு எடுத்துப்போய்....''

''ருஷ்ய விஞ்ஞானிகளும் பொறி இயல் நிபுணர்களும் ருஷ்ய ராக்கெட்டில் வைத்து அனுப்புவார்கள். செயற்கைச் சந்திரனைத் தயாரித்த பெருமை தான் இந்தியாவுக்கு. அதை உலகைச் சுற்றி வருமாறு அனுப்பி வைத்த பெருமை ருஷ்யாவுக்கு !''

'' இந்திய விஞ்ஞானிகளுக்கும் மக்களுக்கும் ஊக்கமும் உற்சாகமும் உண்டாவதற்காக இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்திருப்பார்கள். இத்துறையில் துரித முன்னேற்றம் காண்பதாகப் பெருமிதம் உண்டாக்குமே!'' என்றான் மைக்கேல்.

'' இதே நேரத்தில் இந்தியாவின் ராக்கெட் தயாரிக்கும் ஆற்றலும் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறதல்லவா ?'' என்று அனுபமா கேட்டாள்.

இப்போதுதான் முதன் முதலாக இந்தத் துறை பற்றி அவள் தன்னுடன் பேசுவதுபோல் சரளமாகவும் சகஜமாகவும் வினவியதைத் தனஞ்செயன் மிகவும் ரசித்தான். 'வேவு பார்க்கும் கலையில் என்னையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவாள் போல் இருக்கிறதே' என்று நினைத்து மனத்துக்குள் சிரித்துக் கொண்டே பதிலளித்தான் :

'' ஓ, யெஸ் ! தும்பாவிலும் ஆந்திர ராஜ்யத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவிலும் ராக்கெட் தளங்கள் உள்ளன. உல்லாசப் பயணமாகத்தான் வந்திருக்கிறீர்கள் என்றாலும் நீங்கள் சென்னைக்கும் திருவனந்தபுரத்துக்கும் போகும் போது இவ்விரு இடங்களுக்கும் விஜயம் செய்யலாம். அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகளான உங்களை வரவேற்பதில் பெருமையடைவார்களே!''

'' அதற்கென்ன, சந்தர்ப்பம் வாய்த்தால் போய்ப் பார்த்தால் போகிறது '' என்று பட்டும் படாமலும் பதில் கூறினான் மைக்கேல்.

''ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து தான் செயற்கைக்கோளுடன் கூடிய முதல் இந்திய ராக்கெட் புறப்படும். 1978 என்று இலக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். எனவே அங்கே ராக்கெட் தளம் ராக்கெட் வேகத்திலேயே உருவாகி வருகிறது. ஆனால் ராக்கெட் தளம் தயா

ராகிற வேகத்தில் ராக்கெட் உருவாகக் காணும்!''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? எந்த அம்சத்தில் பின்தங்கிவிட்டார்கள் இந்திய விஞ்ஞானிகள்?''

''ராக்கெட்டை உருவாக்குவதல், எரிபொருளைத் தயாரித்தல் ஆகியவற்றில் நிபுணர்களாக விளங்குகிறார்கள். இது சம்பந்தப்பட்ட உலோக இயல், ரசாயன இயல், பொறி இயல் ஆகிய துறைகளில் கூர்ந்த மதி படைத்திருக்கிறார்கள். இந்த அறிவாற்றலெல்லாம் ராணுவ ரீதியில்கூட முப்படைகளுக்கும் பயனாகியுள்ளன. ஆனால் விண்வெளி நோக்கி விரையும் ராக்கெட்டைத் திசை திருப்பிக் கட்டுப்படுத்தும் திறமை தான் இந்திய விஞ்ஞானிகளிடம் சற்றுக் குறைவாக இருக்கிறது. ஆனால் அதிலும் சீக்கிரமே வெற்றி பெற்றுவிடுவார்கள். இன்னும் மூன்றாண்டுகளுக்கும் அதிகமான அவகாசம் இருக்கிறதே!'' என்றான் தனஞ்செயன்.

''ஒரு வேடிக்கையைக் கவனித்தாயா, அனு? விண்வெளி விஞ்ஞானத்தின் எந்தத் துறையில் இந்தியா பின்தங்கியிருக்கிறதோ, அதே துறையில் நிபுணனை நான் இப்போது பாரதம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்!''

''இதைக் கவனிக்கும்போது தனஞ்செயன் குறிப்பிட்ட ராக்கெட் தளங்கள் இருக்கும் திசையில் நாம் தலை வைத்துப் படுக்காமல் இருப்பதுகூட நல்லது'' என்றாள் அனுபமா. ''இந்தியாவில் வலைய வரும் அமெரிக்க சி. ஐ. ஏ. ஏஜண்டுகள் ஏதாவது தப்பர்த்தம் செய்து கொண்டுவிடப் போகிறார்கள். விண் தொல்லையை விலைக்கு வாங்கினதாக முடியும்!''

''ரொம்ப சரி'' என்று ஒப்புக் கொண்டான் மைக்கேல். ''ஸெண்ட்ரல் இன்டலிஜன்ஸ் ஏஜன்ஸியின் அசட்டுத் தனங்கள் ஜகத் பிரசித்திபெற்றதாயிற்றே! என்னைத் தேச துரோகி என்று கூட அவர்கள் முடிவு கட்டிவிடலாம்!'' என்று கூறிச் சிரித்தான்.

''நாலாண்டுகளுக்கு முன்னால் என்றால் நிலைமையே வேறுவிதமாக இருந்திருக்கும். வங்கதேச விடுதலைப் போரின்போதுதானே இந்திய அமெரிக்க நல்லுறவு பாதிக்கப்பட்டது? அதன் பின்னர்தான் விண்வெளித் துறையில் கிடைத்து வந்த அமெரிக்க ஒத்துழைப்பு இந்தியாவுக்கு இல்லாது போயிற்று.'' என்றான் தனஞ்செயன்.

''அதனால் என்ன? அதற்குப் பதிலாகத்தான் இப்போது ருஷ்யாவின் ஒத்துழைப்பு நிரம்ப இருப்பது போல் தோன்றுகிறதே!''

''இருப்பதுபோல் தோன்றுகிறது என்று சரியாகவே சொன்னாய்! அது ஒரு மாயத் தோற்றம்'' என்றான் தனஞ்செயன். ஒரு கதை சொல்லட்டுமா? எங்கள் விஞ்ஞானிகள் மாஸ்கோ சென்றிருந்தபோது ருஷ்ய விஞ்ஞானிகள் அவர்களை வரவேற்றுப் பேசினார்கள். காலைச் சிற்றுண்டி என்ன, மதியச் சாப்பாட்டுக்கு என்ன தரப்படும், இரவு போஜனத்துக்கு என்ன கிடைக்கும் என்றெல்லாம் கூறினார்கள். அதன்படியே எல்லாம் நடந்தது. இடையில் ஒரு விஞ்ஞானிக்குத் தாகம் எடுத்தது. ஒரு டம்ளர் தண்ணீர் வேண்டும் என்றார். 'அது ஒப்பந்தத்தில் இல்லையே' என்று பளிச்சென்று பதில் வந்தது! ருஷ்ய ஒத்துழைப்பு என்பது இந்த மட்டில்தான் இருக்கும். அங்கே ஒரு விஞ்ஞானியின் வீட்டு விலாசத்தை இந்திய விஞ்ஞானி ஒருவர் விசாரித்திருக்கிறார். 'மேலதிகாரியைக் கேட்டுச் சொல்கிறேன்' என்று பதில் கிடைத்தது! கடைசியில் டெலிஃபோன் நம்பரைக்கூட வெளியிட அவரது மேல் அதிகாரி அனுமதி தரவில்லை!''

''ருஷ்ய விஞ்ஞானிகளைக் குறை சொல்லிப் பிரயோஜனமில்லை. கம்யூனிஸ சித்தாந்தம் நடைமுறையில் அப்படித்தான் இயங்கும்'' என்றாள் அனுபமா.

''ஆக மொத்தம் இந்தியா உருவாக்கிய செயற்கை அம்புலியை ருஷ்யா தனது ராக்கெட்டில் வைத்து அனுப்பினால் ஒத்துழைப்பு அந்தமட்டில்தான். அந்த அளவு ஒத்தாசையை அமெரிக்காவும் செய்யத் தயாராகவே உள்ளது. பணத்தைக் கொடுத்துவிட்டால் போதும். செய்தித் தொடர்புக்கான செயற்கைச் சந்திரனோ அல்லது பருவநிலை மாற்றங்களை உணர்த்தும் செயற்கை அம்புலியோ எது தேவையோ அதை இந்தியா குறிப்பிடும் விண்வெளிப் பாதையில் உலகைச் சுற்றி வருமாறு அமெரிக்கா அனுப்பித் தந்து உதவும். அதற்குமுன்பாகப் பரீட்சார்த்தமாகத் தகவல் தொடர்பு ஆராய்ச்சிகளை நடத்த வேணுமானால் குறிப்பிட்ட கால அளவுக்கு அமெரிக்க செயற்கை அம்புலியை இலவசமாகவே இந்தியா பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறுகிறது'' என்றான் தனஞ்செயன்.

''ஆனால் இதை இந்தியா விரும்பவில்லை. செயற்கைச் சந்திரனை உலகைச் சுற்றி வருமாறு அனுப்பக் கூடிய ராக்கெட்டுகளைத் தயாரிக்கும் ஆற்றலையும்

உடனடியாக இதமளிக்கும் பவுடர்:



புதிய

ஜான்ஸன்ஸ்*

மென்தாலேடெட் பவுடர்

கோடைகாலம் வந்துவிட்டது. அதன் கொடுமையையோ, விவரிக்க வேண்டியதே இல்லை. வியர்வை, தாங்க முடியாத உஷ்ணம், தொல்லை மற்றும் கடுப்பு. கோடையின் கொடுமையை விரைவில் முறியடிக்க இதோ ஒரு புதிய வழி: ஜான்ஸன்ஸ் மென்தாலேடெட் பவுடர்—உடனடியாக இதமளிக்கும் பவுடர். அதை அங்கம் முழுதும் தூவிக்கொள்ளுங்கள். வியர்வையை உறிஞ்சியவாறே உடனடியாக மென்தாலின் குளுமையை அளித்து வியர்க்குரு மற்றும் கோடையில் ஏற்படும் சரும உபாதைகளிலிருந்து இதமளிக்கும் புதிய பவுடர். தவறாது அதை உபயோகித்து நாள்தோறும் சுகம் பெறுங்கள். ஜான்ஸன்ஸ் மென்தாலேடெட் பவுடர் இன்றே வாங்குங்கள். அது இன்றி இருப்பதுதான் எவ்வளவு கஷ்டமானது!

உடனடியாக சுகமளிக்கும் பவுடர் உபயோகித்துக் கோடையின் கொடுமையிலிருந்து இதம் பெறுங்கள்

JJ. 7291

* டிரேட்மார்க் காபிரைட் ஜான்ஸன் & ஜான்ஸன்

ஜான்ஸன் & ஜான்ஸன்

முழுமையாகப் பெற ஆசைப்படுகிறது. அப்படித்தானே? இதற்கு ருஷ்யாவோ அல்லது அமெரிக்காவோ உதவும் என்று எதிர்பார்ப்பது வீண்! ஏனென்று தெரிகிறதல்லவா?'' — மைக்கேல் கேட்டான்.

''ராணுவ ரீதியான முக்கியத்துவம் அதற்கு உண்டு என்கிறாய்.''

''ஆமாம்! நாடுவிட்டு நாடு பாய்ந்து குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்கக் கூடிய ஆற்றலுள்ள ஏவுகணைகளைத் தயாரிக்க இந்தியாவுக்கு உதவியதாகவும் ஆகும். ஏற்கனவே இந்தியா அணுகுண்டு உருவாக்கும் திறன் தனக்கு உண்டு என்று உலகுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. இந்நிலையில் எந்த வல்லரசுதான் அணுகுண்டைத் தாங்கிப் பறக்கக்கூடிய ஏவுகணையையும் தயாரிக்க இந்தியாவுக்கு உதவும்?''

'' விண்வெளி விஞ்ஞான வளர்ச்சியோ அல்லது அணு விஞ்ஞான வளர்ச்சியோ எதுவானாலும் அமைதிப் பணிக்குத்தான் இந்தியாவில் பயனாகும் என்று எங்கள் பிரதமர் உறுதி கூறியிருக்கிறார்'' என்றான் தனஞ்செயன்.

''பின்னே? 'யுத்த முஸ்தீப்பு செய்கிறேன்' என்றா கூறுவார்கள்?'' எனக் கேட்டுச் சிரித்தான் மைக்கேல். '' அமெரிக்காவும் ருஷ்யாவும் அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் மாபெரும் ஏவுகணைகளையும் செய்து குவிப்பதைக்கூடப் பாதுகாப்புக்கு என்றும் உலக யுத்தம் நேர்வதைத் தவிர்ப்பதற்கு என்றும்தான் கூறுகின்றன!''

''இதற்கு என்னிடம் பதில் இல்லை'' என்றான் தனஞ்செயன்.

'' இருக்கவும் முடியாது'' என்றான் மைக்கேல். பிறகு அனுபமாவின் முகத்தை ஒரு தடவை தன் கரத்தால் உயர்த்திப் பார்த்துவிட்டு, ''யுத்தம், அணுகுண்டு, ஏவுகணை என்ற பேச்சையெல்லாம் மூட்டை கட்டி வை! அனு மறுபடியும் அழுதுவிடப் போகிறாள்'' என்றான்.

''அத்தனை மென்மையான மனம் அவளுடையது'' என்றான் தனஞ்செயன். ''அத்தனைக்கத்தனை சக்தி வாய்ந்ததாகவும் இருக்கிறது! மென்மையான திசை திருப்பும் கருவிகள் ராட்சத ராக்கெட்டை ஆட்டிப் படைப்பது போல!''

''அடேடே! இந்த உவமையை எங்கே கற்றாய்?'' என்றான் மைக்கேல்.

'' காரியாலய அலுவலாகத் திருவனந்தபுரம் போயிருந்த போது தும்பாவுக்கும் ஆவலை அடக்க முடியாமல் சென்றேன். அங்கே என்னைச் சந்தித்துப் பேசப் பத்து நிமிஷங்கள் அவகாசம் எடுத்துக் கொண்ட ஒரு விஞ்ஞானி இந்த விஷயத்தைச் சொன்னார்: 'அயோடின் திடப் பொருளாக இருக்கிறது. திறந்து வைத்தால் ஆவியாகிறது. இந்த ஆவிக்குப் பிரமாதமாக என்ன சக்தி இருக்கிறது? பௌதிக ரீதியில் ஒன்றுமில்லைதான். ஆனால் இந்த ஆவியே விண்வெளியின் எடையற்ற நிலையில் அபார சக்தியைப் பெறுகிறது. பிரும்மாண்டமான ராக்கெட்டைத் திசை திருப்பும் அளவுக்குச் சக்தி உடையதாக விளங்குகிறது' என்றார். மெய்தானா?''

'' சரிதான் அது'' என்றான் மைக்கேல். ''ராக்கெட் விஞ்ஞானத்தில் அடிப்படையான விஷயங்கள் இரண்டு. முதலாவது எல்லா உறுப்புக்களையும் சின்னஞ் சிறிய அளவில் தயாரிப்பது. இரண்டாவது எல்லாப் பாகங்களையும் குறைந்த எடை உள்ளவையாக உரு



புரட்சியை எழுதியதில் புரட்சி!

கார்லைல் ''பிரெஞ்சுப் புரட்சி'' யின் முதல் பாகம் எழுதிய பின் அந்தக் கையெழுத்துப் பிரதியைத் தம் நண்பர் ஒருவரிடம் படித்துப் பார்த்து அபிப்பிராயம் தெரிவிக்கும்படி கூறினார்.

வாரங்கள் பல ஓடின. அச்சகத்தில் மூலப் பிரதி தேவைப்பட அவர்கள் கார்லைலை அணுகினர். கார்லைல் நண்பருக்குக் கையெழுத்துப் பிரதி கேட்டு ஆள் அனுப்பினார். பாவம், நண்பருக்கு எங்கு வைத்தோம் என்றே ஞாபகம் வரவில்லை. பின் தம் வீட்டில் விசாரித்துப் பார்த்ததில் வீட்டு வேலைக்காரி அவற்றை ஏதோ குப்பைக் காகிதங்கள் எனக் கருதித் தினந்தோறும் அடுப்பெரிக்கப் பயன்படுத்தியதாகத் தெரிவித்தாள்.

கார்லைல் இந்தச் செய்தியைக் கேட்டு அப்படியே துடிதுடித்துப் போனார். ஆனால் என்ன செய்ய முடியும்? யாரை நொந்து என்ன பயன்? அவரிடம் கைவசம் எந்தப் பிரதியும் இல்லை. குறிப்பும் இல்லை; இருப்பினும் வெகு நாட்கள் முன்பே மறந்து விட்ட விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு குறிப்பு எடுத்தார். பொறுமையாக ''பிரெஞ்சுப் புரட்சி'' என்ற நூலை மீண்டும் எழுதி முடித்தார்.

தகவல்: வை. சங்கரநாராயணன்

வாக்குவது. ராக்கெட்டின் பெரும் பகுதியை எரிபொருளே நிரப்பிவிடும். மற்ற உபகரணங்களுக்காக மீதமுள்ள இடம் மிகவும் குறைவு. எனவேதான் மற்ற அம்சங்களின் அளவு சிறுக்க வேண்டும், என்பது. ராக்கெட்டின் சக்தி பெரும்பாலும் புவிசர்ப்பீலை வெற்றி கொள்ளவே பயனாக வேண்டும். பாரமான பொருள்களைத் தூக்கிச் செல்வதில் விரயமாகக் கூடாது. எனவேதான் எடை குறைவாக இருக்க வேண்டும் என்பது. இதன் பொருட்டுத்தான் திசை திருப்பும் உபகரணங்களோ அல்லது ராக்கெட்டின் இதர பகுதிகளோ வெளியே பெரிய அளவில் தயாராகிப் பரீட்சிக்கப்படுகின்றன. அவையே மீண்டும் உருச் சிறுத்தனவாகச் செய்யப்பட்டு ராக்கெட்டினுள் பொருத்தப்படுகின்றன."

"ரொம்பச், சிக்கலான விஷயம் தான். எவ்வளவு சிக்கல் என்பதை எனக்கு வேறு ஒரு விஞ்ஞானி நண்பர் விளக்கியிருக்கிறார்" என்றான் தனஞ்செயன். பின்னர் தொடர்ந்து பேசினான்: "ராக்கெட்டின் ஒரு குறிப்பிட்ட பாகத்தைப் பிரான்ஸ் நாட்டிலிருந்து வாங்கத் தீர்மானித்தார்கள். ஒன்று வாங்கி விட்டால் போதும். பிறகு அதைப் பார்த்து நாமே இங்கு தேவையான எண்ணிக்கையில் தயாரித்துக் கொள்ளலாம் என்ற நோக்கில் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அப்போது தயாரிப்பாளர்கள் சொன்னார்களாம்: 'ஒன்று வாங்கினால் போதாது. அந்த ஒன்றைப் பகுதி பகுதியாகப் பிரித்து விட்டால் பிறகு உங்களால் இணைக்க முடியாது! 'ஜிக்-ஸா' புதிர் மாதிரி இந்த உறுப்பைப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பின்னர் இணைக்கும் ஆற்றலைப் பெறவே நீங்கள் குறைந்தபட்சம் ஐம்பதுக்கு ஆர்டர் தர வேண்டும்!"

"நியாயம்தான்" என்றான் மைக்கேல். "ராக்கெட் விஞ்ஞானத்தை விடச் சிக்கல் மிகுந்ததாக நான் கருதக்கூடியது ஒன்றே ஒன்றுதான்! அது அனுபமாவின் மனம்!"

தனஞ்செயன் விவரித்த உரையாடலைக் கேட்டதும் பல்வந்த் சிங் மென்னகை புரிந்தார். "விண்வெளி விஞ்ஞானத்தில் ஆர்வமுடைய ஆனால் அதன் நுணுக்கங்களை அறியாத சராசரி மனிதன் என்பதை உன்னைவிடச் சிறப்பாக யாரும் உணர்த்தியிருக்க முடியாது" என்றார்.

அப்போது டெலிஃபோன் மணி அடித்தது. ரிஸீவரைச் சற்று நேரம் காதில் வைத்துக் கேட்ட பிறகு, அவர் நாற்காலியைவிட்டு எழுந்து வந்து மேஜையின் மேல் ஒரு காலும் தரையில் ஒரு காலுமாக அமர்ந்து பைப் பற்ற வைத்துக் கொண்டார்.

"அவர்கள் பம்பாயிலிருந்து புறப்பட்டுவிட்டார்கள். ஜெய்பூரில் ஓபிராய் பாலஸ் ஹோட்டலில் தங்கியிருக்கிறார்கள்" என்றார்.

"இருவரும்...." என்று ஒருவித வேகத்துடன் ஆரம்பித்த தனஞ்செயன் வாக்கியத்தை முடிக்காமல் ஒரு புருவத்தை மட்டும் உயர்த்தினான், கேள்விக் குறியாக.

"நீ கேட்க விரும்பிக் கேட்க முடியாமல் தவிக்கும் விஷயம் என்ன என்று எனக்குப் புரிகிறது. நீ கவலைப் பட வேண்டியதில்லை. கணவன் மனைவியாக அவர்கள் ஹோட்டல் ரிஜிஸ்தரில் பதிவு செய்து கொள்ளவில்லை. தனித் தனி அறைகளில்தான் தங்கியுள்ளார்கள்!"

தனஞ்செயன் பெருமூச்சு விட்டான். "நாம் எப்போது அவர்கள் மீது பாயப் போகிறோம்?"

"மறந்து போய்க்கூட 'நாம்' என்று குறிப்பிடாதே" என்றார் பல்வந்த் சிங். "அவர்களைக் கடத்திச் செல்லப் போவது செஞ்சீனாவின் ஒற்றர்கள்!" அவர் குரலில் கடுமை தொனித்தது.

(தொடரும்)



அன்பே வா, வா வா!

தரஜா—

'தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு' என்பது பழமொழி. 'கடிதங்கள்தோறும் வாசகங்கள் வேறு' என்பது புது மொழி.

பிறந்த வீட்டுக்குச் சீராடச் சென்றிருக்கும் மனைவியை உடனடியாக வரச் சொல்லி யார் யார் எப்படி எப்படிக் கடிதம் எழுதுவார்கள் என்பதற்கு இதோ சில மாதிரிகள் :



அரசியல் மேடைப் பேச்சாளர் :

இந்தியத் துணைக் கண்டத்திலேயே கலைச் சிறப்பும், மொழிச் சிறப்பும், அரசியல் சிறப்பும் மிக்க தமிழ் நாட்டின் கும்பகோணம் நகர எட்டாவது வட்டத்துக் கடலங்குடித் தெரு 1008ம் எண் வீட்டில் தாற்காலிகமாக வசிக்கும் பார்வதம் அம்மையாருக்கு முதற்கண் என் அன்பு கலந்த ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில் நீ இங்கிருந்து சென்றது முதல், மோதுவதற்குத் தகுந்த எதிர்க்கட்சி இல்லாமல் தவிக்கும் ஆளும் கட்சித் தலைவரின் அவல நிலையினை அடியேனும் அடைந்து, ஆறுத்துயரடைந்து, இன்னலுற்று, சுயோட்டிய வண்ணம் உட்கார்ந்திருக்கும் எனது பொறுமையினை நீ புரிந்து கொள்ளாமல் — அறிந்து கொள்ளாமல் — தெரிந்து கொள்ளாமல் — தாய் வீட்டிலேயே தங்கி விருந்தால், என் பொறுமை பறிபோய்விடும்—நிதானம் பறந்துவிடும் — நிம்மதி குலைந்துவிடும், அமைதி அழிந்துவிடும் என்பதனைத் தெரிவித்துக் கொள்வதோடு உடனடியாக இப்பிரச்னைக்குத் தீர்வு காண நீ முன்வர வேண்டும் என்றும், அப்படி வராவிட்டால் நான் பொங்கியெழ வேண்டியிருக்கும் என்பதனை இறுதி முறையாகக் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்ற கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுவேன் என்பதனையும், நான் பொங்கி யெழுந்தால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமை என்றும் கூறி முடித்து இத்துடன் விடைபெறுகிறேன். வணக்கம்.

இப்படிக்கு
பெருந்தமிழ்க் குடியன்

மர்மக் கதை எழுத்தாளர் :



என்னை மயக்க வைத்த மாயூரத்து மோகினியான மல்லிகா! கேள் இந்தக் கதையை : அன்று அமாவாசை. தெருவெங்கும் இருள். மையிருட்டு. கும்மிருட்டு.

எதன் மீதாவது தடுக்கி விழுந்துவிடப் போகிறோமே என்ற பயம் என் நெஞ்சை வாட்டியது. மெள்ளத் தட்டுத் தடுமாறி, இருளில் குளித்துக் கொண்டிருந்த அந்தப் பாழடைந்த கட்டடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அது ஒரு மாடி வீடு. —

தடவிக் கொண்டே படியேறும்போது ஏழு எட்டுத் தடியர்கள் என் மீது மோதுவது போல் வந்தார்கள். சட்டென்று வழிவிட்டு விலகி நின்று கவனித்தேன். படிகளில் மெள்ள ஏறினேன். மேலே போனேன்.

நான் எதிர்பார்த்தபடியே கறுப்பாக, குண்டாக, கூர்மீசையுடன் அந்த ஆள் என் முன்னால் தோன்றினான். ''உட்கார்!'' என்றான் மிரட்டலாக. உட்கார்ந்தேன், ஒரு மேஜை முன்பு. அடுத்த விநாடி — ''ஐயோ!'' என்று அலறினேன். காரணம் —

என் கை மீது கொதிக்கக் கொதிக்கச் சாதத்தை அந்தக் குண்டன் போட்டுவிட, இன்னொரு தடியன் சுடச்சுடச் சாம்பாரையும் விட்டுவிட்டான்....

தினசரி நடக்கும் கதை இது. ஹோட்டல் சாப்பாட்டுக் கொடுமை நாளுக்கு நாள் தாங்க முடியாததாகிக் கொண்டு வருகிறது. சீக்கிரம் வந்து, இந்தக் கொடுமைக்குச் சாவு மணி அடி.

'ஆமாம், அது எந்த ஹோட்டல்?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா உனக்கு? அது ஒரு பெரிய சஸ்பென்ஸ். அடுத்த கடிதத்தில் அதை விளக்குகிறேன்.

இப்படிக்கு
'ஜடாமுனி'

வக்கீல் :


சென்னை, மயிலாப்பூர், சித்திரகுளம், நான்காவது
தெரு, பன்னிரண்டாம் வீட்டில் வசிக்கும் வெங்கட்
ராமன், வயது 32, சுக ஜீவனம், மதுரை, மேலமாசி
வீதி, 180ம் நம்பர் வீட்டுக்குத் தாற்காலிகமாகக்
குடிபெயர்ந்திருக்கும் என் மனைவி, வயது 25,
லட்சுமிக்கு எழுதிக் கொண்டதாவது:

நீ என்னிடம் 'அம்மா வீட்டில் ஒரு **பத்து நாள்**
இருந்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப்
போய் இன்று வரை முப்பத் தாறு நாள், பதினெட்டு
மணி நேரம் ஆகியும் இன்னும் வந்து சேராததுமின்றி,
வராமற் போனதற்கான காரணத்தை எழுத்துமூலம்
தெரிவிக்காததினுல் நான் மிகுந்த மனக் கிலேசத்துக்கு
ஆளாக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறியவும்.

எனவே, இந்தக் கடிதம் கண்ட 72 மணி நேரத்
துக்குள் சகல மூட்டை முடிச்சுக்கள், நகை நட்டுக்க
ளுடன் நீ வந்து சேர வேண்டும் என்பதையும், அப்படி
வரவில்லையென்றால் அதனால் ஏற்படும் சகலவிதமான
கஷ்டநஷ்டங்களுக்கும் நீயே பொறுப்பேற்க வேண்டி
வரும் என்பதையும் இதன் மூலம் அறியவும்.

மேற்கூறியபடி வந்து சேர்வதற்கு ஏதேனும்
ஆட்சேபணை இருக்குமானால், உடனே அதனை எழுத்து
மூலம் மேலே கண்ட எனது விலாசத்துக்குத் தெரியப்
படுத்த வேண்டும் என்பதையும் அறியவும்.

இப்படிக்கு,
என் சார்பாக, **வெங்கட்ராமன்**



டாக்டர் :

அன்புள்ள சரோஜா,

வழக்கமாகத் தினந்தோறும் இன்சுலின்
ஊசி போட்டுக் கொள்ளும் சர்க்கரை வியாதிக்
கார நோயாளி, தொடர்ந்தாற்போல் ஒரு
வார காலத்துக்கு இன்சுலின் போட்டுக்
கொள்ளா விட்டால் எப்படிச் சோர்ந்து,
தொய்ந்து, உற்சாகமிழந்து, அப்படியே
அமுங்கிப் போய்விடுவாளே அதே போன்ற
நிலைமையில்தான் நான் இருக்கிறேன்.

உன் சமையலை ருசி பார்க்காமல் இருப்பது
என்பது, குளோரோபார்ம் இல்லாமல் ஆப்ப
ரேஷன் செய்ய முனைவது போலாகும். ஹோட்
டல் சாப்பாடு என் உடம்பை உருக்குலைத்து
வருகிறது. உன் புன்சிரிப்பே எனக்குக்
குளுகோஸ். உபசரிப்பே மல்டிவைட்டமின்
மாத்திரை. உன் பேச்சே டிராங்குலைசர்.

நீ இன்னும் உன் அம்மா வீட்டில் எத்தனை
நாட்கள்தான் தங்கியிருக்கப் போகிறாய்?
ஆப்பரேஷன் போது போடப்படும் தையலை
விரைவில் ஒரு நாள் பிரித்துத்தானே ஆக
வேண்டும்...? அது போல் சீக்கிரமே ஒரு
நாள் வந்து சேர்.

இப்படிக்கு,
சிதாபதி



விளம்பர ஏஜென்ஸியில் வேலை பார்ப்பவர் :



அன்புள்ள உஷா,

என் உடலும் உள்ளமும் எப்போதும்
சோர்ந்திருப்பதன் ரகசியம் என்ன?

நீ இல்லாததுதான்.

உன் பிரிவு எனக்குப் பெருந் துயர் தரு
கிறது.

பிரிவு தவிர்க்க முடியாதது. ஆனால் அதன்
விளைவான துயரத்தைத் தவிர்க்கலாமே?

என் உடலும் உள்ளமும் மகிழ்ச்சியால்
துள்ள, நீ செய்ய வேண்டியதெல்லாம் இது
தான்:

உடனே வந்து சேர்.

நீ எப்போது வருகிறாய் என்பதைப் பதி
னெட்டு வார்த்தைகளுக்குள் அடிமிற்கண்ட
கூப்பானில் எழுதி, மேலே கொடுக்கப்பட்டுள்ள
முகவரிக்கு ஜூன் மாதம் 20ம் தேதிக்குள்
அனுப்பி வைக்கவும்.

இப்படிக்கு,
உன்
ராசாராமன்

கதா காலட்சேபம் செய்பவர்:

அன்புள்ள ஜனகம்,

ஆதென கீர்த்தனாரம்பத்திலே தியாகப்பட்டவள் என்னிடம் வந்து, ''சுவாமி! அடியாளுக்கு அம்மாவைப் பார்க்கனும் போல மனசு கெடந்து அடிச்சுக்கறது..... போய்ட்டு வர அனுமதி தாருங்கோ. பத்தே நாள்லே திரும்பிடறேன்'' அப்படீன்னு பவ்யமாக் கேட்டதை நம்பி, நானும் அனுமதி கொடுத்தேன். நீயும் பரக்கப் பரக்க மூட்டை முடிச்சுக்களைக் கட்டிண்டு போனாய்.

ஆனால் இப்போ என்ன ஆச்சு?

'ஸத்ருஷம் சேஷ்டதே ஸ்வஸ்யா ஹரா — ப்ரக்ருதோ ஞானவானுபி'ன்னு பகவத்கீதையிலே, மூணாவது அத்தியாயத்திலே, முப்பத்திமூணாவது சுலோகத்திலே பகவான் சொன்னப்பலே, புத்திசாலியா இருந்தும் நீ உன் **சுபாவப்படி**யேதான் நடந்துண்டிருக்கே... சொன்ன வார்த்தையைக் காத்திலே பறக்க விடலாமோ? அப்புறம் தர்மம் போற கதி என்ன?.... அதாவது நம்ம குட்டி — இங்கே என்னோட இருக்காளே குழந்தை, தர்மம் — அவளைச் சொல்றேன்.... இதையெல்லாம் நீ யோசிச்சுப் பார்த்தியா ?

ஒரு நல்ல நாளா பார்த்துண்டு, சூலம் — கிலம் தெரிஞ்சுண்டு, பகவானைப் பிரார்த்தனை பண்ணிண்டு, காலமே புறப்பட்டு, இருட்டறதுக்குள்ளே வந்து சேர். சுபமஸ்து.

இப்படிக்கு,

சிவராமகிருஷ்ணசர்மன்



தினசரிப் பத்திரிகை உதவி ஆசிரியர்:



அன்புள்ள அமிர்தம்,

நீ உன் அம்மா வீட்டுக்குப் போய் இன்றுடன் இருபத்தொரு நாட்கள் ஆகின்றன என்பது தெரிந்ததே.

தூக்கம்!

நீ இல்லாமல் எனக்குச் சாப்பாடே இறங்குவதில்லை. தூக்கமும் சரியாக வருவதில்லை. — அதாவது ஆபீசில்.

உன் வருகையைக் காந்தாமணியும், ஜானகியும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (காந்தாமணி, ஜானகி, இருவரும் நம் அண்டைவீட்டுப் பெண்மணிகள் என்பதும், உன்னுடன் சேர்ந்து, 'வாணி ராணி', 'தீர்க்க சுமங்கலி', திருடி' ஆகிய படங்களைப் பார்த்தவர்கள் என்பதும் தெரிந்ததே.)

லடாய்!

எனவே, நீ உடனே வருவதற்கு முயற்சி செய். இல்லையென்றால் 'துரைசாமி — அமிர்தம் லடாய்!' என்று காந்தாமணியும் ஜானகியும் அக்கம்பக்கத்தில் வதந்தி பரப்பிவிடுவார்கள்.

இப்படிக்கு,

துரைசாமி

தந்தி குமாஸ்தா:



அம்மா வீட்டில் 37 நாட்களா? போதும். புறப்படு.

கிருஷ்ணமூர்த்தி


Hosiery made of pure
GRASIM
STAPLE FIBRE
has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability
If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.
THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)

உங்களுக்கு மிகவும் விருப்பமானது
இப்போது நிரந்தரமான டப்பாக்களில்!

ஸ்பென்ஸர்ஸ்
ரெட் பாண்ட் அல்லது
கிரீன் லேபல் தேயிலை

அழகான பிளாஸ்டிக் டப்பாக்களில் கிடைக்கிறது.



கவர்ச்சியும் உறுதியும் மிக்க
இந்த டப்பாக்களை நீங்கள்
பல விதங்களில் பயன்படுத்தலாம்.
ஸ்டாக் தீர்வதற்கு முன்
இன்றே முந்துங்கள்.



தற்சமயம்
சென்னையில்
மட்டுமே
கிடைக்கிறது.

ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்

FDS ST 3010 TAM A



எதற்குப் பயப்படுகிறீர்கள்?

எதைக் குறித்து நீங்கள் அதிகமாகப் பயப்படுகிறீர்கள்? மரணத்தை எண்ணியா? நோயைக் கருதியா? திவாலாகி விடுவோமோ என்றா? தனிமையை முன்னிட்டா ?

இவை உதாரணங்கள்தாம். ஆண்களும் சரி, பெண்களும் சரி பயப்படுகிற காரணங்களுக்கு ஓர் எல்லையே கிடையாது! இது விஷயமாகச் சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் போது மூவாயிரம் மக்கள் பேட்டி காணப்பட்டனர். 'எதைக் குறித்துப் பயப்படுகிறீர்கள்?' என்று வினா எழுப்பப்பட்டது. இவர்களில் மிக அதிகமான எண்ணிக்கையினர் — நாற்பத்தொரு சதவிகிதத்தினர் — கூறிய பதில் மலைக்க வைப்பதாய் இருந்தது. அந்தப் பதில்:

''நாலு பேர் முன்னிலையில் எழுந்து நின்று பேசப் பயப்படுகிறேன்!'' இதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட இதர காரணங்களும் படிப்படியான சதவீதப் பட்டியலும் பின்வருமாறு:

உயரத்தில் நின்று அதளபாதாளத்தைப் பார்க்கப் பயம் 32 சதவீதம்; பூச்சிகளுக்குப் பயம் 22 சதவீதம்; ஆழமான நீர்நிலைகளில் இறங்க பயம் 22 சதவீதம்; தனது பொருளாதாரச் சீர்குலைவு குறித்து அச்சம் 22 சதவீதம்; நோய் அல்லது மரணம் பற்றிய பீதி 19 சதவீதம்; விமானமேறிப் பறக்க அச்சம் 18 சதவீதம்; தனிமை பற்றிய பயம் 14 சதவீதம்; நாய்களைக் கண்டு திகில் 11 சதவீதம் !

ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களுக்குப் பயப்படலாம். ஆதலால் மேற்படி சதவீதங்களைக் கூட்டினால் நூறு வராது.

ஆண்களைவிடப் பெண்கள் எதற்கு அதிகமாகப் பயப்படுவார்கள்? இந்தப் பேட்டி அதையும் கண்டு பிடித்தது. உயரமான இடங்கள், பூச்சிகள், ஆழமான நீர் நிலைகள், விமானத்தில் பறத்தல், கார் ஓட்டுதல் — இவற்றுக்கு ஆண்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமான எண்ணிக்கையில் பெண்கள் அஞ்சுகின்றனர்.

ஆண்களை விட மூன்று மடங்கு அதிகமான எண்ணிக்கையில் பெண்கள் இருளுக்கும் 'லிஃப்ட்'டுக்கும் பயப்படுகிறார்கள். பொதுவாகப் பெண்கள் நாய்க்கும், நோய், மரணம் ஆகியவற்றுக்கும் ஆண்களைக் காட்டிலும் அதிகமாக அஞ்சுகின்றனர்.

இயற்கைக்கு மாறான பயங்கள்!

இவையெல்லாம் இயற்கையாக நம்மை அச்சத்தில் ஆழ்த்தும் விஷயங்களுள் சிலவே. ஆனால் இயற்கைக்கு மாறான விதத்தில் பயப்






படுகிறவர்கள் உலகெங்கணும் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். இவற்றில் 128விதங்களை மனத்தத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். உதாரணத்துக்குச் சில:

விஷத்தை எண்ணி அஞ்சுதல்; உயிரோடு புதைக்கப்படுவோமோ என்று பயப்படுதல்; வெட்டவெளி கண்டு பீதியுறல்; பூனையைப் பார்த்து நடுங்குதல்; கண்ணம் சிவக்க அசடு வழிவோமோ என்ற கவலையில் பயப்படுதல்!

புழுக்கள், உலராத வர்ணம், மின்னல்?, பறவைகள்,



2-ம் பக்க 'க்விஸ்'ஸுக்கு விடை இதோ !

O-O-O-O-O-O-O-O-O-O-O-O-O-O-O-O-O

கூரிய பொருள்கள் போன்றவை யெல்லாம் பலப் பலருக்கும் பயத்தை உகப்பி விடக் கூடியவையே !

பிரசித்திபெற்ற பயங்கள் !

உலகப் பிரசித்தி பெற்றுள்ள சிலர் அசாதாரணமான பயங்களுக்கு ஆளாவது உண்டு. ஃபீல்ட் மார்ஷல் ராபர்ட் பிரபு சேனைக்குப் பயப்படமாட்டார்; பூனைக்குப் பயப்படுவார்! சைகோஃப்ஸ்கை என்ற ருஷ்ய இசை மேதை தமது தலை தனியே கழன்று விழுந்துவிடுமோ என்று சதா அஞ்சிக் கொண்டிருந்தார். மார்ட்டின் லூதர் கிங்குக்கு இடிஇடித்தால் குலை நடுக்கம். டென்மார்க்கின் ஆறுவது ஃபிரெடரிக் மன்னர் மூக்குக் கண்ணாடி அணிய பயப்பட்டார். அமெரிக்க விண்வெளி வீரர் ஜான் க்ளென் நீர் மூழ்கிக் கப்பலில் பிரயாணப்பட மறுத்துவிட்டார். டென்னிஸி வில்லியம்ஸ் என்ற நாடகாசிரியர் மேஜை மீது கத்தி ஃபோர்க் போன்றவற்றை வைத்துக் கொண்டு உணவருந்தமாட்டார். கூரிய பொருள்களைக் கண்டால் அவருக்குப் பயம். ரிச்சர்ட் பார்ட்டன் எந்த நேரத்தில் தம்மைச் சுற்றி விசிறிகளின் கூட்டம் வந்து மொய்க்குமோ என்று சதா மிரண்டு கொண்டிருப்பார்.

உளறிக் கொட்டி, கிளறி மூடி.....

மேடை ஏறுதல் என்பது உலகப் புகழ் பெற்ற நடிகர்களுக்கும் சரி, புது முகங்களுக்கும் சரி அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதுதான். ஒத்திகையில் அபாரமாக நடித்தவர் மேடை ஏறியதும் பயந்து போய் உளறிக் கொட்டிக் கிளறி மூடுவதைப் பார்க்கிறோம். ஆனால் சில நடிகர்கள் மேடைப் பயம் தங்களுக்கு உதவுகிறது என்கிறார்கள். தப்புப் பண்ணாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை சதா எச்சரிக்கையுடன் இருக்கச் செய்கிறதாம். நடிப்பு இதனால் சிறக்கிறதாம் !

விமானமேறப் பயப்படுவதில் விநோதமில்லை என்று மனத்தத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். மனிதன் பூமியில் கால் பாவி நடக்கப் பிறந்தவன். அவனைப் பறக்கச் சொன்னால் பதற்றமடைவதில் வியப்பென்ன ? இதில் வேடிக்கை என்னவென்றால் கணக்கெடுப்பின்படி காரில் போவதால் ஏற்படும் விபத்துக்களே அதிக உயிர்ப் பலி வாங்குகின்றன. ஒப்பு நோக்குகையில் விமான விபத்துக்களில் மரணமடைவோர் எண்ணிக்கை மிகவும் குறைவு. விமானத்தைவிட கார் பதினேழு மடங்கு அதிக ஆபத்தானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

நூதனமான ஒரு சங்கம் !

நியூயார்க்கில் 1969ம் ஆண்டில் நாதன் காட் என்பவர் ஒரு நூதனமான சங்கம் ஏற்படுத்தினார். ''அச்சமின்றிப் பறக்கலாம்'' என்பது இதன் பெயர். நாதன் காட் தாம் விமானமேறப் பயந்ததால் பல்வேறு வியாபாரங்களில் ஏழே முக்கால் லட்ச ரூபாய் நஷ்டம் அடைந்திருப்பதாகக் கணக்குப் போட்டார். இதே நிலை வேறு பலருக்கும் ஏற்பட வேண்டாம் என்ற நல்லெண்ணத்தில் மேற்படி சங்கத்தைத் தொடங்கினார். இதில் சேர்ந்தவர்கள் மனத்தத்துவ நிபுணருடன் பேசித் தமது அச்சத்தை வெற்றி கொண்டனர்.

இருட்டைக் கண்டு பயப்படுகிறவர்களுக்கு மனத்தத்துவ நிபுணர்கள் கூறும் யோசனை: தூங்கப் போகுமுன் கொலை, கொள்ளை, கொடுமை, பலாத்காரம் போன்ற சம்பவங்களை உடைய நாவல்களைப் படிக்காதீர்கள். ரேடியோ சங்கீதத்தையோ அல்லது உங்களுக்குப் பிடித்தமான இசைத் தட்டையோ கேட்ட கையோடு கண் மூடி உறங்குங்கள்.

இயற்கை இயல்புக்கு மாறான விதத்தில் பயப்படுவது ஒரு காலத்தில் மூளைக் கோளாறு எனக் கருதப்பட்டது. ஆனால் இப்போதெல்லாம் மனத்தத்துவ நிபுணர்கள் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் காரணமாய் இத்தகைய மனநோய்கள் ஏற்பட்டு அவையே பழக்கமாகியும் விடும் எனச் சொல்கின்றனர்.

அச்சத்தை வெல்ல வழி !

பயத்துக்கு மனத்தின் ஆழத்தில் ஏதோ ஒரு காரணம் இருக்க, வெளிப்படையாகத் தெரிய வருவது வேறு ஓர் அசாதாரணமான அச்சமாகவும் இருப்பதுண்டு. உதாரணமாக மாமியாரைக் கண்டு குலை நடுக்கம் கொண்டுள்ள நாட்டுப் பெண் இண்டு இடுக்குகள், மூலை முடுக்குகள், சாத்தப்பட்ட கதவு போன்றவற்றுக்குப் பயந்து கலக்கமடையலாம் !

பயப்படுகிறவர்கள் அது குறித்து வெட்கப்பட வேண்டியதில்லை என்கிறார் ஒரு பிரபல மனத்தத்துவ நிபுணர். ஏனெனில், உண்மையில் பார்க்கப் போனால் ஆரோக்கிய மனம் கொண்டவர்களைவிட அவர்கள் அதிகத் தைரியத்துடனேயே இருக்கிறார்கள். எப்படி?

அச்சத்தை எதிர்கொள்வதுதான் அதை வெல்ல ஒரே வழி. அச்சமில்லாதவர்களுக்கு அச்சத்தை எதிர்கொள்ளத் தேவைப்படும் தைரியம் அற்ப சொற்பம்தான். ஆனால் அச்சமுள்ளவர் அச்சத்தை எதிர்கொள்ளும் போது அளப்பரிய தைரியத்துடன் செயல்படுகிறார் அல்லவா ?

ஆங்கிலத்தில்: ஜ்யாஃப்ரே கிராண்ட்
தமிழாக்கம் : குட்டி கிருஷ்ணன்
புகைப்படம் : உத்தரா

பினகா ஃப்ளோரைட்* பற்பசை வலிதரும் சொத்தையையும் பற்சிதைவையும் தடுக்கிறது


ஆகவே நீங்கள் அதை உபயோகிக்க வேண்டும்

பல் வைத்தியர்களும் ஆராய்ச்சி விஞ்ஞானிகளும் இதை ஊர்ச்சிதம் செய்கின்றனர்

*"பற்சிதைவைக் காப்பதில் பெரும்பகுதி ஃப்ளோரைட் என்று நமக்கு இப்பொழுது தெரியும். பல் ஆரோக்கிய துறையில் விஞ்ஞான ஆராய்ச்சி தந்த ஒரு பெரும் சாதனை ஃப்ளோரைட்"—

"தி ஜெர்னல் ஆஃப் மெடிகல் கிளூஸ் (தி மெடிசின் & சர்ஜன் VIII 252-57 பிப். 1967)".

பினகா ஃப்ளோரைடினுல் பல்துலக்குங்கள் பற்களை உறுதியாக வைத்திருங்கள்




பினகா டூத் பிரஷ்ஷிலுள்ள மழுக்கப்பட்ட முனைகள் ஈறுகளுக்கு ஊறு செய்யாது

CIBA

ULKA-CF-33 TM


எதிலும் முதலாய் நின்றவர்



ஆரம்பப் பள்ளி பாலர் வகுப்பிலிருந்து சட்டக் கல்லூரி எம். எல். பரீட்சை வரை முதல் இடத்தையே பிடித்துப் பரிசுகளையும் தங்கப் பதக்கங்களையும் மொத்தமாகக் குத்தகை எடுப்பது என்பது எல்லோருக்கும் கை வரக்கூடிய கலை இல்லை. இந்தக் கலையில் தேர்ந்தவர் சமீபத்தில் தம் தொண்ணூறாவது வயதில் காலமான திரு ஆர். வி. கிருஷ்ணையர்.

ராஜாஜி அவர்கள், 1952ல் தாம் முதலமைச்சர் பதவிக்கு வந்த போது 1941ம் ஆண்டில் ஓய்வு பெற்ற ஆர். வி. கிருஷ்ணையரை இரண்டாவது தடவையாகச் சட்ட மன்றக் காரியதரிசியாக நியமித்தார். 1921ம் ஆண்டில் பார்த்த உத்யோகத்தை மீண்டும் ஏற்றார் ஆர். வி. கிருஷ்ணய்யர்.

1955ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ந் தேதி யன்று



சென்னை சட்ட மன்றம் திரு ஆர். வி. கிருஷ்ணையரின் சேவையைப் பாராட்டிப் பேச ஒரு முழு நாளை எடுத்துக் கொண்டது. இந்தப் பெருமை, இதற்கு முன்னரோ, அல்லது பின்னரோ யாருக்கும் கிடைத்த தில்லை.

பொதுவாக, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு, சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா பிரசங்கங்கள் நிகழ்த்த வாய்ப்பு அளிப்பதில்லை. இந்தச் சம்பிரதாயம் முதல் தடவையாகத் திரு ஆர். வி. கிருஷ்ணையருக்காகக் கைவிடப்பட்டது. 1933ம் ஆண்டில் அண்ணாமலை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரதான விருந்தினராக இவர் சொற்பொழிவு ஆற்றினார்.

1902ம் ஆண்டில் தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரி மாணவராக இருந்தபோது, கல்லூரியிலேயே சிறந்தமாணவராக இருந்ததால், முக்கிய நிகழ்ச்சிகளின் போது ஆசிரியர்கள், முதல்வருடன் முதல் வரிசை ஆசனத்தில் சரிசமமாக அமர்வதற்கு இடம் பெற்றார். இதிலும் முன்னோடி தான் ஆர். வி. கிருஷ்ணையர்!

இவர் ஈரோட்டில் முனிசிப் உத்தியோகம் பார்த்தபோது ஈ. வே. ராமசாமி நாயக்கரின் நட்பு தோன்றி வளர்ந்தது. சேலத்துக்காரரான இவருக்கு ராஜாஜியின் நட்பு ஏற்கனவே கிடைத்து விட்டிருந்தது. கடைசி மூச்சு இருக்கும் வரையில் இம்மூவரும் பரஸ்பரம் சிறந்த நண்பர்களாகவே விளங்கினார்கள்.

ஆங்கிலேய அரசாங்கம் இவரது தகுதியை உணர்ந்து கௌரவிக்கத் தயங்கவில்லை. 1924ம் ஆண்டில் ராவ் பகதூர் பட்டத்தையும், 1933ம் ஆண்டில் திவான் பகதூர் பட்டத்தையும் 1941ம் ஆண்டில் ஸி. ஐ. இ. விருதையும் வழங்கிக் கௌரவித்தது. ஆனால் 1940ம் ஆண்டில் இவரை அரசாங்கக் கல்வித் துறைக் காரியதரிசியாக நியமித்தபோது இவருக்கு முதல்தடவையாக ஒரு விசேஷ கௌரவம் அளித்தது.

ஆங்கிலேய ஐ. ஸி. எஸ். வர்க்கத்தினருக்கே என்று அதுவரையில் ஒதுக்கப்பட்டு வந்த கல்வித் துறைக் காரிய தரிசிப் பொறுப்பு ஐ. ஸி. எஸ். அல்லாத இந்தியருக்கு முதல் தடவையாகக் கொடுக்கப்பட்டது!

கடைசி வரை ஒரு சிறந்த வாசகராகவும், விமரிசகராகவும் விளங்கினார். எந்தப் புத்தகத்தையும் ஆழ்ந்த கவனத்துடன் படித்து அதன் கருத்துக்களை ஆண்டுகள் பல கழிந்தும் அப்படியே நினைவு வைத்துக் கொண்டு சொல்லும் ஆற்றல் இவருக்கு உண்டு. ராஜாஜி இவரைப் பல புத்தகங்களுக்கு விமரிசனம் எழுதச் செய்திருக்கிறார்!

தாம் படித்த நாட்களில் பெற்ற தங்கப் பதக்கங்களையும் பரிசுகளையும் தம் சந்ததி



களிடம் பிற்காலத்தில் காண்பித்து மகிழ்ச்சி யடைய இவர் நினைத்திருக்கலாம்! ஆனால் அதற்கு ஒரு திருடன் இடம் கொடுக்கவில்லை. 1927ம் ஆண்டில் இவர் மயிலாப்பூர் மாட வீதியில் வசித்து வந்தபோது ஒரு திருடன் வீட்டில் புகுந்து லட்ச ரூபாய் பெறுமான உடைமைகளைக் கொள்ளையடித்துப் போனான். அந்த இழப்பில், இவர் வாங்கிக் குவித்திருந்த பதினேழு தங்கப் பதக்கங்களும் பங்கு பெற்று விட்டன.

இந்த ரக மொத்த நஷ்டத்திலும் கூட இவர் முதல்வர் தான்!

— கோமதி சுவாமிநாதன்

சீன்.

முதலில் அதுதான் தெரிந்தது. சோமு அதை எடுத்துப் பார்த்தான். வலது கண்ணா? இடது கண்ணா? அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அதில் — அதன் பார்வையில் — ஒரு குளுமை இருக்கிறது என்று மட்டும் அவனுக்குத் தெரிந்தது.

குப்பையைக் கிளறினால் மற்ற துண்டுகளும் கிடைக்கும். சோமு கிளறத் தொடங்கினான்.

''டேய், சோமு.... அங்கே என்ன பண்ணறே? சீக்கிரம் வாடா...'' சோமுவின் தந்தை எட்டியப்பனின் குரல் கேட்டது. குப்பை வண்டியோடு அவன் புறப்படுவதற்குத் தயாராக இருந்தான்.

''இதோ வந்துட்டேன், நாயினா !'' என்றான் சோமு வேகமாகக் குப்பையைக் கிளறியபடி. இப்போதே தேடிப் பார்த்தால்தான் ஆயிற்று. இல்லாவிட்டால் தொடர்ந்து வண்டிகள் வந்து குப்பை மேல் குப்பைகள் சேர்த்துவிடும்.

மகன் எதையோ தேடுகிறான் என்று எட்டியப்பனுக்குத் தெரிந்தது. அது அவர்கள் வழக்கம். குப்பையைக் கிளறினால் நாலணா— எட்டணா கிடைக்கும். டீ குடிக்க ஆகும்.

கிருஷ்ணாம்பேட்டை குப்பை மேடு அது. சுற்று வட்டாரத்தில் உள்ள குப்பைகூளங்களை மாட்டு வண்டியில் கொண்டு வந்து அங்கே குவிப்பதும், பிறகு லாரியில் ஒட்டு மொத்தமாக ஏற்றிக் கொண்டு போவதும் தினசரி நடக்கிற வேலை. எட்டியப்பனுக்கும் அவன் மகனுக்கும் அதுதான் ஜீவனம்.

வெயில் ஏறிக் கொண்டு வந்தது. எட்டியப்பன் எரிச்சல்பட்டான். ''டேய், சோமு!'' என்று கத்தினான்.

'' இதோ... இதோ.... வந்துட்டேன்...'' என்று ஓடி வந்தான் சோமு. அவன் கையில் கிழிந்த போட்டோத் துண்டுகள். ஒன்று பாக்கியில்லாமல் கிளறி எடுத்துவிட்டான்.

''என்னடா தேடினே ?''

''ஒண்ணுமில்லே, நாயினா....''

''ஏதாவது கிடைச்சதா ?''

''ஒண்ணுமில்லே நாயினா !''

''மூஞ்சியைப் பாரு, ஏறுடா சீக்கிரம்....''

சோமு ஏறிக் கொள்ளவுமே வண்டியைக் கிளப்பினான் எட்டியப்பன். சோமு அந்தப் போட்டோத் துண்டுகளைப் பத்திரமாகச் சட்டைப் பையில் திணித்துக் கொண்டான்.

சாயந்திரம் வீட்டுக்குப் போனதும் தங்கத்தோடு உட்கார்ந்து ஒவ்வொரு துண்டாக ஒட்டிப் பார்க்க வேண்டும்.

***

மழைக் காலம்.

இருள் கவிந்து கடற்கரை வெறிச்சோடிவிட்டது. நீர்த் திவலைகளோடு வீசிய குளிர்க் காற்று. உஷாவோடு ஒட்டி — சொல்லப் போனால் அவளை அணைத்தாற்போல் — அமர்ந்திருப்பதில்தான் எத்தனை சுகம் !

உஷாவுக்குச் சுகமாய்த்தான் இருந்தது. ஆனால் பயமாகவும் இருந்தது. யாராவது வந்துவிட்டால்....? இப்போதெல்லாம் கடற்கரையில் 'செக்ஸ்' அதிகமாகிவிட்டதென்று போலீஸ் 'பீட்' போட்டிருக்கிறார்களாம்.

''போகலாமா?'' என்று கேட்டாள் உஷா.

மூர்த்தி பதில் சொல்லவில்லை. இன்னும் நெருங்கி அமர்ந்து, புதிதாக ஒரு 'சில்மிஷம்' செய்யத்தொடங்கினான். உஷாவுக்கு எங்கோ போவது போல் ஓர் அனுபவம். அது அவளுக்கு இன்னும் பயமாய் இருந்தது.

'சட்'டென்று தன்னை விடுவித்துக் கொண்டு ''போகலாம் மூர்த்தி'' என்று எழப்போனாள். மூர்த்தி அவள் கையைப் பிடித்து அமர்த்திவிட்டு, ''உஷா! மணி இப்போதுதான் ஏழரை ஆகிறது. வேறு எங்காவது போய்க் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு.....'' என்று இழுத்தான்.

இப்படி அவன் அவளை எத்தனையோ முறை அழைத்திருக்கிறான். அப்போதெல்லாம், 'ஐயையோ.... அதெல்லாம் இப்போது கிடையாது.....' என்று உஷா மறுதளித்துவிடுவாள். ஆனால் இன்று...? மூர்த்தி மூட்டிவிட்ட தீ இந்த முறை அணையவில்லை.

'' வேறு எங்கே போவது ? அதுவும் இந்த நேரத்தில்.....?''

'' ஏதாவது லாட்ஜுக்கு....''

லாட்ஜ் ! உஷாவுக்குக் கசப்பாய் இருந்தது. 'வேண்டாம் வேண்டாம்' என்று தலையசைத்தாள்.

மூர்த்திக்கு ஏமாற்றம். கொஞ்சம் கோபமும்கூட. ''இதோ பார், இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நீ என்னை ஏங்க வைக்கப் போகிறாய் ?'' என்று கேட்டான்.

'' அதைத்தான் நானும் கேட்கிறேன். இன்னும் எத்தனை காலம் நான் காத்திருப்பது ?'' என்று பதிலுக்குக் கேட்டாள் உஷா. அவளுக்குக் கோபம் என்று சொல்ல முடியாது. தாபம்.



''உனக்கு ஆயிரம் முறை சொல்ல வேண்டும். வேறு வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். அது கிடைத்ததும் கல்யாணம் தான்......''

''பழைய பல்லவிதானே ?'' என்று சற்று விரக்தியோடு சிரித்தாள் உஷா. இருந்தாலும் மூர்த்தி சொல்வது ஒரு வகையில் நியாயம் என்று உணர்ந்தாள். இப்போது இருக்கும்

வேலையில் இரண்டு பேருக்கும் சுமாரான சம்பளம்தான். மூர்த்தி முயற்சி செய்கிற வேலை கிடைத்தால் கணிசமான சம்பளம் வரும்!

அது வரையில் அவள் காத்திருக்கத் தயார் தான். ஆனால் மூர்த்தி.....?

மௌனமாயிருந்த மூர்த்தியைப் பார்த்தாள் உஷா. ''என் மேல் கோபமா ?''

''நோ...நோ.... கோபமென்ன வேண்டிக் கிடக்கிறது? தினமும் சாயந்திரம் சந்திக்கிறோம். ஹோட்டலில் சாப்பிடுகிறோம். பிறகு சினிமாவுக்கோ பீச்சுக்கோ போகிறோம். இதைத் தவிர நமக்குள் வேறு என்ன இருக்கிறது? தேர் இஸ் நத்திங் பிட்வீன் அஸ்...'' என்றான் மூர்த்தி.

உஷாவுக்கு அது நெஞ்சில் உரைத்தது. 'நத்திங் பிட்வீன் அஸ். — நம்மிடையில் ஒன்றும் இல்லை.' சலிப்பின் உச்சியில் ஓர் ஆண் பேசக்கூடிய வார்த்தை. அந்தச் சலிப்பு எல்லை மீறிப் போய் அவன் கவனம் வேறு பக்கம் திரும்பிவிட்டால்...?

அறிந்தோ அறியாமலோ மூர்த்தியிடம் உள்ளத்தைக் கொடுத்தாயிற்று. இனி உடலைக் கொடுப்பதில் என்ன தவறு ?

''இதோ பாருங்கள்... இனியும் நான் உங்களை ஏமாற்றப் போவதில்லை. நாளைக்கு நாம் எங்காவது போகலாம்....'' என்றாள் நாணத்தோடு.

எங்கே போவது ?

அது இது என்று யோசித்துக் கடைசியில் காஞ்சிபுரம் போவது என்று தீர்மானித்தார்கள். லாட்ஜுக்குப் போனாலும் தெரிந்தவர் கண்களில் தட்டுப்படாமலாவது இருக்கலாம்.

''ஸ்கூட்டரிலேயே போய்விட்டு வந்துவிடலாம். நீ ஒன்பது மணிக்கெல்லாம் ஜஸ் ஹவுஸ் பஸ் ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்துவிடு....'' என்று கூறினான் மூர்த்தி. அவன் மனத்தில் எவ்வளவோ உத்ஸாகம். ஏதேதோ எண்ணங்கள்.

நாளை ஒரு நாள் — உஷாவுக்கு அந்தச் சுகத்தை உணர்த்திவிட்டால் போதும். ருசி கண்ட பூனையாக மாறிவிடுவாள். அதற்குப் பிறகு ஒரு மாதமோ, இரண்டு மாதங்களோ! அவ்வளவுதான். ஆசை தீர்ந்ததும் சொல்லாமல் — கொள்ளாமல் பம்பாய்க்கோ, டில்லிக்கோ பறந்து போய்விடலாம்.

ஃஃஃ


குடிசைக்குள் காடா விளக்கின் மங்கல் வெளிச்சத்தில் — சோமுவும் தங்கமும் ஒவ்வொரு துண்டாக ஆராய்ந்து ஒட்டிக் கடைசியில் அந்தப் புகைப் படத்தில் ஒரு பெண்ணின் முகம் முழுவதும் தெரிந்ததும் — தங்கத்தின் முகத்தில் ஏதோ சிந்தனைகள் படர்ந்தன.

''மச்சான் ! இந்தப் பொண்ணை நான் பார்த்திருக்கேன் மச்சான்!'' என்றாள் சிந்தனையோடு.

சோமு அந்த முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். களையான முகம்! அது



சிரித்தாரே வாழ்வார்!



பிராணி இயல் பிரிவு ஒன்றில் வேலைக்குப் பேட்டிக்காகப் போயிருந்த ஒருவனிடம் பேராசிரியர் கேட்டார்: "ரானா ஹெக்ஸாடாக்டைலா என்றால் என்ன அர்த்தம்?"

"எனக்கு இங்கே வேலை கிடையாது என்று அர்த்தம்" என்றான் வந்தவன் எழுந்து கொண்டே.



ஒரு கேள்வி: "புத்திசாலிகள்தான் நல்ல கணவன்மார்களாகிறார்களா?"

ஒரு பதில்: "புத்திசாலிகள் கணவன்மார்களாவதேயில்லை!"

மரணப் படுக்கையில் கிடந்த பணக்காரத் தந்தையின் இறுதிச் செலவிலும் சிக்கனம் பார்க்க நினைத்த கஞ்ச மகன்கள் அவர் காதில் விழாது என்று எண்ணிப் பேசிக் கொண்டிருந்தார்கள்:

"காரில் புதைக்க எடுத்துக் கொண்டு போனால் பெட்ரோல் செலவு நிறைய ஆகும். குதிரை வண்டி போதுமே?"

"குதிரை வண்டியானாலும் இடுகாடு ஐந்து மைல் தூரம். அதிகப் பணம் கேட்பானே."

தந்தை சொன்னார்: "மூலையில் இருக்கும் என் 'வாக்கிங்' ஸ்டிக்கை எடுங்கள். நான் நடந்தே வந்து விடுகிறேன்!"





ஜட்ஜ்: "நீ திருடும்போது பார்த்தவர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள்!"

குற்றவாளி: "நான் திருடும்போது பார்க்காதவர்கள் முந்நூறு பேர் இருக்கிறார்களே!"



"இரண்டு பெண்களைக் கல்யாணம் செய்து கொள்பவனை எப்படித் தண்டிப்பது?"

"அவனைத் தண்டிக்க வேண்டாம். அவனுக்குத்தான் இரண்டு மாமியார்கள் இருப்பார்களே! போதாதா?"

நன்றி: ஹாரி ஹார்ஷ்ஃபீல்டு ஜோக் புக்
தொகுப்பு: முரளி.

எப்படிச் சுக்கல் சுக்கலாகக் கிழிந்து குப்பைக்கு வந்து சேர்ந்தது?

"ஆ! ஞாபகம் வந்திருச்சி. பஸ் ஸ்டாண்டிலே பார்த்திருக்கேன். எல்லாரும் ஆபீசுக்குப் போற வேளையிலே அடக்க ஒடுக்கமாக — லட்சணமாக வந்து நிக்கும்..." என்று கூறியபடி தங்கம் அந்தப் போட்டோவைத் தகரப் பெட்டிக்குள் வைத்தாள்.

"இந்தா...அதை ஏன் பெட்டியிலே வைக்கிறே? எவளோ ஒருத்தி — எவனோ ஒருத்தனுக்குக் கொடுத்திருக்கா. அதை அவன் கிழிச்சுக் குப்பையிலே போட்டிருக்கான். நீ என்னடான்னா பத்திரப்படுத்தறே" என்று கொட்டாவி விட்டான் சோமு. பைசாவுக்குப் பிரயோசனமில்லாத வேலை, அந்தப் போட்டோவை ஒட்டியது.

"சும்மா இரு மச்சான். நாளைக்கு அந்தப் பொண்ணைப் பார்த்து இந்தப் படத்தைக் கொடுக்கப் போறேன். அவளுக்கு ஆச்சரியமா இருக்குமில்லே!"

"என்ன எழவோ...." என்று கூறியபடி சோமு நீட்டி நிமிர்ந்துவிட்டான்.

ஃஃஃ

மறு நாள் காலை ஒன்பது மணி.

பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தாள் உஷா. வெயிலின் வெம்மை இல்லையென்றாலும் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது.

காஞ்சிபுரம் போய்ச் சேர்ந்தபின் என்னென்ன நடக்கும் என்று அவளுக்குத் தெரியாது. ஆனால் எது நடக்கக் கூடாதோ அது நடந்துவிடும். அதற்குப் பிறகு....?

ஏனோ அவள் இதுவரை பார்த்த நாடகங்கள் — சினிமாக்கள் — படித்த கதைகள் எல்லாம் இப்போது நினைவுக்கு வந்து ஏமாற்றப்பட்ட பெண்ணின் மானசிக வடிவங்கள் விசுவரூபமாய் நின்றன.

மூர்த்தி தம்மை அப்படி ஏமாற்றிவிடுவாரா? இல்லை, நிச்சயமாக இல்லை.

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கடிகாரத்

மின் சக்திக்கு ஒரு ஊக்கசக்தி



பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட், போபால்

நீர், அனல் மின் நிலையங்களின் உற்பத்தி, வினியோகம், உபயோகம் ஆகிய பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் முதன்மையான, ஒரே தொழிலகம் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட், போபால். இவை அனைத்தும் ஒரே இடத்தில் முழுமையாகத் தயாரித்து அளிக்கப்படுகின்றன.

ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிலகம் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ், போபால். நாட்டின் மின் உற்பத்தியைப் பிரமிக்கத் தக்க வகையில் பெருக்கியுள்ளது. கணக்கிலடங்காத மிகப் பெரிய மின் திட்டங்களுக்கு கனரக மின் கருவிகளை அளித்துள்ள BHEL போபால் நிறுவனம் மின்சார ரயில் போக்குவரத்து சாதனங்களின் தேவைகளிலும் தன்னிறைவு பெற முன்னோடியாக விளங்கி வருகிறது.

இன்று BHEL போபால் நிறுவனத்தில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை 19,500 ஆகும். இவர்களில் பயிற்சிபெற்ற பொறியாளர்கள் சுமார் 1300 பேர். சுமார் 80 துணைத் தொழிலகங்களின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது.

வளர்ந்துவரும் நம்முடைய பொருளாதாரத்துக்கு இது பெரும் வரப் பிரசாதமாகும். இன்றுவரை, அதன் நிகர உற்பத்தி சுமார் 295 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும்.

தன் தேவைகளுக்கு பிற நாடுகளை இந்தியா சார்ந்திருக்கவேண்டிய நிலையை BHEL-போபால் நிறுவனம் தவிர்த்திருக்கிறது. அது மட்டுமின்றி, கடுமையான சர்வதேச போட்டிக் கிடையே BHEL-போபால் நிறுவனம் பாராட்டத்தக்க வகையில் பல மின் சாதனங்களை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்துள்ளது.

நாட்டினை வலுப்படுத்த பல்வேறு மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் லட்சியத்தை நோக்கி BHEL-போபால் நிறுவனம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

BHOPAL

மக்களுக்கு சக்தி

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்
லிமிடெட்
போபால் 462 022


SAA/BHEL/1205

பிரபல பழனி வைத்தியராஜ்

டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களிடம் கீழ்க்கண்ட இடங்களில் நேரில் வைத்திய ஆலோசனை பெறலாம்



சந்திக்கும் விலாசங்கள்

10-ந் தேதி திருப்பத்தூர் (N. A.): சங்கர் கபே பகல் 1 மணி முதல் 2-30 மணி வரை.

10-ந் தேதி ஆம்பூர்: N. A. B. லாட்ஜ், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை.

11ந் தேதி வேலூர் (N.A.): அஜீஸ் மேன்ஷன்ஸ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

11-ந் தேதி குடியாத்தம்: அலங்கார் லாட்ஜ் பகல் 1 மணி முதல் 3 மணி வரை.

12-ந் தேதி பெங்களூர் ஸிடி: நியூ எவரெஸ்ட் ஹோட்டல், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

13-ந் தேதி கிருஷ்ணகிரி: ஸ்ரீ ராம் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

13-ந் தேதி தர்மபுரி: சீனிவாசா லாட்ஜ் காலை 11 மணி முதல் 12 மணி வரை.

13-ந் தேதி சேலம்: லக்ஷ்மி ராஜபவன் லாட்ஜில், பகல் 2 முதல் 5 மணி வரை.

15-ந் தேதி ஈரோடு: நவபவனம் லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

15-ந் தேதி திருப்பூர்: ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

15-ந் தேதி பொள்ளாச்சி: ஹோட்டல் கீதாஞ்சலி, மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை.

16-ந் தேதி கோவை: விஜயா லாட்ஜ், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

17-ந் தேதி சென்னை: ஸ்ரீலேகா ஹோட்டல் மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

18-ந் தேதி சென்னை: ஸ்ரீலேகா ஹோட்டல் காலை 9 மணி முதல் 12 மணி வரை.

19-ந் தேதி பம்பாய்: சாரதா பவன் (மாதுங்கா), காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்

1898

முதல் பிரசித்தி பெற்றது

பண்டிட் D. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட் - சென்னை-17.

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹடன்ஸா

களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

Bensons-2141 TAM

தைப் பார்த்தாள். 'இன்னும் அவர் வரவில்லையே...!' என்று அவள் உள்ளூறச் சலித்துக் கொண்ட போது—

''அம்மா... தங்கச்சி...'' என்று பின்புறமிருந்து வந்த குரல் கேட்டு உஷா திரும்பிப் பார்த்தாள்.

தங்கம் நின்றிருந்தாள் புன்னகையோடு.

''என்னையா கூப்பிட்டீங்க....?'' என்று கேட்டாள் உஷா.

''ஆமாம்மா...இது...உங்க படந்தானே?'' என்று சேலை மடிப்பிலிருந்து தங்கம் அந்தப் போட்டோவை எடுத்து நீட்ட—

அதை வாங்கிப் பார்த்த உஷா திகைத்து விட்டாள். அவள் படம்தான்.

''குப்பையிலே கக்கல் கக்கலாக் கிழிஞ்சு கிடந்தது. எங்க வீட்டுக்காரர் எடுத்தாந்து விளையாட்டா ஒட்டிப் பார்த்தோம்.....''

உஷா விக்கித்துப் போனாள். அவள் போட்டோ— அவளாகவே விரும்பி மூர்த்தியிடம் கொடுத்தது — அது எப்படிக் குப்பையில் சேர்ந்தது ?

ஒன்றும் விளங்காமல் உஷா நின்றுகொண்டிருந்தபொழுது, ஸ்கூட்டரைக் கொண்டு வந்து அருகில் நிறுத்தினான் மூர்த்தி. ''சாரி உஷா... ஸ்டார்ட்டிங் ட்ரபிள்....'' என்று கூறியபடி தங்கத்தைப் பார்த்தான்.

''அப்ப நான் வரேம்மா....'' என்ற தங்கம் நழுவிக் கொண்டதும் உஷா கேட்டாள்: '' உங்களிடம் என் போட்டோ ஒன்று கொடுத்தேனே ?''

''ஆமாம்.''

''அது எங்கே ?''

'' ஏன்?''

''சொல்லுங்கள்.... எங்கே?''

''என் சூட்கேஸில் பத்திரமாக வைத்திருக்கிறேன்....'' என்றான் தயங்கியபடி.

''அப்படியானால் இது....?'' என்று தங்கம் கொடுத்த போட்டோவை நீட்டினாள் உஷா. மூர்த்தி அதை வெறித்துப் பார்க்கப் பார்க்க, அவன் முகம் சிறுத்துக் கொண்டு வந்தது. இரண்டு மூன்று நாட்களுக்குமுன் அதைக் கிழித்துக் குப்பையில் போட்டது அவன் நினைவுக்கு வந்தது. இப்போது அதுவே மீண்டும் உயிர் பெற்று வந்தது போல்—

''சாரி உஷா... நான்தான் ஏதோ ஞாபகத்தில் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டேன்.....''

உஷா பொங்கிப் போனாள். மூர்த்தியே அதைக் கிழித்து... அவளால் பொறுக்க முடியவில்லை.

'' இன்று என் போட்டோவைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டீர்கள். இந்தப் போட்டோவுக்கு ஆன கதிதானே எனக்கும்? சொல்லுங்கள்.....''

மூர்த்தி பதில் பேசவில்லை.

உஷா அவன் பதிலுக்காகக் காத்திருக்கவும் இல்லை.

பயிர்களுக்கு உரமாகும் குப்பை அவள் வாழ்க்கைக்கு வேலியாயிற்று !

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி



தமிழ் சிறுகதை, நாவல், இலக்கியங்களுக்கும் பத்திரிகை உலகுக்கும் அளப்பரிய பணி புரிந்துள்ள அமரர் ''கல்கி'' அவர்களின் பெயரால் இந்தச் சிறுகதைப் போட்டி நடக்கிறது.

கல்கி அவர்கள் அமரத்துவம் அடைந்து இருபதாண்டுகள் நிறைவு பெறும் இந்த ஆண்டில் கல்கி பத்திரிகையின் முப்பத்திநாலாம் ஆண்டு பிறக்கும் தருணத்தில் இந்தப் போட்டியின் முடிவுகள் வெளியாகும்.

முதல் பரிசுபெற்ற சிறுகதை ஆகஸ்டு 4ந் தேதி கல்கி இதழில் பிரசுரமாகும்.

முதல் பரிசு ரூ. 1000
இரண்டாம் பரிசு ரூ. 500

மூன்றும் பரிசு தலா ரூ. 250 வீதம் இரண்டு கதைகளுக்கு ரூ. 500

பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் இதர கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வழங்கப்படும்.

முடிவு தேதி 30 - 6 - 1974

கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் பில்லைகள் ஒட்டித் தன் முகவரி இட்ட உறைகள் வைத்து அனுப்புதல் வேண்டும். கடிதப் போக்குவரத்துக் கிடையாது.

சிறுகதைகள் கல்கியில் நாலு அல்லது ஐந்து பக்கங்களில் அடங்குவதாய் இருப்பது நலம்.

எழுத்துத் துறையில் புதிதாக அடியெடுத்து வைக்க விரும்புகிறவர் முதல் முதுபெரும் எழுத்தாளர் வரை அனைவரும் இதில் கலந்து கொண்டு தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்த வேண்டுகிறோம்:

ஆசிரியர் கல்கி
சேத்துப்பட்டு, சென்னை-31

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
டிஸைன்கள்
நேர்த்தியான மதிப்பு ....நறுவிசான பொலிவு ...
நல்லழகு ...
இயற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி
ஸென்ச்சுரி– 100% பருத்தித் துணிகள்
தி ஸென்ச்சுரி ஸ்பின். அண்டு. மான்பு. கம். லிமிடெட், பம்பாய்-400 025
CENTURY
ADROIT-CM-533 P-TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)